
www.tamilarangam.net

பெப்ரவரி 2006

# எரிமலை
# ERIMALAI



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எரிமலை

எரிமலை

## வெள்ளி மலர் 2006

புலம்பெயர் மண்ணில் வெளிவந்துகொண்டிருக்கும் எரிமலை சஞ்சிகை தனது இருபத்தைந்தாவது வருடத்தைக் கடக்க இருக்கின்றது. எரிமலை சஞ்சிகையின் சமூக, இலக்கிய, அரசியல், மானுடப் பணியை பிரக்ஞை பூர்வமாக உணர்ந்துகொண்டிருக்கும் மூத்த, இளைய படைப்பாளிகளிடமிருந்து படைப்புக்கள் வரவேற்கப்படுகின்றன. மொழிபெயர்ப்புக்களும், கட்டுரைகளும், கவிதைகளும், குறுநாவல்களும் வரவேற்கப்படுகின்றன.

## இலக்கியப் போட்டிகள்

எரிமலை சஞ்சிகை நிர்வாகத்தினர் சமகாலத்திலேயே கட்டுரை, கவிதை, சிறுகதை, குறுநாவல்களுக்கான போட்டிகளையும் நடாத்தத் தீர்மானித்திருக்கின்றனர்.

சர்வதேசஅளவில் படைப்பாளிகளை கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றனர்.

மேலும் ஓவியம், கார்ட்டூன், குறும்படப்பிரதி, நவீன நாடகப்பிரதி, பாடல்கள், புகைப்படங்கள் ஆகியனவும் போட்டிக்காக உலகஅளவில் வரவேற்கப்படுகின்றன.

எரிமலை சஞ்சிகையின் வெள்ளிவிழா மலரில் வெற்றிபெறும் படைப்புக்கள் பிரசுரமாக உள்ளன

படைப்புக்களை அனுப்புவோர் மூலப்பிரதிகளை வைத்துக்கொண்டு ஒளிநகலை மட்டும் அனுப்பி வைப்பது விரும்பத்தக்கது.

மின்னஞ்சல் மூலம் அனுப்புவோர்: **e.mail: info@erimalai.info**

தபால் மூலம் அனுப்புவோர்: **ERIMALAI, C/O T.C.C France,**
**341, Rue Des Pyrenees,**
**75020 Paris, FRANCE.**

போட்டிகளுக்கான முடிவுத்திகதி: 31.05.2006
போட்டிகளுக்கான பரிசில்கள் பின்னர் அறிவிக்கப்படும்.


தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எரிமலை

## உள்ளே...

05




அமெரிக்காவின் விரிவடையும் வியூகக் கரங்கள்!

07



வரலாறு பாதிவழி பகைமையை மறக்கவும்
பாதிவழி உறவைப் பலப்படுத்தவுமே வழி காட்டுகிறது







### கட்டுரைகள்


நாதன் 05
தா.பாலகணேசன் 24
தி.தவபாலன் 28
நிலாந்தன் 41
வாசுகன் 54
தாவித் 56
தா.விவேகானந்தன் 57


### உரை - எழுத்துவடிவம்


மு.திருநாவுக்கரசு 07
தளபதி கேணல் ரமேஸ் 34


### உண்மைப்பதிவு


மணலாறு விஜயன் 32


### நேர்காணல்


கிச்சான் திரைப்பட இயக்குனர்
- விமல்ராஜ் 12


### கவிதைகள்


மெலிஞ்சிமுத்தன் 22
ஞானக்குமாரன் 23
த.சரீஷ் 25
வாமகாந் கவிதைகள் 26
சாமி சுரேஸ் 47
மாரி. மகேந்திரன் 51



### சிறுகதைகள்


ஆதிலட்சுமி . சிவகுமார் 44
எம். அரியநாயகம் 48
பொன்.காந்தன் 52




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனையிலிருந்து..

பெரும் தொகையான எமது மக்கள் இன்னும் சிங்கள இராணுவ ஆக்கிர மிப்பின் கீழ் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழ்ந்த போதும், உணர்வாலும் இலட்சியத்தாலும் அவர்கள் எமது விடுதலை இலட்சியத்திற்குப் பின்னால் அணிதிரண்டு நிற்கிறார்கள். இந்தக் கள யதார்த்தத்தை, அரசியல் மெய்ம் மையைச் சிங்கள ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ள மறுப்பதுடன், எமது விடுதலை இயக்கத்தை ஒரு ‘பயங்கரவாதக் குழு’ என உலகத்திற்குச் சிறு மைப்படுத்திச் சித்திரித்துக்காட்ட முனைந்து வருகிறார்கள். இந்தப் பொய் யான பரப்புரைகளை நம்பி, உலக நாடுகள் சில எமது இயக்கத்தைப் பயங்கர வாதப் பட்டியலில் தொடர்ந்தும் வைத்திருப்பது எமக்கு வேதனையையும் ஏமாற்றத்தையும் தருகிறது.

2005 ஆம் ஆண்டு தமிழீழ மாவீரர்நாள் உரையிலிருந்து...

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு **வே.பிரபாகரன்** அவர்கள்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தலைவாசல்

## ஒட்டுக் குழுக்கள்

ஒட்டுக்குழு என்ற சொற்களில் பொதிந்துள்ள அர்த்தத்தை இன விடுதலைப்போரில் ஈடுபடும் நாம் நன்கு அறிவோம். தமது சொந்தக் காலில் நின்று தமது சொந்தநாட்டிற்கும் தமது இனத்திற்கும் நற்பணியாற்ற இயலாத இனத்துரோகிகள் என்று தமிழ் ஒட்டுக்குழுக்களை வகைப்படுத்துகிறோம். எமது விடுதலைப் போருக்கு எல்லா வகையிலும் இடையூறும் களங்கமும் ஏற்படுத்துவது இவர்களது முக்கிய இலக்காக இருக்கிறது. எமது விடுதலைப் போருக்கு எதிரான அரசுக்கும் இராணுவத்திற்கும் இவர்கள் எடுபிடிகளாகவும் துணைப்படையாகவும் பணியாற்றுகின்றனர். தமது எசமான விசுவாசத்தை மீண்டும் காட்டவேண்டிய நிர்ப்பந்தம் இவர்களைப் பீடித்துள்ளது. இதனால் எசமானின் எதிர்பார்ப்பை மிஞ்சிய வன்முறைகளையும் படுகொலைகளையும் இவர்கள் செய்யவேண்டி இருக்கிறது.

ஒட்டுக் குழுக்கள் ஆக்கிரமிப்பு இராணுவத்தின் துணைப்படையாகச் செயற்படுவதாக ஈழத் தமிழினம் நன்கு அறியும். எப்படி வாழ்ந்தாலும் ஊதியம் கிடைத்தால் போதும் என்பது ஒட்டுக்குழுக்களின் நிலைப்பாடு. அதே சமயத்தில் ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு ஒட்டுக்குழுக்களின் சேவை கட்டாயமாகத் தேவைப்படுகிறது. தமது கட்டுப்பாட்டில் வாழும் மக்கள் பற்றி இரகசியத் தகவல்களை ஒட்டுக் குழுக்கள் மூலம் இராணுவத்தினர் பயன்படுத்துகின்றனர். இதில் இராணுவத்திற்கு ஒரு மிகப்பெரிய அனுகூலம் கிடைக்கிறது. கொலையை நடத்தியபின் பழியை ஒட்டுக் குழுக்கள் மீது போடலாம் அல்லது எமக்கும் இதற்கும் ஒருவித தொடர்பும் இல்லை என்று விசாரணையின்போது கையை விரிக்கலாம். ஆனால் கொலையை நடத்திய ஒட்டுக்குழுவினர் இராணுவத்தின் பாதுகாப்பில், இராணுவ முகாமில் அல்லது இராணுவ முகாம் அருகாமையில் நிலைகொண்டுள்ளதை யாவரும் அறிவர்.

காட்டிக் கொடுப்பதுதான் ஒட்டுக்குழுவினரின் பிரதான பணி. தமது இனத்தை அழிக்கும் இராணுவத்தோடு இணைந்து செயற்பட இவர்களால் எப்படி முடிகிறதோ தெரியவில்லை. இராணுவம் இவர்களுக்கு வழங்கும் மதுவும், உணவும், ஊதியமும் நேர்மையாக வாழ வாக்கற்றோருக்குப் பெரும் வரப்பிரசாதமாக இருப்பது கண்கூடு . அத்தோடு மனித மனதில் மறைந்திருக்கும் வக்கிர புத்தியின் வெளிப்பாடாக இத்தகைய காட்டிக் கொடுப்பு இடம்பெறுகிறது. ஜேர்மன் நாசிப் படைகளால் யூத இனம் அழிக்கப்பட்டபோது ஒரு சில யூத இனத்தவர்கள் நாசிப்படைகளோடு இணைந்து செயற்பட்ட வரலாறு சில காலத்திற்குமுன் வெளிவந்துள்ளது. தலைமறைவாக வாழ்ந்த யூதர்கள் காட்டிக்கொடுக்கும் தமது இனத்திற்கும் அஞ்சி வாழ்ந்தனர். யூத மக்களின் மறைவிடங்களைப் பற்றிய தகவல்களை நாசிப்படைகளுடன் இணைந்து செயற்பட்ட யூத இனத்துரோகிகளே வழங்கினர். ஈழத் தமிழினத்திலும் இத்தகையோர் காணப்படுகின்றனர்.

ஒட்டுக் குழுக்களின் சேவைக்காலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. போர் நீடிக்கும்வரை அவர்களுக்கு ஒரு அந்தஸ்து இருக்கும் என்பதை விடுதலைப் போர் வரலாறு உணர்த்துகின்றன. போர் முடிந்ததும் அவர்கள் கைவிடப்படுகின்றனர்.

இந்தியப்படைகள் தமிழீழத் தாயகத்தை ஆக்கிரமித்தபோது அவர்களோடு இணைந்து செயற்பட்ட ஈ.பி.ஆர். எல்.எப். ஒட்டுக்குழுவின் பரிதாப வரலாற்றை நாம் மறக்கவில்லை.

தமது பயன்பாட்டையும் இலாபத்தையும் கருத்தில் கொண்ட தமிழ் ஒட்டுக்குழுக்கள் சிங்கள இராணுவத்துடன் இணைந்து நிரந்தர சமாதானம் ஏற்படுத்துவதைத் தடுத்து வருகின்றனர். ஆட்கடத்தல்கள், படுகொலைகள், வீடு புகுந்து கொள்ளையடித்தல், பாலியல் வன்முறையில் ஈடுபடுதல் போன்ற எண்ணற்ற தீய காரியங்களை தமிழ் ஒட்டுக்குழுக்கள் நாளாந்தம் செய்கின்றனர். இவர்களுடைய வாழ்நாட்கள் மிகக் குறுகியவை என்பதில் ஐயமில்லை.

எரிமலை
கலை பண்பாட்டு அரசியல் சமூக ஏடு
பெப்ரவரி 2006
இருபத்தைந்தாம் ஆண்டு
தாய்மண் வெளியீடு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, பிரான்ஸ்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேசியத் தலைவர் அவர்களை நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அவர்கள் சந்தித்தார்

25 ஜனவரி 2006

தேசியத் தலைவர் அவர்களை நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அவர்கள் 25.01.2006 அன்று சந்தித்திருந்தார். சந்திப்பின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் முனைவர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள்; யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை செம்மையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் - ஸ்ரீலங்கா அரசிற்கும் இடையிலான பேச்சு வார்த்தைகளை சுவிஸ் நாட்டின் ஜெனிவா நகரில் நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிவித்திருந்தார். அத்துடன் இந்தப் பேச்சுக்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை செம்மையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மாத்திரமே அமையும் எனவும் தமிழர் தாயகத்தில், இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் மக்கள் மீது படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறைகள் நிறுத்தப்பட்ட பின்னரே ஏனைய விடயங்கள் தொடர்பான பேச்சுக்கள் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# அமெரிக்காவின் விரிவடையும் வியூகக்கரங்கள்

■ நாதன்

Now, we understand the Tamil community here has legitimate grievances, and legitimate issues that ought to be addressed by the government. And there out to be a dialogue, a better dialogue, between the government and the Tamil community…

Remarks to the Press by Under Secretary for Political Affairs
R. NICHOLAS BURNS
Colombo, Sri Lanka
January 23, 2006



இலங்கைத் தீவின் இனச்சிக்கற் தணிப்புக்கான மேற்குலக முயற்சிகள் அச்சுறுத்தப்பட்டு மீள இலங்கைத்தீவு போரிற்குள் நுழைவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ள இன்றைய நிலையில் அமெரிக்கா தனது அரசியல் - இராஜதந்திரத் தலையீட்டை அதிகரிக்க முற்படுவது அவதானிக்கப்படுகின்றது. சிறீலங்காவுக்கான அமெரிக்கத் தூதுவர் ஜேவிரி யே லுன்சட் அவர்கள் கடந்த 09 சனவரி கொழும்பில் இடம்பெற்ற அமெரிக்க வணிகச் சம்மேளனத் தொழிலதிபர்களுடனான சந்திப்பின் போது புலிகளை அச்சுறுத்தி விடுத்த அறிக்கை பலரது ஆய்விற்குமுட்பட்டது. அதனை அனைத்துலக தமிழ்ச் சமூகம் கிளர்ந்தெழுந்து விமர்சித்த போது அவரால் மீள விடுக்கப்பட்ட விளக்கக் கடிதம் அமெரிக்காவின் வியூக நோக்கின் சில புள்ளிகளை பூடகமாகத் தெரிவித்தது. பின்னர், கொழும்புக்கு இருநாட்கள் உத்தியோகபூர்வப் பயணம் செய்த அமெரிக்க இராஜாங்க அமைச்சின் துணைச்செயலாளர் நிக்கலஸ் பேர்ன் அவர்களின் ஊடகவியலாளர் சந்திப்பு (23 சனவரி) இலங்கை தொடர்பிலான அமெரிக்காவின் கரிசனை, நிலைப்பாடு என்பன சார்ந்த கருத்துருவாக்கத்திற்கான இராஜதந்திர வாய்ப்பாகப் பாவிக்கப்பட்டது. இந்த அறிக்கைளை வெளிப்படையாகவே சிறீலங்கா அரசு சார்பானதாக, சிறீலங்கா அரசினை அமெரிக்கா ஆதரிப்பதான செய்திகளுடனேயே வெளியிடப்பட்டுள்ளது. சிறீலங்கா மக்கள் இனச்சிக்கல் தணிப்பை விரும்புகின்றனர் - இலங்கைத் தீவில் இடம்பெறும் வன்முறைகளைப் புலிகளே மேற்கொள்கின்றனர் - சிறீலங்கா அரசு அண்மைக்காலமாக மிகப் பொறுமை காக்கின்றது என்பன போன்ற பாராட்டுக்கள் வெளியாகியுள்ளன. இவை வெளிப்படையாகவே பொய்யான தகவல்களை உள்ளடக்கியிருந்தது. இதனால், கொழும்பு ஊடகங்களும், சிங்கள தேசியவாதிகளும் மிகக்கிளுகிளுப்புடன் இவற்றை வரவேற்றுக்கொண்டாடினர். கொழும்பில் சிங்கள தேசியவாத பிக்குகள் கட்சியான ஜாதிக கெல உறுமய அமெரிக்காவை வாழ்த்தும் அறிக்கை வெளியிட்டது. கொழும்பிற் சிங்களத் தேசியவாதிகளால் தமிழீழத் தேசியத் தலைவரை பின்லாடனுடன் ஒப்பிடும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. இது தமிழ் மக்களினை அதிருப்திக்குள்ளும், வேதனைக்குள்ளும் தள்ளும் நிலைப்பாடாக வெளிப்பட்டது. எனினும் அமெரிக்காவின் இந்த நிலைப்பாட்டினை புத்திபூர்வமாகவும் அரசியல் கண்ணுடனும் ஆராய வேண்டிய வரலாற்றுச் சூழல் தமிழீழ மக்களுக்குண்டு.

*****

அமெரிக்காவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் நிக்கலஸ் பேர்ன் அவர்கள் கொழும்பில் ஊடாகவியலாளர்களிடம் பேசும் போது இனச்சிக்கல் தொடர்பாக சில முக்கிய கருத்துக்களை வெளியிட்டார். இலங்கைத்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீவில் தமிழ் மக்களிற்கு நியாயபூர்வமான குறைபாடுகள் உள்ளன என்பதை இப்போது அமெரிக்கா அங்கீகரிக்கின்றது. புலிகள் அரசியல் இலக்கினை அடைவதற்கான வழியாகவே ஆயுதமேந்திய வன்முறையிலும், பயங்கரவாதத்திலும் ஈடுபடுகின்றனர். அமெரிக்கா இந்த வன்முறையை ஏற்காது. தமிழர்களின் குறைபாடுகள் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்க்கப்படல் வேண்டும். சிறீலங்காத் துணைப் படைகளின் வன்முறைகள் கண்டிக்கப்படல் வேண்டும். நிறுத்தப்படல் வேண்டும்.

தமிழ் மக்களிற்கு எதிராக இடம்பெறும் பெரும் மனிதஉரிமைகள் மீறல்கள் தொடர்பாக அவர் வெளியிட்ட கருத்தில் தாங்கள் அது பற்றிக் கரிசனை கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார். அவரின் ஊடக மாநாட்டின் பதிவு முழுமையாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டது. அல்-கெய்தா பயங்கரவாதத்திற்கும் புலிகளுக்கும் இடையே வித்தியாசமில்லை என சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர வாசிங்டனில் தெரிவித்த கருத்துக்கு கொழும்பில் பதிலளித்த அமெரிக்கா புலிகள் அரசியல் நிலையைப் பிரதிபலிப்பதாக பூடகமாக குறிப்பிட்டது. புலிகளிடமும், தமிழ் மக்களிடமும் ஒரு தார்மீக பலமுள்ள நியாயமுள்ளது என்பதை அங்கு அமெரிக்கா மறைமுகமாக ஒப்புக்கொண்டது.

இந்த அறிவிப்புக்கள் வெறுமனே போகின்ற போக்கில் வெளியிடப்பட்ட அமெரிக்க அறிவிப்புக்கள் அல்ல. தென்னாசியப் பிராந்தியத்தில், இந்தியக் கட்டுப்பாட்டில் உள்ளதாக இந்தியா பாவனை பண்ணும் ஒரு சிக்கலான விடயத்தில் அமெரிக்கா சில தெளிவான கருத்துக்களை முன்னிறுத்தும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

ஏன் அமெரிக்கா தனது பிரசன்னத்தை இத்தனை ஆரவாரத்துடன் செய்கின்றது?.

இந்தக் கேள்விக்கான விடையினை பல விதத்தில் பல ஆய்வாளர்கள் பார்க்கின்றனர்.

இலங்கைத்தீவின் குறிப்பாக திருகோணமலையின் கேந்திர முக்கியத்துவம் இன்றுள்ள அமெரிக்க வியூக விரிப்பில் மீள முக்கியத்துவம் பெற்றுள்ளதை அனைத்து ஆய்வாளர்களும் ஒப்புக்கொள்கின்றனர். மட்டக்களப்புக் குடாவும் இன்றுள்ள வியூகத் தேவைகளுக்குப் பயனுள்ளதாக அமைவதாக மேற்குலகு கருதுகின்றது என்கின்ற கூடுதல் தகவல்களும் உலா வர ஆரம்பித்துள்ளன. இது தொடர்பாக இலங்கை தொடர்பான அமெரிக்காவின் கொள்கை வழிகள் (U.S.Policy Towards Conflict in Sri Lanka) என்னும் தலைப்பில் அமெரிக்கா ஆய்வு நிறுவனமொன்று வெளியிட்ட அறிக்கையில் (www.foreignpolicysociety.org) அமெரிக்காக் கொள்கையானது இந்தியா தொடர்பிலும், தனது 5வது கடற்படைப் பிரிவுக்கு திருமலையில் மலிவான வலுவான நிலையமொன்றைப் பெறுவது என்பதிலும் தங்கியுள்ளது எனக் கூறப்பட்டது. அமெரிக்காவின் இந்த நலன்கள் இலங்கைத் தீவில் போராற்றதொரு சூழல் உருவாகுவதிலேயே உள்ளது. இந்தப் போரற்ற சூழலை பேணுவதற்குரிய முக்கிய தேவையான இனச்சிக்கற் தணிப்புள்ளது. இந்த தணிப்பு முயற்சிகளில் புலிகளும், சிறீலங்காவும் அமெரிக்கத் தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் செயற்படல் வேண்டும். எனினும் இனமுரண்பாடுகளின் தீவிரம் இந்தத் தணிப்பு முயற்சிகளில் மீளப் போர்ப் பதற்றத்தை ஏற்படுத்துகின்றது. இது முழு அளவிலான போராக மாறுவதற்கான வாய்ப்புக்கள் நிறையவேயுள்ளது என்பதை அமெரிக்கா உணர்கின்றது.

மறுபுறத்தே, இந்த போராற்ற சூழலைக் கையாண்டு பிற சர்வதேச - பிராந்திய சக்திகள் தமது செல்வாக்கு வலயத்தை இலங்கைத் தீவில் அதிகரிப்பதாக அமெரிக்காவும், மேற்குலகும் அச்சப்படுகின்றன என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கடந்த சனாதிபதி தேர்தலில் ஒரு தரப்புக்குச் சார்பாக பிற சக்தியொன்று தலையிடுவதாக தெரிவிக்கும் தீர்மானமொன்று அமெரிக்கக் காங்கிரஸிற்கு வந்து சென்றுள்ளது. கொழும்பு தி ஐலண்ட் ஏடு இதனை வெளியிட்டு பரபரப்பாக்கியது. இங்கே ஒருதரப்பு என்பது மகிந்த ராஜபக்சவும், பிறசக்தி என்பது சீனா எனவும் ஊடகங்கள் ஊகம் வெளியிட்டன. சுமார் 300 மில்லியன்கள் வரை இதற்காக சீனாவால் முதலீடு செய்யப்பட்டதாக கொழும்பில் செய்திகள் உலா வந்தன.

இந்தப்புறச் சூழலில், ரணில் விக்கிரமசிங்க ஊடாக மேற்குலகு தீட்டிய வியூக கணக்கை தமிழ் மக்களின் தேர்தற் கணக்கு தலைகீழாக்கியது. இதனால் மேற்குலகின் தலையீட்டை எதிர்க்கும் தளத்திற் செயற்படும் சக்திகளின் ஆதரவுடன் மகிந்த ஆட்சிக்கு வந்தார். மகிந்த ஆட்சிக்கு வந்தபின்னர் சீனாவின் சில முக்கிய பொருளாதாரத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டது. பிரதமர் ரட்ணசிறீ தலைமையிலான குழுவுக்கும் சீனாவுக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்புக்களும், சீனாவின் ஆயுதங்களைப் பெறுவதற்கான இராணுவக் குழு சீனா சென்றமையும் இடம் பெற்றது. சீனாவின் சின்கா (Xinha) செய்தி நிறுவனத்தின் செய்திகள் புலி எதிர்ப்பு, மகிந்த ஆதரவுக் குரலாகவே வெளியாகின்றன.

மறுபுறம், இந்தியாவும் இந்த மாற்றங்களால் அருட்டப்பட்டது. மெதுவாகத் தனது பிடியை இலங்கைத் தீவில் அது இறுக்கத் தொடங்கியது. கொழும்பில் உள்ள இந்தியத் தூதவர் நிருபாமா ராவ் மகிந்தவின் நெருங்கிய ஆலோசகராகவே செயற்படத் தொடங்குவதாக செய்திகள் பரவலாகின. எனினும், முற்று முழுதாக நம்பிக்கை வைக்க முடியாத மகிந்த கூட்டணியில் தன் முழு முட்டைகளையும் வைப்பது இந்தியாவுக்குக் கடினமானதாகவே இருந்தது. இந்தக் காலகட்டத்தில் தமிழகத்தில் எழுந்த ஈழத்தமிழர் ஆதரவுக் குரல்களை மத்திய அரசின் கெடுபிடி நிறுவனங்கள் கண்டு கொள்ளாது அனுமதிப்பது போன்றதொரு சூழல் காணப்பட்டது. அதாவது, ஆதரவுக் குரல்களை கடந்த காலங்கள் போன்று நெருக்கடி கொடுத்து தணிக்கும் பெரும் முயற்சிகள் எடுக்கப்படவில்லை.

இந்தப் பின்னணியில் அமெரிக்காவின் தேவைகள் வியூகம் ஆய்வாளர்களால் ஒப்பு நோக்கப்பட்டது. சிறீலங்காவின் புதிய தலைமையினால் தனது வியூக விரிப்பிலிருந்து சிறீலங்கா வெளியே செல்வதை விரும்பாத அமெரிக்கா தன் பிரசன்னத்தை சற்று அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. உயர்மட்ட அரசியல், இராணுவப்பயணங்கள் இடம்பெற்றன. வாசிங்டனுக்கு சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் அழைக்கப்பட்டமையும், கொழும்புக்கு பிரதி இராஜங்க அமைச்சர் விஜயம் செய்தமையும் தெளிவான செய்திகளைச் சொல்லியது. இதன் மூலம், கொழும்பினை நண்பனாகக் கூறிக் கொண்டு தனது வியூகத்தினுள் அதனை இருக்குமாறு அமெரிக்கா நெருக்குவதாக ஆய்வாளர்கள் நம்புகின்றனர். இந்த வியூகத்தினுள் சிறீலங்காவினை வைத்திருப்பதற்கான ஆயுதமே இனச்சிக்கலை ஒரு முக்கிய விடயமாக இனங்காட்டும் அதேவேளை புலிகள் வன்முறைகளைக் கைவிட வேண்டும் எனக் கண்டன அறிக்கை விடுவது எனக் கருதலாம். இன்று தமிழர்களுக்கு சிக்கல் உள்ளதாக அங்கீகரிப்பதன் மூலம் இன முரண்பாட்டினைக் களைவதற்கான தமிழ் மக்களின் நிலையை அமெரிக்கா நியாயப் படுத்துகின்றது. மறுபுறம், புலிகள் வன்முறைகளை நிறுத்திவிட்டு பேசித் தீர்க்குமாறு கூறுவதன் மூலம் அந்த நியாயத்திற்கான தீர்வை தான் காட்டும் வழியில் அடையுமாறு நிர்ப்பந்திக்கின்றது. இந்த நிலைப்பாடானது தென்னாசியப் பிராந்தியத்தின் அந்தச் சிறு தீவில் தனது கொள்கைவழிகளில் பலவற்றினை அமெரிக்கா திறந்தே வைத்துள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றது.


* * * *

அமெரிக்காவினதோ அல்லது பிற சக்திகளினதோ புலி எதிர்ப்பு அறிக்கைகளின் அடிநாதம் அவற்றின் வியூக நலன்களே என்பதை மேற்கூறிய பின்னணி தெளிவுபடுத்தும். தமிழர்களைப் பொறுத்தவரை தார்மீகவலு நிறைந்தவொரு போரினை நடாத்துவதால் அவர்கள் வலுவானவர்களாக இருக்கின்றனர். அந்த வலுவானது பிற சர்வதேச - பிராந்திய சக்திகளைத் தவிர்க்க முடியாதுவிதத்தில் தமிழர்களை ஏற்றுக் கொள்ள வைக்கும். புலிகள் அந்த வலுவின் முகமாக திகழ்கின்றனர்!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழீழத்தின் தலை சிறந்த அரசியல் ஆய்வாளர்களில் ஒருவராகப் பேசப்படும் மு.திருநாவுக்கரசு அவர்கள் அக்கினிக் கரங்கள் நூல் வெளியிட்டு விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரையை எமது வாசகர்களுக்காக எழுத்துருவாக்கி இங்கே தருகின்றோம்.

# வரலாறு பாதிவழி பகைமையை மறக்கவும் பாதிவழி உறவைப் பலப்படுத்தவுமே வழி காட்டுகிறது

பலரும் கூறுவதுபோல, எழுந்த மாத்திரத்தில் கூறுவதுபோல இந்தியாவிற்கு தமிழ் மக்களின் பக்கம் வெறுப்புக்குரிய விடயங்கள் தான் இன்று என்றில்லை. ஒரு வகையில் இன்றைய தமிழீழ விடுதலைப் போராட்டம் இந்தியாவின் நலன்களுக்குப் பாதி வழிவரை துணை புரியும் ஒரு போராட்டம் தான். இதனுடைய விசித்தரமான கணிப்பீடு ஒன்றை நாம் செய்தே ஆக வேண்டும். இன்று விடுதலைப்புலிகள் அடைந்திருக்கின்ற பலமானது இந்தியாவிற்கு அடிப்படையில் விருப்பமானது. ஆனால், ஒரு எல்லைக்கு மேல் போவதுதான் அவர்களுக்குப் பிரச்சனையானது. ஏனென்றால், அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக இலங்கையைப் பின்லாந்து மயப்படுத்த வேண்டும் என்று, இந்தியா எடுத்த முயற்சிகள் முற்றிலும் தோல்வியில் முடிந்தன.

இலங்கையில், இந்தியா தன் இராணுவத்தை இறக்கி, இலங்கை அரசை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கான வித்தைகளை பல செல்வாக்கு மண்டலமாக்குவதற்கான வித்தைகளை புரிந்த போதெல்லாம், இலங்கை அவற்றுக்குள் இருந்து தெறித்து வெளியே வருவதற்கான திட்டங்களையே வகுத்தது, இறுதியாக அவ்வாறு இந்தியாவை அது புறம் தள்ளியது.

இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறிய போது, இந்தியாவிற்கு இலங்கையை பின்லாந்து வகைப்படுத்த அல்லது மயப்படுத்த முடியும் என்ற விடயம் தோல்வியில் முடிந்தது. ஆனால் இப்பொழுதோ இலங்கை, இந்தியாவிடம் பின்லாந்து வகைப்படுத்திவிட்டது, அது எப்படியென்றால் விடுதலைப் புலிகளினுடைய வளர்ச்சி, போராட்டத்தினுடைய நிலவரம் இதன் பின்னணியில் இலங்கை அரசு வேறுயாரையும் விட இந்தியாவிடம் சரணாகதி அடைந்திருக்கிறது.

நேற்றைய ஆங்கிலப் பத்திரிகைகளெல்லாம் சொல்கின்றன, இலங்கைத் தலைவர்களை இந்தியா குழந்தைப்பிள்ளை போல் நடத்துகிறது என்று. அவமானகரமாக நடத்துகிறது என்றும் கூறுகிறார்கள். அந்த அளவுக்கு இலங்கை, இந்தியாவின் காலில் விழக்கூடிய நிலையை உருவாக்கியது. இந்தப் போராட்டத்தின் தவிர்க்க முடியாத விளைவாகும், இப்படி ஒரு போராட்டம் நிகழ்ந்திருக்காவிட்டால், விடுதலைப்புலிகள் பலமாக, இலங்கை அரசுக்கு அச்சுறுத்தலாக இல்லாது விட்டால், தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றிகரமான பாதையிற் போகிறது என்பதை இலங்கை அரசு ஏற்காது இருக்குமேயானால் இந்தியாவிடம் சரணடையமாட்டாது. இந்தியாவிடம் இலங்கை சரணடைய வேண்டிய அளவுக்கு போராட்டத்தின் பால் ஒரு பக்கம் தூக்கலாகிக்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காணப்படுகிறது. இப்படி இருக்கும் நிலை இந்தியாவுக்கு விருப்பம், ஏனென்றால் இலங்கை இந்தியாவின் செல்வாக்குக்கு உட்படுகிறது, ஆனால் அது விரும்பாத பகுதி என்னவென்றால் நாட்டைப் புலிகள் பிடித்துவிடுவார்களா என்பதுதான். எனவே தான் புலிகளின் வளர்ச்சி, போராட்டத்தின் வளர்ச்சி அவர்களுக்கு அவசியமானது. அதிற் தான் அவர்களுடைய அரசியல் அடித்தளம் தங்கியிருக்கிறது. அது அடுத்தகட்டமாக கூர்ப்படையக்கூடாது என்பதிற்தான் அவர்களுடைய பிரச்சனை இருக்கிறது. எனவே ஒரு பக்கம் போராட்டத்தின் வளர்ச்சி அவர்களுக்கு அவசியப்படுகிறது, மறு பக்கம் போராட்டத்தின் பேரால் தங்களுடைய ஸ்தாபிதமும் அவசியப்படுகிறது. இரண்டுக்கும் நடுவில் நாங்கள் நிற்கிறோம். இது தான் என்னுடைய முதலாவது பகுதி ஆனால் நாங்கள் இதை தர்க்க பூர்வமாகப் பார்ப்போம்.

இந்தியா எதை விரும்புகிறது, அது பாதி வழிகளில் போராட்டம் அவசியம் என கருதுகிறது. பாதி வழிவரை இந்தியாவுக்குப் போராட்டம், ஒரு வகையில் இந்தியாவினுடைய மானசீகமான நண்பர்களாக அவர்களுடைய மனதில் நாங்கள் இருக்கிறோம். நாங்கள் இல்லை என்றால், இலங்கை தான் நினைத்த பாட்டிற்கு ஓடிவிடும். தான் நினைத்த பாட்டிற்கு எந்த அமைப்புகளிடமும் தொடர்புகொள்ள முடியும். எங்களுடைய பிரச்சனைதான் அவர்களை அவ்வாறு போகவிடாமல் தவிர்த்துவைத்திருக்கிறது. அப்படியென்றால், இந்தப் போக்குவரைக்கும் அவர்களுக்கு நாங்கள் சாதகமானவர்கள், அது வரைக்கும் அவர்களுக்கு நாங்கள் நண்பர்கள். நாங்கள் நேருக்கு நேர் பேச்சு முரண்படலாம், கோபதாபமான வார்த்தைகளைப் பயன்படுத்தலாம், ஆனால் எங்களுடைய செயலில் அவர்களுக்கான நட்பு இருக்கிறது என்பதை அவர்களுடைய கொள்கை வகுப்பாளர்கள் ஒரு போதும் புரிந்து கொள்ளாத விடயம் அல்ல அது அவர்களிடம் தெளிவாகவே இருக்கும் ஒரு பக்கம். பிரச்சனை நீளமாகப் போய்விடக்கூடாது என்பது தான். அனால் அது சாத்தியம் அது எப்படியென்றால் ஒன்று கட்டவிழ்த்து விடப்பட்டால் அது அதற்கே உரிய தர்க்க பூர்வமான பாதையில் அது கட்டை அவிழ்த்து விடுபவரையும் மீறி அது ஓடத்தொடங்கி விடும். போராட்டம் கட்டவிழ்ந்து விட்டது. அது ஓடத்தொடங்கி விட்டது. போராட்டத்தை தங்களது விருப்பு வெறுப்புக்கு வெளியே கட்டுப்படுத்த முடியாதவாறு வரலாற்றினுடைய நிர்ப்பந்தங்கள் அமையுமே ஆனால் 'புதுடில்லி' அதனை விருப்பு வெறுப்பிற்கு அப்பால் ஏற்றே ஆக வேண்டும். இது தான் வரலாற்றின் நிர்ப்பந்தம் என்று சொல்கிறோம். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 'புதுடில்லி' முன் வைத்தது போல் இப்பொழுது எங்கள் பிரச்சனையை நினைக்க

**இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறிய போது, இந்தியாவிற்கு இலங்கையை பின்லாந்து வகைப்படுத்த அல்லது மயப்படுத்த முடியும் என்ற விடயம் தோல்வியில் முடிந்தது. ஆனால் இப்பொழுதோ இலங்கை, இந்தியாவிடம் பின்லாந்து வகைப்படுத்திவிட்டது, அது எப்படியென்றால் விடுதலைப் புலிகளினுடைய வளர்ச்சி, போராட்டத்தினுடைய நிலவரம் இதன் பின்னணியில் இலங்கை அரசு வேறுயாரையும் விட இந்தியாவிடம் சரணாகதி அடைந்திருக்கிறது.**

முடியாது. ஏனென்றால் தமிழகத்தில் உள்ள அரசியல் நிலைமை, அதனுடைய கொதிநிலை அவ்வாறு இருக்கிறது. அது மட்டும் அல்ல, இப்போது பதவிக்கு வந்திருப்பவர் புலிகளை அடக்குவதற்கு மட்டும் இந்தியாவை நாடக் கூடும் ஆனால் அதற்கு பின்பு தமிழ் மக்களை தோற்கடித்து விட்டால், அவர்கள் எந்தப்பக்கம் போவார்கள் என்பதற்கு உத்தரவாதமில்லை.

எங்கள் பலருக்கும் இப்போது 'சேது கால்வாய்' திட்டம் பற்றி பலவாறான தகவல்கள் தெரிவிக்கப்பட்டவர்களாக, அறிந்தவர்களாக இருக்கிறோம். 'சேதுகால்வா'யை இந்தியா தோண்டுவதற்கு மிக நீண்டகால கண்ணோட்டம் இருக்கிறது. அது நிச்சயமாக, சிங்கள அரசாங்கம் சார்புடையது. 100 வீதம் சிங்கள அரசாங்கச் சார்புடையது. அவர்கள் ஒருபோதும் இதனைப் பொருளாதார நோக்கத்திற்காக தோண்டுவார்கள் என்பது நிச்சயமாக இல்லை. இன்று இருக்கின்ற பர்மாவில் காணப்படுகின்ற இரண்டு தீவுகள். இந்த இரண்டு தீவுகளிலும் சீனக் கடற்படைத் தளங்கள் உள்ளன. அவை விருத்தியாகிக் கொண்டு வருகின்றன. இன்றிருப்பது போல் நாளை இருக்கப்போவதில்லை. ஒரு நெருக்கடி வளரும் பொழுது. இன்றைய நண்பன் நாளைய எதிரியாக முடியும். இன்றைய சக்கரவர்த்தி நாளைய கைதியாக முடியும். இது தான் அரசியல். இன்றைய கைதி நாளைய சக்கரவர்த்தியாக முடியும். இப்படி பைபிளின் பழைய ஏற்பாடு சொல்கிறது. எனவே இன்று காணப்படுகின்ற இன்றைய அரசியல் நிலையில் ராஜபக்ச இந்தியாவின் காலில் விழுவதற்கு தயாரானாலும் அவர் கூட தயாராக இருப்பது புலிகள் என்ற பிரதான காரணம் தான். அதற்கப்பால் அது தீர்க்கப்பட்டால், இந்து சமுத்திரத்தில் கால் வைத்திருக்கும் சீனாவோடு கொழும்பு தொடர்புகொள்ள மாட்டாது என்பதற்கில்லை. இன்று இருக்கின்ற இரண்டு கோப்போத்தீவுகளுக்கும் கொழும்பிற்கும் இடையில் இரண்டு துறைமுக உறவுகளை உருவாக்கி விட்டால் இந்தியாவினுடைய பெரிய கடற்பிராந்தியத்தை ரோந்து போவதற்குரிய பாதை கொழும்பிற்குள்ளால் சுத்திப் போவதற்கு இடைஞ்சல் விளைவிக்க சீன, கொழும்பு அரசுகளால் முடியும். இன்றிருக்கக் கூடிய காதல்கள், நேசங்கள் நாளை இருக்கப்போவதில்லை. எனவே அவற்றுக்குப் பதிலாக இன்றிருக்கக் கூடிய சேது கால்வாயைத் தோண்டுவதன் மூலம் தனது நில அடிப்படையான கப்பல் ரோந்துகளைப் புரிவதற்கு அது வழிவகுக்கும். பொருளாதார அர்த்தத்திற் பார்த்தால் பெரிய அளவு லாபம் இந்தியாவிற்கில்லை. அப்படிப் பார்த்தால் பொருளாதாரலாபம் ஓரளவானதாகத்தான் இருக்க முடியும். அதை விடவும் மிக மிக பிரமாண்டமான லாபம் என்னவென்று கேட்டால், இதன் பின்னணியில் இலங்கை - இந்தியாவை பேரம் பேசுகின்ற சக்தியை இல்லாது பண்ணுவது தான். இலங்கையும் சீனாவும் எதிர்காலத்தில் தொடர்புகொள்ளக் கூடிய சூழலில் அந்தப் பின்னணியில் இலங்கை, இந்திய அரசுக்கு எதிராக இந்திய அரசுடன் பேரம் பேசுகின்ற வல்லமை அதிகரித்துக் காணப்படுகிறது. இப்படி கால்வாயைத் தோண்டுவதன் மூலம் வரப்போகின்ற சில ஆண்டுகளின் பின் அது பூர்த்தியாவதன் மூலம் அத்தகைய பேரம் பேசுகின்ற சக்தியை இலங்கை இழந்துவிடும். எனவே இந்தியாவிற்கும் கொழும்பிற்கும் டெல்லிக்கும் கொழும்பிற்கும் இடையிலான கசப்பான உறவின் தளம் மிகவும் பலமானது. ஏனென்றால் 1971ஆம் ஆண்டு பாகிஸ்தான் வங்காளதேச பிரச்சனையின் போது, கொழும்பு பாகிஸ்தானுக்கு இராணுவம் தரித்துச் செல்லும் இடவசதியை செய்து கொடுத்தது. அது மட்டுமல்ல 1962ஆண்டு சீன இந்திய யுத்தத்தின் போது கொழும்பு நடு நிலைமை என்று சொல்லிக்கொண்டு சீனாவினுடைய வெற்றிக்கு மனப்பூர்வமான விருப்பத்தைக் கொண்டிருந்தது. இத்தகைய பின்னணியில் கொழும்பை விளங்குவதற்கு இந்தியாவிற்கு ஒரு போதும் கஸ்டம் இருக்காது. எனவே இப்படி ஒரு பின்னணியில் எங்களுக்குச் சாதகமான நிரந்திரமான நீண்ட கால முரண்பாடிருக்கக்கூடிய நிலையில் நியூ டெல்கியும், கொழும்பும் இருக்கின்றது என்ற ஒரு அடிப்படை உண்மை இருக்கின்றது. எங்களுக்கும் இந்தியாவிற்கும் இடையில் பாதி வழி உறவிருக்கின்றது. என்ற அடிப்படை உண்மை இருக்கின்றது. பாதி வழிப்பகைமை இருக்கின்றது என்ற (அதே அளவிற்கு) அடிப்படை உண்மை இருக்கின்றது. அந்தப் பாதி வழிப் பகை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மையை நாங்கள் கடக்க முடியும். அப்படி யென்றால் வரலாற்றின் நிர்ப்பந்தங்கள், வரலாற்றின் வளர்ச்சிப் போக்கு அதைத் தாண்டிச்செல்லும். அந்தந்தக் காலகட்டத் தில் ஏற்படக்கூடிய வரலாற்று நிர்பந்தங்கள் எதுவோ அது அந்த நிர்பந்தம் ஏற்படக் கூடிய காலம் எதுவென்று அடையாளம் காண்கின்றோமோ அது எமக்கு சாதகமான வாய்ப்பை தரவல்லதாகவே இருக்கும். இது ஒருபக்கம். ஆனபடியால் இந்தியா எங்க ளுக்கு எதிராக ஒரு காலம் புரிந்த இத்தகைய இராணுவ அட்டூழியங்கள் ஒரு புறம் இருக் கின்றது. கொழும்புக்கெல்லாம் அந்த அடிப் படை சிந்தனை இருக்கிறது. இனிமேலும் எதிராக அட்டூழியம் புரியக் கூடிய அடிப்படை விருப்பம் இருக்கிறது. வரலாற்றுப் பாதை இருக்கின்றது. இந்நூல்கள் எமது வரலாற் றுப் பாதையை செப்பனிடுவதற்கு உதவ வேண்டும். எங்கள் மத்தியில் எதிரிகளை அடையாளம் காணவும் நண்பன் எதுவரை யும் வருவான் எதுவரையும் வரமாட்டான் என்பதை விளங்கிக் கொள்ளவும் எங்க ளுக்கு இத்தகைய நூல்களின் வரவு அவசிய மானது. இதற்கு ஒரு உதாரணத்தை நான் உங்களிடம் கூறலாம். 1987ம் ஆண்டு முற் பகுதியென்று நினைக்கின்றேன், தியாகி திலீபன் அப்போது அரசியற் பிரிவுப் பொறுப் பாளராக இருந்த காலம். நவாலி மானிப்பாய் பக்கத்திலிருந்து சுவரொட்டி ஒட்டப்பட்டுக் கொண்டு வந்தன. இப்போது பாலியல் வல் லுறவு என்று சொல்லப்படும் சொல் அப் போது பிரயோகத்தில் இல்லை கற்பழிப்பு என்ற சொல்லுத்தான் அப்போது பிரயோகத் தில் இருந்தது. திலீபனால் மானிப்பாயில் வைத்து சுவரொட்டிகளெல்லாம் எழுதப்பட் டன. அந்த சுவரொட்டிகளில் இவ்வாறான வசனம் எழுதப்பட்டிருந்தது. 'இந்திய இரா ணுவம் இலங்கைக்கு வந்தால் தமிழ்ப் பெண்களை கற்பழிக்கும்.' இது தான் அந்த வாக்கியம். நவாலி, ஆனைக்கோட்டை அந் தப் பகுதியிலிருந்து வட்டுக்கோட்டை வரைக் கும் தொடர்ந்து. சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு விட்டன. அந்த வீதியால் வந்த பலரும் பல் கலைக்கழகம் வந்து சேர்ந்ததும் பல்கலைக் கழகப் பிரமுகர்களும் எல்லோரும் உட்பட அதிர்ச்சி அடைந்து அப்படி ஒன்று நடக்கா தென்று திலீபனைக் கூப்பிட்டு கதைத்துக் கொண்டிருந்தார்கள். திலீபனிடம் தமது அபிப்பிராயத்தை தெரிவித்தார்கள். திலீபனி டம் கதைப்பதற்கு முன்பு என்னுடன் கதைத் தார்கள். 'இதில் ஏதாவது உண்மை இருக்கி றதா ஏன் இப்படி பச்சைப்பொய்யை இந்தப் புலி செய்கிறது' எனக்கேட்டார்கள் 'நீங்கள் புலியைத்தான் கேட்க வேணும்' ஆனால் இது உண்மை என்றேன். சொல்லிவிட்டு அதற்கான ஒரு நூலை ஆதாரமான ஒரு வரலாற்று நூலை அவர்களிடம் காட்டினேன். அவர் அப்போது அந்த நூலைப் பார்த்து விட்டு அதில் ஒரு அத்தியாயத்தை மட்டும் பார்த்து விட்டு விறைத்துப் போயிருந்தார். ஆனால் அப்படி உண்மைகள் வெளிவரு

> அரசியலில் நாங்கள் எப்பொழுதுமே வெளிவளமாகப் பார்ப்பதற்குப் பதிலாக உள்வளமாகப் பார்க்கப் பழகிக்கொள்ள வேண்டும். சர்வதேச அரசியலை நான் கற்கவேண்டும் என்று விரும்பி எனக்கு வழிகாட்டிய கீதன் கதிர்காமர் சொல்லிய வசனம் இதுதான். "திரு அரசியலை உட்பக்கமாகப் பார். வெளிப்பக்கமாகப் பார்க்காதே!"

கின்ற அந்த எண்ணம் மனப்பாங்குகள் படிந் திருந்தால் மக்கள் மத்தியில் மிக இலகுவாக இருக்கும். இப்படியான நூல்கள் இத்தகைய இராணுவ அட்டூழியங்களை எல்லாம் பதிந்து எங்களுடைய குழந்தைகளின் மனங்களில் அடிப்படையான தீர்மானம் எடுப்பதற்கான பலங்களை கொடுத்திருப்போமேயானால், மக்கள் கையில் கருத்துக்களும் வரலாற்றின் பாதையும் போகுமேயானால் யாரும் மக் களை ஏமாற்ற முடியாது. எனவே எப்பொழு தும் நாங்கள் அதில் நம்பிக்கைவைக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். மக் களிடம் ஸ்திரமான கருத்து நிச்சயமாகப் பதிந்திருக்க வேண்டும் இல்லையேல் யாரா வது வருபவர் ஒருவரால் ஓரிரவில் கருத்துக் களைப் புரட்டி விட முடியும். இப்போது எங் கள் நிலையில் அடிப்படையான கருத்து வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் தமி ழீழ மக்களைப் பொறுத்த வரையில் அவர் கள் உலகத்தின் பல எதிரிகளுக்கு முகம் கொடுத்துவிட்டார்கள் எல்லா வெள்ளையும் கறுப்பும் சிகப்பும் அவர்களின் கண்கள் முன்பு பச்சையாகத் தெரிகின்றன. போதிக்க ஆசான் தேவையில்லாத அளவிற்கு அனுப வத் திரட்சியும் அதனுடைய பாடங்களும் உள்ளன. எந்த நாட்டை பற்றிக் கேட்டாலும், எந்த நாட்டினுடைய உதவியைப் பற்றி கேட்டாலும் அது அவர்கள் தங்களுக்காகத் தான் செய்கிறார்கள் என எங்களுடைய சாதா ரணமான பாலகர்கள் கூடச் சொல்வார்கள். ஆனால் அதில் எங்களுக்கு ஒரு சாதகமான பக்கம் இருக்கிறதா? எதுவரை இருக்கிறது? அவன் தனக்காகச் செய்வது எதுவரை? அதை எங்களுக்காக மாற்றுவது எதுவரை?

என்ற மதிப்பீடுதான் எங்களுடைய பிரச்ச னை. எனவே இந்த நூலில் சொல்லப் பட்டிருக்கின்ற இராணுவப்பிரச்சனையை இந்தப் பகுதியை நாம் சரிவர விளங்கிக் கொள்வோம். இரண்டாவது இந்த நூலோடு சம்பந்தப்பட்ட இந்திய இராணுவ காலகட் டத்தில் நிகழ்ந்த ஒரு பிரச்சனையை நாங்கள் பார்ப்போம்.

அரசியலில் நாங்கள் எப்பொழுதுமே வெளிவழமாகப் பார்ப்பதற்குப் பதிலாக உள்வழமாகப் பார்க்க பழகிக்கொள்ளவேண் டும். சர்வதேச அரசியலை நான் கற்கவேண் டும் என்று விரும்பி எனக்கு வழிகாட்டிய கீதன் கதிர்காமர் சொல்லிய வசனம் இது தான். 'திரு அரசியலை உள்பக்கமாகப்பார். வெளிப்பக்கமாகப் பார்க்காதே!' வெளிப்பக்க மாகப் பார்த்தால் பாராளுமன்றம் அல்லது நாடாளுமன்றம் ஜனாபதி, பிரதமர் இதுதான் எங்கட கண்களுக்குத் தெரியும். அவர்கள் பேசுகின்ற பேச்சு, அவர்கள் ரீ.வி.யிலும் றேடியோவிலும் ஆற்றுகின்ற உரை அவர் களுக்குக் கிடைக்கின்ற மரியாதைகள். அந்த வரவேற்புக்கள் தான். எங்கட கண்களுக்குத் தெரியும். அரசியலில் இவற்றை அரங்கத் துக்கு வருவதற்கு முன் அரங்குக்கு வரக் கூடிய உட்பக்கம் தான் எங்களுக்குத் தெரிய வேண்டும். அரசியலை விளைவுகளிலி ருந்தும் உள்பக்கத்துக்குள்ளாலும் நாங்கள் பார்க்கப்பழகுவது மிக அவசியமானது. நீண்ட காலம் அரசியல் பாரம்பரியம் இல் லாத மக்கள் நாங்கள். ஐந்து நூற்றாண்டு களுக்கு மேலாக அரசியல் பாரம்பரியத்தை மறந்து போன மக்கள் நாங்கள். எனவே உட் பக்கமாகப்பார்ப்பதற்கு நாங்கள் வலிந்து தான் பார்க்கவேண்டும். இப்பொழுது நாங் கள் தெளிவாகக் கடந்த மூன்று சகாப் தங்களுக்குள் அனுபவித்து எங்களுக்கு உட் பக்கமாக பார்க்கின்ற பார்வை வந்துவிட்டது. அதன் ஒரு பகுதியாக ஒரு விடயத்தை உள் பக்கமாகப் பார்ப்போம். 1989ம் ஆண்டு இந்திய இராணுவம் இலங்கையில் நின்ற காலகட்டத்தில் ஜே.வி.பியினுடைய மிகப் பிரதானமான பலமாக இருந்தது, அவர்கள் இலட்சக்கணக்கில் திரளக்கூடியதாக இருந் தது, அவர்களால் கொழும்பை ஸ்தம்பிக்க வைக்கக் கூடியதாக இருந்தது, தென்னிலங் கையில் அவர்கள் கோலோச்சக்கூடியதாக இருந்தது, எல்லாவற்றுக்கும் ஒரே ஒரு கார ணமே இருந்தது, இந்திய இராணுவ எதிர்ப்பு என்ற சித்தாந்தம். அவர்களுக்கு இருந்த ஏராளமான பொருளாதாரப் பிரச்சனைகள் எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பு பெற்றதாக இந்திய இராணுவம் என்ற பிரச்சனையை முன்வைத்தார்கள். இந்திய இராணுவத்துக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் இந்திய சார்புக் கடைகளை மூடுதல் இந்தியப் பண் டங்களை வாங்காமல் விடுவது. போன்ற கோசங்களை எல்லாம் முன்வைத்து. அவர் களுடைய அரசியல் பொருளாதாரப் பிரச் சனைகளுக்கெல்லாம் இந்தியாதான் காரண



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மென்ற ஒரு சித்தாந்தத்தை முன்வைத்தார்கள். அப்படி முன்வைத்திருக்கும் போது தான். ஜே.வி.பியினருக்கு அவர்களுடைய இனவாதத்திற்கு அவர்கள் எப்பொழுதுமே காலகட்டத்தில் காணப்படுகின்ற ஏதோ ஒரு சித்தாந்தத்தை தூக்கித் தங்களை வளர்க்க முற்பட்டார்கள். ஒரு காலம் நேரடியாகத் தமிழரை எதிர்த்தார்கள். பிறகு ஒரு காலம் இந்தியாவை எதிர்த்தார்கள். அந்த நேரத்தில் விடுதலைப் புலிகளுக்கும். சிங்கள அரசாங்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தை நிகழ்ந்து இந்திய இராணுவம் வெளியேறுதல் நிகழும் போது ஜே.வி.பியினருடைய போராடுவதற்கான சக்தி அப்படியே இல்லாமல் போய் விட்டது. அவர்கள் முழுமைப் படுத்தப்பட்ட அரசியல் பொருளாதார பிரச்சனைகளை முன்வைப்பதற்கு பதிலாக மிகக் குறுகிய அளவில் வரலாறு பூராகவும் வளர்ந்திருந்த ஒரு இந்திய எதிர்ப்புவாதத்தை மட்டும் முன்வைத்து அவர்களுடைய அமைப்பை உருவாக்கினார்கள். அப்போது இந்திய இராணுவம் வெளியேறியதும் ஜே.வி.பியினருக்கு ஒரு வழியும் இல்லாமற் போய் விட்டது. அந்த நடையிற்தான் தவிச்ச முயலை அடிப்பது போல பிரேமதாசாவின் இராணுவத்தினர் ஒன்றே கால் லட்சத்திற்கும் அதிகமான ஜே.வி.பியினரைக் கொன்று குவிப்பது சாத்தியப்பட்டது. அதில் ஜே.வி.பியினர் தோல்விஅடைந்து போயினர்.

இந்திய இராணுவத்தின் வரவு ஜே.வி.பியினரின் வளர்ச்சி. இந்திய இராணுவத்தின் வெளியேற்றம் ஜே.வி.பியினரின் அழிவு. இது வரலாற்றின் பிரதானமான கட்டம். எந்த இந்தியாவை எதிர்த்தார்களோ அந்த இந்திய இராணுவம் போனதுதான் அவர்கள் தோற்றதற்குக் காரணம். இந்திய இராணுவம் நின்றிருந்தால் அவர்கள் அரசைக் கைப்பற்றியிருப்பார்கள். வளர்ச்சியில் ஒரு எதிர் முரண்பாடிருந்தது.

சரி, இப்பொழுது பார்ப்போம்

ஜே.வி.பியினுடைய இப்போதைய சித்தாந்தம் புலிகளால் தூக்கி ரணில் விக்கிரமசிங்காவுக்கு அடிப்பது. இது அவர்களுடைய தேர்தல் யுக்தியாக இருந்தது. புலிகள் ரணிலோடு இல்லையென்றதும் புலிகளையும் ரணிலையும் முடிச்சுப்போட்டு ஒன்றாக வைத்திருந்ததன் மூலமே ஒரு சித்தாந்தத்தை கட்டிவைத்திருந்தார்கள். புலிஎதிர்ப்பு மட்டும் தான் அவர்களுடைய அரசியற் பலமாக இருந்தது. புலி எதிர்ப்பு என்பது ரணில் விக்கிரமசிங்காவோடு இணைக்கப்பட்டதாக இருந்தது. அந்த இணைப்பைத்தான் அவர்கள் சித்தாந்தம் ஆக்கினார்கள். இப்பொழுது அவர்கள் ஒரு சித்தாந்தமும் இல்லாமல் போய்விட்டார்கள். மீண்டும் அவர்கள் நெருக்கடிக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். யு.என்.பியையும் புலிகளையும் முடிச்சுபோட்ட நிலை இல்லாமல் போய்விட்டது. அப்படியென்றால் இப்பொழுது ஜே.வி.பியினரை தோற்கடித்

**நாங்கள் தான் இறைமையின் காவலர்கள். எங்களுடைய இறைமையில் தான் சிங்களவர்களுடைய இறைமை இருக்கிறது. எங்களுடைய நலன்களில்தான் சிங்களமக்களின் நலன்கள் இருக்கிறது எங்களை ஒடுக்குவதற்கு எந்த அந்நியர்களிடம் போனாலும் தங்களை ஒடுக்குவதற்கான முடிவாகும்.**

திருப்பது யார்? இப்பொழுதும் புலிகள் தான் அவர்களை தோற்கடித்திருக்கிறார்கள். 1989ம் ஆண்டு - தோற்கடிக்கப்படுவதன் பிரதான மூலகர்த்தாக்களாக இருந்ததும் புலிகள் தான். இப்போது ஜே.வி.பியினர் ஒரு அரசியற் பலமின்றி ஒரு கோசம் இன்றி இருப்பதற்கு அல்லது இப்போதைய ஜனாதிபதியினுடனான பிடிதளர்ந்து போவதற்கு காரணமாக இருப்பதும் புலிகள்தான்.

சரி, ஒரு சுவாரசியமான உண்மையைச் சொல்கிறேன்: எந்த இனவாதத்தை அவர்கள் எடுத்தார்களோ அதனுடைய தவிர்க்கமுடியாத தர்க்கபூர்வமான வெளிப்பாடு அப்படியே பூமாராங்காய் திரும்பி வருகிறது. இது தான் வரலாற்றுக்குள்ள பலம். இனவாதத்தின் வெளிப்பாடாக ஜே.வி.பியினர் அழிகிறார்கள். இன்னுமொரு வகையாகச் சொன்னால் இனவாதத்தின் வெளிப்பாடாக ஜே.வி.பியினர் அதன் பெயரில் சிங்கள மக்கள் அழிகிறார்கள். சிங்கள இளைஞர்கள் கொல்லப்படுகிறார்கள். எனவே, அவர்களுடைய இனவாதத்திற்கு அவர்களே பலியாகிறார்கள் என்பது தான் இறுதிவாதம். ஜே.வி.பியினர் கொல்லப்படுகிறார்கள் என்று சொல்வதை விடவும் இனவாதத்தால்அரசியல் நடத்த முற்பட்டதன் விளைவு. இனவாதத்தையே அரசியற் சித்தாந்தமாக கொண்டதன் விளைவு. தமிழ்மக்களுக்கெதிராக கட்டவிழ்த்து விடுகின்ற ஒவ்வொன்றினதும் தர்க்கபூர்வமான வளர்ச்சி அவர்களை திருப்பிப் போய்தாக்குகிறது. ஏவியவனை போய் பேய் மீண்டும் தாக்குவது போல. அப்படியே திருப்பித்தாக்குகிறது. இப்படிப் பார்ப்போமானால் இந்த இனவாதத்தால் கொல்லப்பட்ட தமிழ்மக்களின் தொகையைவிடவும். மிகவும் வினோதமானது. கொல்லப்பட்ட சிங்களவர்கள் பலமடங்கு கூடுதலானது. இப்படி ஒரு அரசியற் தர்க்கம் இருக்கிறது. இந்தத் தர்க்கம் எமக்கு முக்கியமானது. இப்படித் தர்க்கத்துக்குள்ளால் தமிழீழத்துக்கான வாய்ப்பு இருக்கிறதென்றே நான் நிச்சயமாக நம்புகிறேன். எங்களிடம் காணப்படுகின்ற சாத் தொகையின் அளவைவிடவும், எங்களிடம் காணப்படுகின்ற ஏனைய அனைத்துப்பலங்களை விடவும், எங்களின் போராட்டத்தினால் வளர்ந்து செல்லுகின்ற தர்க்கத்தின் வளர்ச்சி இருக்கிறதே ஒடுக்குமுறையினால் ஏற்படுகின்ற தர்க்கத்தின் வளர்ச்சி இருக்கிறதே அது தமிழீழத்துக்கு வழிவகைசெய்து கொடுக்கக் கூடியது.

இனிக் கடைசியாகப் பார்ப்போம்.

எவ்வளவு வினோதமான உண்மையென்று. இறைமை உள்ள இலங்கை அரசு - புலிகளிடம் ஒப்பந்தம் செய்வதன் மூலம் இறைமை அழிகிறது, புலிக்கு இறைமையை விட்டுக்கொடுக்கிறார்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்போம். ஏகாதிபத்தியப் பொருளாதாரத்தைத் எதிர்ப்போம் என்ற மகிந்த சிந்தனையின் கீழ் 22 கட்சிகள் சேர்ந்து ஒப்பந்தம் செய்துகொண்டு ஒப்பந்தத்தை முன்வைத்தார்கள். மேலைத்தேய தேசத்தை எதிர்ப்போம். அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்ப்போம் என்றெல்லாம் கோசம் எழுப்பினார்கள்.

சரி, இன்னும் ஒரு இலகுவான உதாரணம். தமிழர்களை ஒடுக்கும் ஒவ்வொரு கணமும் அவர்கள் ஏகாதிபத்தியங்களிடமும் அந்நிய சக்திகளிடமும் அடிபணிந்தே ஆக வேண்டும். தம் இறைமையை இழந்தே ஆக வேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு தமிழர்களை ஒடுக்குகிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு இறைமையை இழந்தே ஆக வேண்டும். இதுதான் கொடூரமான கட்டம். தமிழ் மக்களோடு இறைமையைப் பங்கு போட தயார் இல்லையென்றால். தமிழ் மக்களோடு இறைமையைப் பங்குபோடாததன் விளைவு, இறைமையைப் பகிர்ந்து கொள்ளாதன் விளைவு அந்நிய சக்திகளிடம் தன் இறைமையைக் கொண்டுபோய்க் காலில் போட்டு அவர்களின் காலின் கீழ் இறைமையை மிதிப்பதற்கு இலங்கைத் தீவை விட்டிருக்கிறது. இனியும் அதுவே கதி, ஏனென்றால் தமிழ் மக்களுக்குரிய இறைமையைத் தமிழ்மக்களின் இறைமையோடு இலங்கைத்தீவில் எங்களுக்கு இறைமை இருக்கிறது. இலங்கை அரசவையிலும் எங்களுக்கு பங்கிருக்கிறது. எங்களுக்குரிய பங்கை ஏற்கத்தவறும் போது எதிரிகளிடம் எங்களுடைய பங்கை அழிப்பதற்காக சரணடையும் போது. பெரிய பலவான்களிடம் தஞ்சமடையும் போது அவர்கள் அதைப் பெற்று கொள்ளுவார்கள். எங்களுக்கு ஏற்றுக்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்ள வேண்டிய உரிமையை விடவும் எதிரிகளிடம் அவர்கள் தாரைவார்த்துக் கொடுக்கின்ற இறைமையின் அளவு பெரிது எங்களுக்கு உரிய அளவையே ஏற்றுக் கொண்டால் எதிரிகளிடம் எமது இறை மையை தாரைவார்த்துக்கொடுக்கவேண் டியதில்லை. எனவே இறைமையை பற்றி யார் பேசமுடியும்? ராஜபக்ஸ பேசமுடியுமா? ஜே.வி.பியினர் பேசமுடியுமா? நாங்கள் மட்டும்தான் பேசமுடியும். தமிழீழப் போராளி கள் மட்டும் தான் பேசமுடியும். தமிழீழ மக்கள் மட்டும் தான் பேசமுடியும். நாங்கள் தான் இலங்கையின் இறைமையைப் பற்றி பேசக்கூடிய அடிப்படைத் தகுதியான வாழ்க் கைமுறையைக் கொண்டிருக்கிறோம். ஒடுக் கப்படும் எங்களிடம் தான் அதற்கான தர்ம மும் சத்தியமும் இருக்கிறது. இது தான் எங்களுடைய பிரச்சனை. எனவே இறைமை பற்றிப் பேசுபவன் இறைமை விற்கின்றான். இந்தக் கோசத்தின் கீழ்த்தான் நாங்கள் எல்லா அரசியலையும் எடைபோட வேண் டும், இறைமைக்காகப் போராடுபவன் இறை மையைக் கொண்டே புதைகுழியில் புதைக் கின்றான் இதுதான் தர்க்கம். தமிழர்களுக் கெதிராக இனவாதத்தை கட்டவிழ்த்து விடு கிறவன் அந்த இனவாதத்தாலேயே தான் அழிந்துபோகிறான். தமிழர்களுக்கெதிரா கவே இந்தியாவிடம் சரணடைந்தவன் இந்தி யாவின் பிடிக்குள் சிக்குண்டிருக்கிறான். அதாவது இப்பொழுது ராஜபக்ஸ இந்தியா விடம் சென்று பெற்றுவந்ததெல்லாம் முழு அளவில் இந்திய வர்க்கங்களோடு அந்த சந்திப்பில் தான் அவர் கையோங்கியிருக் கிறது. பத்திரிகைகள் அப்படி எழுதி உள் ளன, தாராளமாக எழுதுகின்றன. வெறும் கையுடன் திரும்பினார் என்று.

அதுமட்டுமல்ல ஆறுமுகம் தொண்டமா னுக்கும் ராஜபக்ஸாவுக்கும் இடையில் உற வில் கசப்பு ஏற்பட்டபோது இந்திய உயர்ஸ் தானிகர் தன்னுடைய இந்திய இல்லத்தில் இருந்துகொண்டு ராஜபக்ஸாவுக்கு அழைப்பு விடுத்து ஒரு சாதாரணமான அதாவது அவருடைய வார்த்தையில் சொன் னால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இறை மையுள்ள ஒரு ஜனாதிபதி ஒரு சாதாரண மான உத்தியோகத்தராக இருக்கக்கூடிய ஒரு உயர்ஸ்தானிகரின் அழைப்புக்கு விழுந் தடிச்சு ஒரு சந்திப்பைக் கொடுத்து, சந்திப்பு நிகழ்ந்துள்ளது என்றால் இறைமை எங்கே போயிருக்கின்றது எனவே நாங்கள் தான் இறைமையின் காவலர்கள். எங்களுடைய இறைமையில் தான் சிங்களவர்களுடைய இறைமை இருக்கிறது. எங்களுடைய நலன் களில்தான் சிங்களமக்களின் நலன்கள் இருக்கிறது எங்களை ஒடுக்குவதற்கு எந்த அந்நியர்களிடம் போனாலும் தங்களை ஒடுக்குவதற்கான முடிவாகும்.



## செஞ்சோலையின் புதிய வளாகம் தேசியத் தலைவர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது




16 ஜனவரி 2006

செஞ்சோலையின் புதிய இல்ல வளாகத்தைத் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் திறந்து வைத்து சிறப் பித்துள்ளார். இந்நிகழ்வில் தள பதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதன்போது பொதுச்சுடரினை ஏற்றிவைத்த தேசியத் தலைவர் அவர்கள் வளாகத்தின் பெயர்ப் பலகையினைத் திரை நீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து செஞ்சோலை மாணவர்களின் கண்காட்சியும் கலைநிகழ்வுக ளும் இடம்பெற்றன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "எங்களுடைய பிரச்சினைகள் சர்வதேச மட்டத்திற்கு கொண்டு போகப்படவேண்டும்"

**கிச்சான் திரைப்பட இயக்குனர் விமலராஜ் உடனான கலந்துரையாடல்**



விமலராஜ் - கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளரான அவர் சிறந்த திரைப்பட இயக்குனர்களின் வரிசையில் வந்து சேரக் கூடிய பாதையில் காலடி எடுத்து வைத்திருக்கிறார். எங்களுக்கானதொரு சினிமாவை அவர் நிச்சயமாக கண்டடைந்து விடக்கூடிய உழைப்பும், தேடலும், ஆர்வமும் அவரிடம் நிறையவே இருக்கிறது.

இயல்பு, எளிமை, நேர்த்தியான சித்தரிப்பு, சிக்கலில்லாத கதை சொல்லும் முறை போன்ற பல்வேறு விடயங்களால் அவர் பெரிதும் மெச்சப்படுகின்றார்.

கலைஞர்கள் மிகுந்த நம்பிக்கையுடன் அவரது கைகளை இறுகப்பற்றிக் கொண்டு வாழ்த்தியதை நேரில் கண்டேன். லண்டனில் நடைபெற்ற குறுந்திரைப்பட விழாவில் கலந்து கொண்டு மூன்று விருதுகளை கிச்சான் திரைப்படத்திற்காக மட்டும் பெற்றிருக்கிறார்.

'கிச்சான்' கல்விக்காக ஏங்கும் ஒருவனாக எம்முன் வருகிறான். யுத்தம் எவ்வாறு வாழ்வின் அம்சங்களை சிதைத்திருக்கிறது என்பதை கலைத்துவம் குறையாமல் காண்பிக்கிறது. கிச்சான் குறுந்திரைப்படம் பல பாதைகளை திறந்து கொண்டு எங்களுக்கானதொரு சினிமாவிற்கான முதல் சிறந்த அடையாளங்களுள் ஒன்றாகவும் பேசப்படுகின்ற நாளில் - இருளும் ஒளியும் குழைந்திருந்த மாலைப்பொழுதில் தெருவோர ஒளி வெளிச்சத்தில் அவரைக் காண்கின்றோம். அந்தக் கணமே அவரை அழைத்துச்சென்றோம். பாலகணேசனும், மாணி நாகேசும், பராவும், முரளியும் அவருடன் கலந்து கொண்டு உரையாடினர். இந்த கலந்துரையாடல் புலிகளின் குரல் வானொலிக்காகவும் எரிமலை சஞ்சிகைக்காகவும் அவருடன் நிகழ்த்தப்பட்டது. அந்த உரையாடலையே இங்கே பதிவுசெய்து எழுத்துருவில் தருகின்றோம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்னென்ன நோக்கத்தின் அடிப்படையில் இந்த ஐரோப்பிய சுற்றுப்பயணத்தை மேற்கொண்டீர்கள்?

**உண்மையில், எனது நோக்கத்தின் முதற் காரணம் எனது குறும்படம் லண்டனில் நடைபெற்ற குறுந்திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. அதிற் கலந்து கொள்வதற்காக வந்திருந்தேன். எனது நோக்கம் என்னவென்றால், சர்வதேச அளவில் தமிழர்கள் பரந்திருக்கிறார்கள்; ஆனால், அவர்களுடனான தொடர்புகள் மிகக் குறைவாக இருக்கின்றது; சர்வதேச ரீதியில் எங்களுடைய படைப்புக்களை கொண்டு போவதாக இருந்தால், எங்களுடைய ஈழத் தமிழர்களுடைய உதவியும், தேவையும் மிக அதிகமாக இருந்தது. ஈழத்தமிழர்கள் பரந்த அளவில் பல செயற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நாங்களும் ஈழத்தில் செயற்பட்டுக்கொண்டிருக்கிறோம்; எனவே தனித்து இயங்குவதைவிட, எல்லோரும் சேர்ந்து இயங்குவதற்கான செயற்தளம் ஒன்று தேவைப்படுகின்றது.**

சர்வதேசக் குறுந்திரைப்பட விழாவில் உங்களுடைய திரைப்படம் குறித்து எவ்வாறான கருத்துக்கள் விமர்சனங்கள் தங்களுக்குக் கிடைத்திருக்கின்றன?

**வெளி உலகில், எனது படத்தை எப்படிப் பார்க்கிறார்கள் என்ற அனுபவம் எனக்குக் கிடைத்தது. முதல் கிடைத்த அனுபவம் எதுவென்றால்; கிச்சான் படத்தோடு இணைத்து 13 திரைப்படங்கள் திரையிடப்பட்டன. அதற்கு முன்னரே அமைப்பினர் சிறந்த படத்திற்கான ஒன்பது விருதுகளைக் கொடுத்திருந்தார்கள். அதற்கான தெரிவு இடம் பெற்று விட்டது. மக்கள் பார்வைக்காக அந்தத் திரைப்படங்களை திரையிட்டார்கள். திரையிட்டு முடிந்த பின்னர் பார்வையாளர்களிடம் கேட்டார்கள்; "உங்கள் பார்வையில் எது சிறந்த படம், நீங்கள் உங்களுடைய அபிப்பிராயங்களைச் சொல்லுங்கள்" என நான் நினைக்கிறேன், அந்த மண்டபத்தில் 300க்கும் அதிகமான பார்வையாளர்கள் இருந்திருக்க வேண்டும். எல்லோருமே எழுந்து நின்று சொன்னார்கள்; எங்களுக்குக் கிச்சான் தான் பிடித்தது என்று அந்தளவுக்கு அது எல்லோருடைய மனதிலுமே தாக்கத்தை விளைவித்திருக்கிறது என்பது எனக்கு மிக சந்தோசமாக இருந்தது. 9 விருதுகளில் 3 விருதுகள் கிச்சானுக்கு கிடைத்திருந்தது. சிறந்த படத்திற்கான விருது, சிறந்த நடிகருக்கான விருது, சிறந்த பிரதிக்கான விருது. அடுக்கடுக்காக 3 விருதுகளை எனக்குத் தந்திருந்தார்கள்.**

**அது குறித்து எனக்குத் தெரிந்திருக்கவில்லை; விருது வாங்குவதுதான் எனது நோக்கமும் இல்லை. படம் திரையிட்டிருக்கிறார்கள்; இதற்கூடாக வெளிநாட்டில் ஒரு தொடர்பை ஏற்படுத்துவதுதான் நோக்கமாக இருந்தது. இதை ஒரு காரணமாக வைத்தும் நான் வெளி நாட்டுக்கு வந்திருந்தேன். வெளிநாட்டவர்கள் பலர் கலந்து கொண்டு உங்களுடைய படங்கள் எங்களுடைய மக்களுக்கு அங்குள்ள பிரச்சனைகளைத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றது. எங்களுடைய பிள்ளைகளுக்கு உங்களுடைய பிரச்சனைகளைச் சொல்லியிருக்கிறீர்கள் என்றார்கள். அவர்களுடைய கருத்துக்கள் மூலம் கிச்சான் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை உணரக்கூடியதாக இருந்தது.**

எங்களுக்கானதொரு சினிமா உருவாக வேண்டும் என்ற கனவு உங்களிடம் இருக்கிறது; அந்தக் கனவுக்கு வலுச்சேர்க்கும் முகமாக இந்த விருதுகளும், கருத்துக்களும் ஒரு உற்சாகத்தைத் தருகின்றனவா?

**உண்மையில், விருதுகளைவிட எங்களுடைய பிரச்சனைகள் சர்வதேச மட்டத்திற்கு கொண்டு போகப்படவேண்டும். சர்வதேச மட்டத்திற்கு கொண்டுபோகப்படவேண்டுமானால், எங்களுக்கான ஒரு சினிமா மொழி என்பது உருவாக்கப்படவேண்டும். எங்களிட்ட பார்த்தீர்களானால் எங்களிட்ட சினிமா இல்லை; சினிமா நோக்கிப் பயணங்கள் தான் மேற்கொண்டிருக்கிறோமே ஒழிய, ஈழத்தமிழர்களுக்கான சினிமா அடையாளம் என்பது எங்களுக்குக் கிடையாது.**

**சர்வதேச மட்டத்துக்குள் சினிமா ஏற்படுத்துகிற தாக்கம் என்பது மிக அதிகம், அந்ததாக்கங்களை எமது பிரச்சனைகளை மிக இலகுவாகச் சொல்ல முடியும். அதற்கான மிகப்பெரிய பயணத்தை மேற்கொள்ள வேண்டிய தேவை எமக்கிருக்கிறது. அதனால் 'நெய்தல் தரிசன ஊடகம்' என்ற அமைப்பையும் ஏற்படுத்தி எங்களுக்கான சினிமாவை நாங்களே உருவாக்குவோம் என்ற நோக்கில் ஆரம்பித்திருக்கிறோம்; அதனுடைய முதல் முயற்சிதான் இந்தக் கிச்சான்.**

இந்தப் போராட்டம் பலவிதமான சிக்கல்களை உருவாக்கியிருக்கிறது; நீங்கள் கல்வியை மட்டும் அடிநாதமாகக் கொண்டு, கல்விக்காக ஏங்குகின்ற ஒரு சிறுவனை எங்களுக்கு வெளிக்காட்டி இருக்கிறீர்கள்; கல்வியை தெரிவு செய்தமைக்கு எதாவது காரணம் இருக்கிறதா?

**ஒரு உதாரணம் தான் இந்தக் கிச்சான்; 20வருடங்களுக்கு மேலாக யுத்தம் ஏற்படுத்திய அனர்த்தம் மிக ஏராளம். எங்களுடைய உறவுகள், உடமைகள், சிந்தனைகள் எல்லாமே அழிந்திருக்கு. அனர்த்தம் என்பது சொல்ல முடியாத, மீள முடியாத, மீளக் கட்டமைக்க முடியாத பல விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது இந்த யுத்தம்.**

**என்னுடைய நோக்கம் என்னவென்றால், இந்த 20வருட கால அனர்த்தத்தை வெளிக்கொண்டுவருவது, நாங்கள் சொல்லியாக வேண்டும் வெளியுலகத்திற்கு, அதனுடைய ஒரு அம்சம் தான் இந்தக்கல்வி, எங்களுடைய பொருளாதாரம், எங்கட உறவுகள், எங்களுடைய சிந்தனைகள், எங்களுடைய கனவுகள், எங்களுடைய லட்சியங்கள் எல்லாமே அழிக்கப்பட்டிருக்கின்றன. சில விசயங்களைக் கட்டி எழுப்ப முடியும், சில விசயங்களைக் கட்டி எழுப்பவே முடியாது. சிலதை மீட்டுக்கொண்டுவரவே முடியாது. நான் என்னுடைய அப்பாவைச் சண்டையில் இழந்து விட்டேன். என்றால் அதை மீட்கவே முடியாது. இழந்தது இழந்ததுதான். இழப்புக்கள் என்பது ஈடுசெய்யப்பட முடியாதது. இந்த எத்தனையோ இழப்புக்களை நாங்கள் வெளி உலகத்துக்கு சொல்ல வேண்டும். அதை சினிமாவில் மிக எளிதாகச்சொல்ல முடியும். சினிமா என்பது (Power Full media) சக்தி வாய்ந்த ஊடகம். ஆயிரம் கிச்சான்கள் இருக்கிறார்கள்; ஆயிரம் கிச்சான்களுக்கான பிரச்சனைகள் வேறு வேறானது. ஆனால் கிச்சான் ஒரு உதாரணம் மட்டுமே.**

கிச்சான் திரைப்படம் உங்களுடைய முதலாவது திரைப்படம் என நீங்கள் கூறுகிறீர்கள்; ஆனால், இந்தக் கிச்சான் திரைப்படத்தை நாங்கள் பார்க்கும் போது, ஒரு குறுந் திரைப்படத்திற்கான கட்டமைப்பைக் கொண்ட குறும் திரைப்படமாக எங்களால் பார்க்க முடிகிறது. இது எப்படி உங்களுக்கு சாத்தியமாயிற்று? திரைப்படத் துறையிலே நீண்ட அனுபவம் கொண்டவர்களால் கூட முடிவதில்லை; ஆனால், நீங்கள் முதல் திரைப்படத்திலேயே சிறந்த படத்தை தந்திருக்கிறீர்கள்; அதன் சாத்தியப்பாடு, பின்னணி எவை என்று கூறுவீர்களா?

**எங்களுக்கான சினிமா என்பது இல்லை, முழுக்க முழுக்க தமிழ் நாட்டினுடைய பொழுதுபோக்கு சினிமாவைப் பார்த்து பழக்கப்பட்டு அதுக்குள்ளேயே உழன்று கொண்டிருக்கின்ற நேரத்தில எங்களுடைய தொலைக்காட்சிகளைப் பார்த்தால் நீண்ட தொடர் நாடகங்களின் (seriel) ஆதிக்கமும் தாக்கமும் இருக்கிறது. எங்களுடைய பிரச்சனைகள் ஏகப்பட்டவையாக இருக்கின்றன. ஏன் எங்களுடைய பிரச்சனைகளை இந்த மீடியாக்களோ தொலைக்காட்சிகளோ பேசவில்லை என்றதொரு ஆதங்கம் மிக அதிகமாக எனக்குள் இருந்தது. நான் நாடகத்துறையில பயின்று அதற்குள்ளேயே பயிற்றுவிக்கப்பட்டேன். நாடகத்தை விட சினிமாவின் தேவையை அதிகம் உணர்கிறேன். தேவை இருக்கிறது அது கொண்டு போகின்ற தளம் பெரிதாக இருக்கிறது.**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அது மிக எளிதாக எல்லா மட்டங்களிலும் போகும் என்ற நம்பிக்கையிருக்கிறது. எனக்குள் ஒரு ஆதங்கம், அதை நோக்கிய தேடல், இந்த மீடியாவுக்கூடாக எங்களுடைய பிரச்சனையை மிக எளிதாகச் சொல்லலாம். சினிமாவை நோக்கிய தேடல் பல காலங்களாக இருந்தது. மற்றது எங்களுடைய நிறைய குறும்படங்களைப் பார்த்துவிட்டு அதை ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் போதாமையை நான் உணர்ந்தேன். மிக எளிதாகச் சொல்கிறார்கள். இன்னும் நல்லா தாக்கமா சொல்லலாமே என எனக்குள் ஏற்பட்ட உணர்வுகள் எல்லாம் கொஞ்ச நேரத்துக்குள்ள சக்தி மிக்கதாய் கொடுக்க வேண்டும் என்பதற்காக நான் உழைக்கத் தொடங்கினேன். இந்த பிரதியை எவ்வளவு பலமாகவும் தாக்கமாகவும் எழுத முடியுமோ அந்தளவிற்கு முயன்றேன். எவ்வளவு விரைவாக நகர்த்தலாம் என்பது குறித்து சிந்தித்தேன். ஒவ்வொரு சின்னச் சின்ன காட்சிகளுக்குள்ளும் எப்படி கதை சொல்லலாம் என்பதைத் தேடித் தேடிக் கண்டுபிடித்து, கதையை கட்டமைத்து உருவாக்கினேன். அதற்கு எனக்குள் இருந்த ஒரு ஆதங்கமும் தேடலுமே அதைக் கொண்டுவரவைத்தது.

இந்த திரைப்படம் ஒரு சிறுவர் தினவிழாவில் தொடங்குகிறது சிறுவர் தினத்தில் சிறுவர்களின் உரிமைகளுக்காக பேசுகிறவர்கள் போலித்தனமானவர்களாக இருக்கிறார்கள்; அவர்கள் சிறுவர்களின் உரிமைகளுக்காக பாடுபடுவதாக நடித்துக்கொண்டிருக்கிறார்கள்; என்பதை எவ்வாறு முன்வைக்க வருகிறீர்கள்?

ஒரு உயர் கல்வி நிறுவத்துக்குள்ளே, அங்குள்ள ஒரு சிற்றுண்டிச் சாலையில் கிச்சான் வேலை செய்கிறான். எல்லாரும் பெரிய கல்வித்திட்டம், படிப்புப்பற்றிப் பேசிக்கொண்டு இருந்துகொண்டிருக்க அங்கு ஒருத்தன் கல்வியே இல்லாமல் நிற்கிறான் இது நான் கண்ணுக்கு முன்னால பார்த்த விசயம். அப்ப அந்த நேரத்தில் கூட என்னாலையும் ஒன்றும் செய்ய முடியவில்லையே என்ற ஆதங்கம். அப்ப எனக்குள்ளேயே நாங்கள் பேசுகிறம், கதைக்கிறம், எல்லாம் செய்யிறம் இங்கால பார்த்தா சிறுவர்களுக்காக வேலை செய்கிற நிறுவனங்கள் அதிகம். வெளிநாட்டு நிறுவனங்கள், என்.ஜி.ஓக்கள் மிகப்பெரிய அளவிலான விளம்பரங்கள் செயல்திட்டங்கள் என்று போகின்றன. ஆனால், எங்க போனாலும் எந்த கொட்டலுக்குப் போனாலும், எந்த கடைக்குப்போனாலும் பல்கலைக்கழகத்துக்குப் போனாலும் கன்ரினுக்குப் போனாலும் எங்க பார்த்தாலும் சின்னப் பிள்ளைகளைப் பார்க்கலாம்.

எந்த வேலைத் தளத்திற்குப் போனாலும் எங்கட பிள்ளைகளைப் பார்க்கலாம். இந்த ஒவ்வொரு பிள்ளைகளுக்குப்பின்னாலும் ஆயிரம் சோகக் கதைகளைப் பார்க்கலாம். அங்கதான் விளங்குகிறது நாங்கள் பேசுகிறது ஒன்று செயற்பாடு வேறொன்று. யதார்த்தம் வேறொன்று; - யதீந்திரா அந்தப் படத்தைப் பார்த்துவிட்டுச் சொன்னார் திருகோணமலையில் பல என்.ஜி.ஓக்கள் உள்ள ஒரு தெருவிற்கு முன்னாலுள்ள கூல்பாரில் வந்து ஒரு சிறு பையன் வேலை செய்து கொண்டிருக்கிறான். அவங்களிட்ட வந்து தான் இந்த வெள்ளைக்காரர்கள் ஐஸ்கிரீம் சாப்பிட்டு விட்டு அவனுடைய தலையிலிருந்த அமெரிக்கச் சின்னம் பொறிக்கப்பட்ட தொப்பியை அவனுக்குப் போட்டிற்று முதுகில் தட்டிவிட்டு போகிறார்; இதில் அதனுடைய யதார்த்தத்தைப் பாருங்கள், எவ்வளவு எதிர்மறையானது என்பதைப் பாருங்கள்; வெளி உலகத்தில் நாங்கள் சிறுவர்களைப் போருக்கு அனுப்புகிறோம், சேர்க்கிறோம் என்று பேசுகின்ற என்.ஜி.ஓக்கள் எல்லாம் வந்து எந்த அளவிற்கு குழந்தைகளினுடைய கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபடுகிறார்கள் என்றால் மிகப்பெரிய கேள்விக் குறிதான் மிஞ்சி நிற்கிறது. இந்த ஒரு முரண்பாடு இருக்கிறது. அந்தப் படத்தினுடைய தொடக்கமே இந்த முரண்பாடாகத் தான் இருக்கிறது. இந்தப் படம் ஒரு முரண்பாட்டோடு தான் தொடங்குகிறது.

'கிச்சான்' என்ற சிறுவன் பாத்திரத்தினூடாக ஒட்டுமொத்தமாக சமூகத்தைக் கேள்விக்குள்ளாக்குகிறீர்கள். அவன் ஒவ்வொன்றையும் கேள்விக்குள்ளாக்குகிறான்; இங்கே ஒரு குறும்படம் என்கிறபொழுது, அவன் கேள்விக்குள்ளாக்குவதன் மூலம் சிந்தனைகளை விரியச் செய்கிறான்; பல பக்கங்களுக்கு விரியச் செய்து, எங்களுக்குள் ஒரு அதிர்வை ஏற்படுத்துகிறான், குறும்படம் என்பது ஒற்றைப் பரிமாணத்தில் விடயத்தை மிக இறுக்கமாக, நறுக்காகச் சொல்லி விடுவதுதான் என்ற கருத்து இருக்கிறது. குறும்படம் குறித்ததான தங்கள் கருத்தை அறியலாமா?

பல குறும்படங்கள் என்னைச் சிந்திக்கச் செய்தது. ஒற்றைப் பரிமாணத்தில் கதையை நகர்த்திச் செல்வதிலுள்ள போதாமையை நான் உணர்ந்தேன். கன படங்கள் பார்க்கும் பொழுது இன்னும் தாக்கமாக கொடுத்திருக்கலாமே என்ற உணர்வுதான் எனக்குள் ஏற்பட்டது. என்னை யோசிக்கச் செய்தது. உண்மையில் வந்து, அவனுடைய பின்னணியிற் பார்த்தால் யுத்தம் மட்டும் காரணம் அல்ல அவனை ப்புரிஞ்சு கொள்ள முடியாத கல்விச் சூழல், அவனுடைய பொருளாதாரப் பின்னணி, பெற்றோர்களுடைய இழப்புக்கள், அப்ப அவனிட்ட வேலைவாங்குகிற முதலாளிகளின் உணர்வுகள், இதெல்லாமே வந்து எந்தளவிற்கு அவனுடைய கல்வி மீதான ஆசையை, வளர்ச்சியை எந்தளவிற்கு பாதிக்கச் செய்து, மழுங்கச் செய்து, அவனுடைய வளர்ச்சி எந்தளவிற்கு அமுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அவன் காரணமே இல்லை எந்தவொரு செயலுக்கும் அவன் பொறுப்புக் கிடையாது.

சமூகத்தில் பல தளங்கள் வந்து அவனை எப்படி மாற்றம் அடையச் செய்திருக்கிறது என்று சொன்னால் நாங்கள் கிச்சானை கம்பசில் மட்டுமே காட்டிக்கொண்டு போயிருக்கலாம். அங்கையே காட்டிற்று அங்கையே விடயத்தை முடித்திருக்கலாம். பின்னணி பற்றி பேசியிருக்கத் தேவையில்லை. அவனுடைய பள்ளிக்கூடச் சூழல் பற்றி பேசியிருக்கத் தேவை இல்லை. இதெல்லாம் பேசக்குள்ளதான் நாங்கள் சிந்திக்கத் தொடங்குகிறோம். உண்மையில் வந்து, இப்படியான குழந்தைகளை அடுத்த கட்டம் நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்றால், இந்தக் குழந்தைகள் சம்பந்தப்பட்ட எல்லோருமே சிந்திக்க வேண்டுமென்றால், எல்லாப் பக்கத்திலும் பார்வையை கண்டிப்பாக செலுத்திக் காட்ட வேண்டும். அந்தத் தளத்தில யுத்தம் பற்றியும், பள்ளிக்கூடச் சூழல் பற்றியும், பல்கலைக்கழச் சூழல் பற்றியும் எல்லாம் காட்டப்படும் படியான அல்லது எல்லோரும் அதுக்குள்ள வந்து சிந்திக்கக்கூடிய சம்பவங்களைக் கொண்டுவர வேண்டிய தேவை இருந்தது.

இது ஒரு கலைத்துவமிக்க படம் இதில் பிரச்சாரத் தொனி இல்லாமல் எவ்வாறு இயங்க முடிந்தது ?

கலை என்பதில் பிரச்சாரம் இருக்கக்கூடாது என்பதை ஆணித்தரமாக நம்புபவன். பிரச்சாரம் என்றால் அது முழுக்க முழுக்க அரசியல்தான். அது அரசியல் தன்மையாகப் பார்க்கப்படுகின்ற விடயமாகப் போய்விடும். ஒரு பக்கச் சார்பாக மட்டும் தான் பார்க்கப்படும். எல்லோராலும் பார்க்கப்படாமல் போய்விடும். கலையில் எங்கேயும் பிரச்சாரம் இருக்கக்கூடாது. இருந்தால் கொள்கையை ஆதரிப்பவர்கள் மட்டுமே அதைப்பார்ப்பார்கள். அதற்கு எதிரான விமர்சனங்களைத் தான் முன்வைப்பார்கள்; அந்த இடத்தில் அந்த படைப்பு தோல்வியை அடைவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகவே இருக்கும். சொல்ல வேண்டிய விடயத்தை நாங்கள் கலைத்துவமாகச் சொன்னால் அது எல்லா மட்டங்களுக்கும் போய்ச் சேரும். இலகுவாக அது போகும். எல்லா மட்டத்தினராலும் ரசிக்கப்படும். எல்லா மட்டத்தினரும் சிந்திக்கத் தொடங்குவார்கள். பிரச்சாரமாக இருந்தால் அது நல்ல படமாக இருந்தாலும் போகவே மாட்டாது. எல்லா இடமும் கொண்டு செல்லப்பட வேண்டும். அதன் பின்னால் வந்துதான் அது பற்றிய விமர்சனங்கள் எதுவாக இருந்தாலும். கலை என்ற ரீதியில் பிரச்சாரமாக இருந்தால் ஒரு பகுதியினரோடு முடங்கிவிடக் கூடிய வாய்ப்பிருக்கிறது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிச்சான் படத்தைச் செய்து முடித்தபோது, சிலவேளைகளில் இதைவிடவும் சிறப்பாகச் செய்திருக்கமுடியுமா அல்லது சில மாற்றங்களை செய்திருக்க முடியுமா என படம் குறித்தான் மீள்பார்வைக்கு நீங்கள் போகும்போது சில எண்ணங்கள் உங்களுக்குள் ஏற்பட்டிருக்கலாம் அப்படி இந்த கிச்சான் குறுந்திரைப்படம் குறித்து உங்களுக்கு ஏற்பட்ட மன உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்களா?

ஏற்கனவே திட்டமிட்டு கடினமான உழைப்பிற்குப் பின்தான் நான் செய்திருந்தேன். அந்தவகையில் எதிர்பார்ப்பிற்கு ஏற்றவகையில் இருந்தாலும் சில இடங்களில் இப்படிச் செய்திருக்கலாம் என்ற சில உணர்வுகள் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அதில் முக்கியமான விடயம் முதலாவது சீனில் கிறிக்கட் ஸ்ரம்பு ஊன்றப்படுகின்ற அந்த காட்சி, பின்னர் அந்த கிறிக்கற் காட்சியிலேயே முடிகின்ற விடயம் பின்னராக நான் யோசித்தேன் கிறிக்கற் வந்து எங்கட கலாச்சாரம் இல்லை; எங்களுடைய மக்களுக்கான விளையாட்டாக, கிட்டிப்புள்ளு விளையாட்டை எடுத்து நான் அழகாகக் காட்டியிருக்கலாம் என்ற உணர்வை கொண்டிருந்தேன். எங்களுடைய பிரச்சனைகளைப் பேசும் பொழுது தனி நபருமேகிடையாது. இந்த கிச்சானுடைய அடித்தளமே வந்து யுத்தம் தான். அதையும் விட வறுமைக்கூடாகப்படித்து வந்தவர்கள் என்பதில் அதிகமானோர் உள்ளனர். எல்லோருமே வந்து மேல்தட்டு வர்க்கத்தில் இருந்து படித்து முன்னுக்கு வந்தவர்கள் இல்லை, பெரியஇடத்திலுள்ளவர்கள் கூட கிச்சானுடைய அந்த சோத்துப் பசையினால் பாடக்கொப்பியை ஒட்டிவருகின்ற உணர்வுவோடும், தலையாட்டிகள் காட்டிக் கொடுப்பதன் மூலமாக இராணுவம் கைது செய்து கொண்டு போகின்றமையுமான பற்பல சம்பவங்கள் பலருடைய நிகழ்வுகளில் இருந்து பெற்றமைதான். உணர்வுகள் பாதிக்கப்பட்ட சிலர் படித்து கொண்டிருக்கும் பொழுது வேலை செய்து கொண்டிருந்தவர்கள். பள்ளிக்கூடச்சூழலில் அதிகமாகத்தாக்கப் பட்டவர்கள். எல்லாவற்றையும் விட அந்த யுத்தம் தான் யுத்தம் ஏற்படுத்திய தாக்கம் எல்லோருக்குள்ளும் இருக்கிறது. எல்லோருடைய மனதிலும் இலகுவாகப்போகக் கூடியது. அவர்களுடைய மனதில் பல ஆண்டுகளுக்குப் பின்னால் பல நினைவுகளுக்குப் பின்னால் அவர்களை இழுத்துச் செல்லுகின்ற வலிமை அங்கு இருக்கிறது.

"என்னுடைய நோக்கம் என்னவென்றால் இந்த 20வருட கால அனர்த்தத்தை வெளிக்கொண்டுவருவது. நாங்கள் சொல்லியாக வேண்டும் வெளியுலகத்திற்கு. அதனுடைய ஒரு அம்சம் தான் இந்தக்கல்வி, எங்களுடைய பொருளாதாரம், எங்கட உறவுகள், எங்களுடைய சிந்தனைகள், எங்களுடைய கனவுகள், எங்களுடைய லட்சியங்கள் எல்லாமே அழிக்கப்பட்டிருக்கின்றன. சில விசயங்களைக் கட்டி எழுப்ப முடியும் சில விசயங்களைக் கட்டி எழுப்பவே முடியாது. சிலதை மீட்டுக்கொண்டுவரவே முடியாது. நான் என்னுடைய அப்பாவை சண்டையில் இழந்து விட்டேன் என்றால் அதை மீட்கவே முடியாது. இழந்தது இழந்ததுதான். இழப்புக்கள் என்பது ஈடுசெய்யப்பட முடியாதது."



எங்களுடைய சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்கின்ற எங்களுடைய விளையாட்டுக்கள் மூலமாகக் காட்டுவது என்பது ஒரு தேவையாக இருக்கின்றது அதையும் அழகாகக் காட்டியிருக்க முடியும்.

இந்த கிச்சான் படத்திலுள்ள வெற்றிக்கான முக்கியமான காரணம் பார்ப்பவர்களைக் கடந்த காலத்திற்கு இழுத்துச் செல்கிறது, கடந்த காலத்திலிருந்து எங்களுடைய உணர்வுகளைத் தட்டிக் கொண்டு வரும் போது அது எங்களுக்குள்ளேயே ஒரு உணர்வை ஏற்படுத்தும். இது இன்று தமிழகத் திரைப்படங்களில் கூட சேரனுடைய படங்களில் கூட இத்தகைய உணர்வுகளின் பிரதிபலிப்புக்களைக் காணலாம்.

கண்டிப்பாக, இது எல்லா மக்களினுடைய மனதைத் தொடும் என ஏற்கனவே எனக்குத் தெரிந்திருந்தது. ஏன் என்று சொன்னால் யுத்தம் ஏற்படுத்திய அனர்த்தத்திற்குள் வந்து எங்கட ஈழத்தமிழர்கள் யாருமே தப்பியிருக்கவில்லை. யுத்தத்தின் கொடூரத்தில் சிக்காத எந்தவொரு உங்களுடைய எண்ணக்கருக்கள், கருத்துக்கள், கற்பனைகளைக் கொண்டு வருவதற்கு ஒளிப்பதிவாளருடைய உதவி நிறைய இருக்கிறது. கிச்சான் குறுந்திரைப்படத்தில் அந்த கமரா வேலை செய்த முறைகள், அந்தக் கந்தோருக்குள்ள கமரா கூட ஒரு படபடப்போட மின்விசிறிகளில் சுற்றிச் சுழன்று அப்படியே போய் அந்த மேடையில இதே மாதிரி குழந்தைப் பிள்ளைகளைப் பற்றிக் கதைக்கிற அந்த மேடையில போய் நின்று, பின் பக்கமாக போய் இன்னும் ஒரு கிச்சானிட்ட காட்டுகிற மாதிரி போகிறது. அப்படிப்பட்ட அந்த அற்புதமான ஒளிப்பதிவாளருக்கும் உங்களுக்குமான உறவுகள் எப்படி இருந்தது?

உண்மையில் வந்து, அவர் ஒரு நல்ல கமராக்காரன். அவர் ஒரு சிங்களக் கலைஞர். எனக்கு துப்பரவா சிங்களம் தெரியாது; அவருக்கு துப்பரவாக தமிழ் தெரியாது; இரண்டு பேருக்குமான மீடியேற்றர் ஒருவர் எங்களுக்கு நடுவில் இருந்து வேலைசெய்தார். என்னுடைய உணர்வுகள் எல்லாத்தையுமே அவரால சரியாச் சொல்ல முடியாமல் இருந்தது;



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"எங்களுடைய மக்கள், விடுதலை நோக்கி ஏங்கிக் கொண்டிருக்கின்ற சமூகம். அடுத்தகட்ட வளர்ச்சியை எதிர் நோக்கி நடந்து கொண்டிருக்கின்ற சமூகம், எங்களுடைய பிரச்சனைகளை மறந்து எங்களுடைய சமூகம் தனது விழிப்புணர்வை மறந்து எங்களுடைய அடுத்த கட்ட வளர்ச்சியைப்பற்றி சிந்திக்கவிடாமல் எங்கட மக்களை முழுக்க முழுக்க பொழுது போக்குக்குள்ள அமத்திக் கொண்டிருக்கின்ற வேலையை இன்று இந்த மெகா சீரியல் செய்கிறது; இது கண்டிப்பாக மாற்றப்பட வேண்டும்"

இடையில இருந்த மீடியேற்றராலையும் சொல்லி விளக்க முடியாது நான் உணர்கின்ற வார்த்தைகளுக்குள் கொண்டுவராதது கடினம்; அவருடைய எல்லா சொட்சுகளைப் பார்த்தால் ஏற்கனவே நான் எழுதிய சொட்ஸ் தான். என்ன சீனுக்கு என்ன சொட்ஸ் என அந்த சொட்சைத்தான் அவர் அங்கே பயன்படுத்தினார். உண்மையில் எனக்குத் தேவைப்பட்டது என்னவென்றால் என்னுடைய கதையைச் சொல்வதற்கு இன்னும் கிறியேட்டிவாக வந்து சொட்சுக்களை கொண்டுவரலாம் என்பதற்கு ஒரு கமராமேனின் தேவையிருந்தது. அவர் ஒளி அமைப்புக்களையும் மிக லாவகமாக செய்திருந்தார். அது ஒரு நல்ல பயனாக இருந்தது. ஆனால் உண்மையில் எனக்கு நிறைய போதாமை இருந்தது. இறுதிக் காட்சிகளைப் பார்த்தீர்களானால் விளையாட மாணவர்கள் கூப்பிடுவார்கள். இவன் கன்ரினுக்கு சாமான் வாங்கிக் கொண்டு போய்க்கொண்டிருப்பான் இவனால் விளையாட முடியாது. ஆனால், அவனுடைய மனசு விளையாடுறத்துக்காக ஓடும். இந்தக் காட்சியை எடுப்பதற்கு சரியாக கஸ்டப்பட்டம். நான் சொல்லுற விடயத்தை மீடியேற்றரால் சொல்ல முடியவில்லை. உணர்வை வந்து படமாக்குவதற்கு சரியா கஸ்டப்பட்டோம். அதில எடிட்டிங் மிஸ்ரேக் இருக்கு. அது படமாக்கப்பட்ட, ஒளிப்பதிவு செய்யப்பட்ட முறையில் பிழையிருக்கு. ஆயினும் அவர் நல்ல கமராமென் நிறைய ஒத்துழைத்தார். மொழிப்பிரச்சனை இருக்கிறது. அதனால் இன்னும் எங்களுக்குள் உறவு காணாமலிருந்தது. அது சில போதாமைகளை ஏற்படுத்திற்று.

நல்ல உரையாடல்கள் அமைக்கப்பட்டிருக்கிறது; செயற்கையாக இல்லாமல் மிக இயல்பான முறையில் உரையாடல் அமைக்கப்பட்டிருக்கிறது; நீங்கள் முன் கூட்டியே திரைக் கதையை எழுதிப் போட்டு திரும்ப அந்த உரையாடலை தனித்து எழுதினீர்களா?

நான் ஸ்கிரிப்ட் எழுதும் பொழுதே எல்லா உரையாடல்களையும் எழுதி விட்டேன். முதலாவதாக நான் வந்து ஸ்கிரிப்ட் எழுதுகிறது. அது வெறும் கதையும் உரையாடலும் தான். பிறகுதான் அதற்கான திரைக் கதை எழுதுகிறனான். ஸ்கிறின் பிளே எழுதினன் உரையாடல் வந்து - எனக்கு நாடகங்களில நிறைய அனுபவங்கள் இருக்கு, எனக்கு குறியீட்டு நாடகங்களை விட யதார்த்த நாடகங்கள் பிடிக்கும். குறியீட்டு நாடகங்களில் எனக்கு மிகவும் அதிருப்தியான போக்கு இருந்தது; அதாவது விடயத்தை வந்து இயல்பாகச் சொல்றது, யதார்த்தமாச் சொல்றது என்பதில் எனது ஈடுபாடு அதிகமாக இருந்தது; அந்த ஈடுபாடு, எனக்கு நிறைய உதவி செய்தது. மட்டக்களப்பில் எப்படி அந்த மொழியை இயல்பாகப் பிரயோகிப்பார்களோ, அது எப்படி பேசுவாங்களோ என்றது வந்து அந்த ஸ்கிரிப்பை எழுதும் பொழுதே லாவகமாக வந்துவிட்டது.

பாத்திரங்கள் ஒவ்வொருவருடைய கையிலையும் வேலை இருந்தது. ஒருத்தரும் அங்க பேசுறதற்காக இருக்கேல்ல.

அது நீங்க பார்ப்பீர்கள் அந்த மெகாசீரியில் அலுப்புத்தாறவேலை. அதைப்பார்க்கேக்க எனக்கு பயங்கர ஆத்திரம் ஆத்திரமா வரும். சும்மா அப்பிடியே சோபாவில இருந்து கொண்டு - நாலுபேர் கோலுக்க இருந்துகொண்டு, கதைச்சுக்கொண்டே இருப்பாங்கள். இது எங்களிட்ட பார்த்தீர்களானால் எங்கள் சமூகங்களிலையோ இப்படி இருக்கிறதில்லை.

அவன் உண்மையா வீட்டில் கதைச்சுக் கொண்டிருக்கேக்க அம்மா சமைச்சுக் கொண்டிருப்பா, அப்பா பேப்பர் பார்த்துக் கொண்டிருப்பார், தம்பி அவங்கள் படிச்சுக் கொண்டிருப்பாங்கள், ஏதோ ஒன்று செய்து கொண்டிருக்கேக்க வந்து, ஏதோ நிறைய நடந்து கொண்டிருக்கும், ஆனால், மற்றவங்களைப்பார்த்தால், கமராவுக்கு முன்னுக்கு கமராவுக்கு செய்யிற மாதிரி போக்குக் காட்டிக் கொண்டிருப்பாங்கள், இது வந்து எனக்கு பிடிக்கேல்ல. ஏற்கனவே நான் திட்டம் இடும் போது இதை பிறேக் பண்ணவேணும் எனத் தீர்மானித்தேன்.

மெகா சீரியல் எமது மக்களுடைய பொழுதுபோக்கு அம்சமாக இருக்கிறது. அவ்வாறான பொழுது போக்கு அம்சம் எங்கட மக்களுக்கு தேவையென்று எண்ணுகிறீர்களா?

(சிரிக்கிறார்) அது, முழுநீளத் திரைத் தொடர்களுடைய செயற்பாடு என்பது எங்களுடைய சமூகத்தில் மிகப் பெரியதான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இது மிக மிகப் பாரதூரமான, பிற்போக்குத் தனமான ஒரு செயற்பாட்டுக்கு எங்கட சமூகத்தை இட்டுச் சென்று



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டிருக்கின்றது.

எங்களுடைய மக்கள், விடுதலை நோக்கி ஏங்கிக் கொண்டிருக்கின்ற சமூகம். அடுத்தகட்ட வளர்ச்சியை எதிர் நோக்கி நடந்து கொண்டிருக் கின்ற சமூகம், எங்களுடைய பிரச்சனைகளை மறந்து எங்களுடைய சமூகம் தனது விழிப்புணர்வை மறந்து எங்களுடைய அடுத்த கட்ட வளர்ச்சியைப்பற்றி சிந்திக்கவிடாமல் எங்கட மக்களுடைய, முழுக்க முழுக்க பொழுது போக்குக்குள்ள அமத்திக் கொண்டிருக்கின்ற வேலையை இன்று இந்த மெகா சீரியல் செய்கிறது; இது கண்டிப்பாக மாற்றப்பட வேண்டும் எங்களுடைய மக்களினுடைய பிரச்சினைகளை வந்து தொடர்களாக எப்ப உருவாகத்தொடங்கிறதோ அதுவும் மக்கள் பார்க்கக் கூடிய அளவிற்கு தரமாக எப்படிக் கொடுக்கப்படுகிறதோ. அப்பொழுதுதான் வந்து இதனுடைய வீழ்ச்சி ஏற்படும். அந்த வீழ்ச்சி வந்து வெகு விரைவில் நடைபெற வேண்டும் முழுக்க முழுக்க பொழுது போக்குத்தனமான சமூகமாக மாறிவிடும் அபாயகரமான சூழலுக்குள் வந்து விட்டது.

உங்களுடைய சில உத்திகள் மிக அற்புதமானதாக இருக்கு, அதை நாங்கள் பகிர்ந்துகொள்ள வேண்டும்? எங்களுடைய படிப்பிற்கும் குறிப்பா, அந்த கந் தோர்கள் வழியே அந்தக் கமரா போய் பிறகு அந்தச் சூழலை சரியாக் காட்டிப்போட்டு, பிறகு அந்தக் கமராவுக்கு முன்னுக்கு ஒருவர் முதுகைக் காட்டிக்கொண்டு வருவார். அவருக்கு பின்னுக்கு கமரா போய் கிச்சானிட்டப் போகும் இது ஒரு உத்தி.

தலையாட்டி அவரைக் காட்டிக்கொடுக்கேக்க தெரியாதெண்டு தலையாட்டுவார். பிறகு தெரியும் என தலையாட்டுகிறார். அல்லது கிச்சானின் பார்வைக்குள்ள முதலாளியும், ஆமியும், ஒருவர் மாதிரி தெரிகிறது. "அவன் நித்திரை கொள் ளேக்க வந்திற்று போற ஆட்களில ஒருக்கா ஆமிவாறான் எண்டால், பிறகு முதலாளி வாறார்" இப்படியான உத்திகள் உரையாடலில் கூட பார்க்கலாம். ஆமிக்காரன் சுடப் போறான் எண்டு கிச்சான் சொல்ல அதுக்காகத்தான் உன் னையே அனுப்பினேன், அவருக்கு மரணபயம், இருக்கு இப்படியான உத்திகள் எப்படி அமைச்சுக் கொள்ளுகிறீர்கள்? எப்படித் தேடினீர்கள்? எப்படி உங்கட மனதில் உத்திகள் வந்து உதிக்குது என்பது பற்றி சொல்லமுடியுமா?

அது அனுபவம்தான். அனுபவம் சார்ந்த ஒருவிடயம் தான். ஏன் என்றால் பத்து வருடத்திற்குமேலாக நாடகத்துறை அனுபவம் எனக்கு மிக்க பலமாக இருந்தது.

நாடகங்களில் வந்து கூடுதலாக உத்திகள் பயன்படுத்துவார்கள். இயக்குனர் சார்ந்து உத்திகளைப் பயன்படுத்துவது அதிகம். அந்த அனுபவங்கள் கமராவிற்குள்ளும் பயன்படுத்துகிறது என்பது ஒரு கிறியேற்றிவான விடயம் தான். அது எங்கள் சார்ந்த தேடலுக்குள்ளால் வருகிறது. கதை ஓட்டத்தோட வந்து, எதைச் சொல்ல முடியுமோ அதைச் சொல்லிக் கொண்டுபோகிறது அது, ஒரு கிறியேற்றிவ் சார்ந்த ஒரு விடயமாகத்தான் நான் பார்க்கிறேன்.

தேடல், நாங்கள் பழக்கப்பட்ட விதங்கள், பழகிப் போன விதங்கள், நாங்கள் பரீட்சயப்பட்ட விதங்கள், எங்கட சமூகத்திற்குள்ளே இருக்கிற விடயங்கள், உண்மையில தட்டையா வந்து கதை சொல்லக் கூடாது. நுணுக்கமாக, மிக நுணுக்கமாக வந்து விசயங்களைக் கொடுக்க வேண்டும். கமலஹாசனுடைய படங்களைப் பார்த்தீர்களானால் மிக அதிகமாக இருக்கும் இந்தமாதிரி நுணுக்கமான விடயங்கள். அவரு டைய நடிப்பிலும் சரி, கமராவிலும் சரி நுணுக்கமான விடயங்களை நிறைய வைச்சிருப்பார். அது மாதிரிப் பேசுகிறவர்கள் மிக மிகக் குறைவு. ஒருகதை எடுத்தா தட்டையாப் போகிறது என்பது ஏற் படுத்துகின்ற தாக்கம் வேறு. அதுக்குள்ள சின்னச்சின்ன விடயங்கள், வித்தியாசமா பல படிமங்களைக் கொடுக்கிறதால தாக்கம் அதிகமா இருக்கும்.

கிச்சானைப் பாட்டி வேலைக்கு சேர்க்கிறத்துக்கு கூட்டிக் கொண்டு போகும் பொழுது ஏராளமான பிள்ளைகள் பாடசாலை நோக்கிப் போய்க் கொண்டிருப் பார்கள். இதிலுள்ள யதார்த்தச் சூழலையும் இந்த இடத்தில் கிச்சான் எங்க ளைத் தொடுகிற காட்சியையும் எப்படி அமைத்தீர்கள்?

இந்தப் படத்திற்கு ஒரு உச்சம், கிளைமாக்ஸ் என்று சொல்வார்கள் அந்த உச்சக் காட்சியைக் கொடுக்க வேணும் என்று நான் யோசிச்சன். அப்படி யோசிக்கேக்க தான் இப்படி ஒரு சீனைக் கிறியேற் பண்ண வேணும் என்றொரு எண்ணம் எனக்கு வந்தது. அதைப் பார்த்தீங் களானால் வெள்ளை உடுப்போட தான் அவன் வருவான். பள்ளிக்குப் பிள்ளைகள் போய்க் கொண்டிருப்பார்கள். கிச்சான் பள்ளிக்குத்தான் போறானா எங்க போறானெண்டு தெரியாது. அவனுடைய முகம் ஒன்றைப் பேசும், பாட்டியின்ர இழுவை ஒரு பக்கம் போகும் அங்கே தொடங்குகிறது; அவனுடைய வரலாறு. அவனுடைய வாழ்க்கை மாறப்போகின்றது. திருப்பு முனையை அடையப் போகின்றது. குழந் தைகள் ஒரு பக்கம் போவார்கள்; இவன் ஒரு பக்கத்துக்கு திரும்புவான். அங்க தான் அவனுடைய வாழ்க்கை மாறுகிறது.

அதனுடைய உச்சம் எங்கயென்றால் கடைசியா ஒரு பையனுடைய பாக்கைப் பிடித்து விரல்கள் தொட்டுவிட்டு செல்லுகின்ற இடைவெளி, அது தான் அதனுடைய உச்சம். சினிமாவில் பார்த்தீர்களானால் அந்த கிளைமாக்சை மிகப் பிரமாண்டமாகச் செய்திருப்பார்கள். பெரிய சண்டையோ, எந்த ஒரு வசனமும் இருக்காது. எந்த ஒரு கதாபாத்திர மும் பேசாது. ஆனால் கமரா பேசும். அது ஒரு வகையான உத்தி உண்மையில் படம் அங்கையே முடிந்து போச்சு.

(சிரிக்கிறார்) எனக்கு பதினொருவயதாக இருக்கும் பொழுது என்னு டைய தந்தையை இழந்து விடுகின்றேன். அம்மா, படிப்பு வாசனை யில்லாத ஒரு பெண். பொருளாதாரத்தில் வந்து எந்த ஒரு வருமானப் பின்னணியுமே இல்லாத ஒரு குடும்பம்.

நெல்லுக்குத்தி, கொழிச்சு, அரிசி குத்தி, அதுக்கூடாகத்தான் எங்களைப் படிப்பிக்கத் தொடங்கிறார். இதைப் பேசத் தொடங்கினா பேச முடியாத மன உணர்வுக்குள் போய் விடுவேன்.

மிகக் கஸ்டப்பட்டு, தொழிலாளியாக செல்லும் அளவிற்கு செல்ல வில்லை. ஆனால் அந்த பாதிப்பு மிக அதிகமாக இருந்தது. கல்வியை நோக்கிய பயணம் கஸ்டமானதாக இருந்தது, அம்மாவினுடைய கனவு அங்கே இருந்தது, 'நான் படிக்கேல்ல என்ர பிள்ளையள் படிக்கோ ணும்'.

விதைக்கப்பட்ட காத்திரமான விதை எவ்வளவு கஸ்டத்துக்குள்ளேயும் அதை நோக்கிச் செல்லும் உத்வேகத்துடனேயே இருந்தது.

கல்வியினுடைய ஏக்கம் எனக்கு அதிகமாகத் தெரியும். அது ஏற்படுத் திய வடு என்பது எனக்கு அதிகமாகத் தெரியும். பல உறவுகள் அம் மாவை படிக்காதவள் என்று தள்ளி வைத்த உறவு ஏற்படுத்திய வடு மிக அதிகம். அந்த வகையில் கல்விக்கான போராட்டம் தான் கிச்சானும் கல்விக்கான ஒரு போராட்டம் தான். ■



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாமனிதர் ஞானரதன்

யாழ். அளவெட்டியைச் சேர்ந்த திரு. ஞானரதன் அவர்கள் நிதர்சனம் நிறுவனம் தயாரித்த பல விவரணங்களின் மூலகர்த்தாவாகவும், நிதர்சனம் நிறுவனம் தயாரித்த குறும்படங்கள், முழுநீளப்படங்களின் ஆரம்பகர்த்தாவும் ஒளிவீச்சு சஞ்சிகையின் தொடக்குனர்களில் ஒருவரும், தமிழீழத் தேசியத்தொலைக்காட்சியை ஆரம்பிப்பதில் முன்நின்றவர்களில் ஒருவருமான தலைசிறந்த படைப்பாளியாவார். இவரது சிறந்த படைப்புக்களிற்காக தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் பலமுறை பரிசில்களை வழங்கி மதிப்பளித்துள்ளார். இவரிற்கு ஸ்ரீலங்காவின் முன்னாள் அரசுத் தலைவர் சந்திரிகா குமாரதுங்க கலாகீர்த்தி என்ற விருதினை வழங்க அழைத்தபோது திரு. ஞானரதன் அவர்கள் அதனை வாங்க மறுத்தமை குறிப்பிடத்தக்கது.

## மாமனிதர் ஞானரதன்
### அவர்களுக்கு நினைவு வணக்க நிகழ்வு

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதர்சனம் நிறுவனத்தின் பல்வேறு படைப்புக்களிற்கு மூல கர்த்தாவாக திகழ்ந்த திரு. ஞானரதன் அவர்கள் சுகவீனம் காரணமாக 18.01.2006 அன்று கொழும்பில் சாவடைந் துள்ளார்.

சாவடைந்த இவரிற்கு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் மாமனிதர் விருது வழங்கிக் கௌரவித்தார்.

இவரின் வணக்க நிகழ்வு நிதர்சனம் நிறுவனத்தில் 20.01.2006 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பொதுச்சுடரினை நிதர்சனம் நிறுவனத்தின் மகளிர் பொறுப்பாளர் பிரேமிலா அவர்கள் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசயக்கொடியினை தமிழீழ அரசியற்துறை பொறுப்பாளர் திரு.சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் ஏற்றிவைத்தார். திரு. ஞானரதன் அவர்களின் திருவுருவப்படத்திற்கான ஈகைச்சுடரினை ஊடகவியலாளர் திரு.விவேக் ஏற்றிவைத்தார். திருவுருவப் படத்திற்கான மலர்மாலையினை தமிழீழ அரசியற்துறை பொறுப்பாளர் திரு. சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் தமிழீழத் தேசியத்தொலைக்காட்சி நிறுவனத்தின் பொறுப்பாளர் ஆகி யோர் அணிவித்தனர். தொடர்ந்து மலர்வணக்கநிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் போராளிகள், பொறுப்பாளர்கள், பணியாளர்கள், பொது மக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.





www.tamilarangam.net



# 'சூரியனே இறங்கு எம் ஆற்றல் மிகு கரங்களில்'



**கேணல் கிட்டு வரைந்த உயிர் ஓவியங்கள். கிளிநொச்சி நுண் கலைக்கல்லூரியில் நடைபெற்ற ஓவியக் காண்பிய நிகழ்வில் கலந்துகொண்டோரின் கருத்துப் பகிர்வுகள்**

கவிஞர் நாவண்ணன்

ஒரு ஒப்பற்ற கலைப் படைப்பின் குளத்திற்குள் சென்றுவிட்டு வெளிவந்த உணர்வுதான் எனக்குள் ஏற்படுகின்றது. சித்திரங்கள் வெறும் பொழுது போக்குச் சாதனங்கள் அல்ல. வெறும் கோடுகளும் வண்ணங்களும் மட்டுமல்ல. அந்த கோடுகள் வண்ணங்களினுடாக மக்களுக்கு ஏதோ ஒரு செய்தியை சொல்கிறது. அந்தச் செய்தியைச் சொல்லுகின்ற விடயத்தில் கேணல் கிட்டு அவர்கள் வெற்றி கண்டிருக்கிறார். ஏனென்றால் இந்த ஓவியங்கள் நேற்றைய காலத்தில் மட்டுமல்ல, இன்றைய காலத்தில் மட்டுமல்ல நாளைய வருங்காலத்திற்கும் ஏதோ ஒன்றை எங்களுக்குச் சொல்லிக் கொண்டே இருக்கும். மிக எளிமையாக தனது கருத்துக்களை கூறியிருக்கின்றார். எனக்கு நவீன ஓவியங்களில் ஈடுபாடு குறைவு. ஆனால் இந்த ஓவியங்களைப் பார்க்கின்ற பொழுது, மீள மீளப் பார்த்து அதற்குள் எதைச் சொல்கிறார் என்பதை அறிய வேண்டும் என்கிற உந்துசக்தியை உளத்தில் ஏற்படுத்தியிருக்கிறார். 'சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நா பழக்கம்' என்று சொல்வார்கள். முறைப்படி தான் பயிலவில்லை என்பதை ஒப்புக்கொண்டாலும், பழக்கத்தின் அடிப்படையிலே தான் அவருடைய ஆக்கங்கள் வெளிவந்திருக்கின்றன. அது அவருக்கு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெற்றியான விடயம். அது மட்டுமல்ல தமிழினத்திற்கு ஒரு சொத்தை விட்டுச் சென்றிருக்கிறார். இன்று எப்படி பிரபல ஓவியர்களுடைய ஓவியங்களைப் பற்றி, அர்த்தங்கள் பற்றி, கருத்துக்கள் பற்றி பெருமைகொள்கின்றோமோ அது போன்று நவீன ஓவியத்தில் ஈடுபாடு கொண்ட ஒருவராக அவரும் வாழ்ந்திருக்கின்றார்.

கலை உள்ளத்தோடு வாழ்கின்ற ஒருவருக்கு போர் உணர்வுகள் வருவது குறைவு. ஆனால் இங்கு இரண்டும் சேர்ந்த ஒரு கலைப் படமாக கிட்டு அவர்கள் எங்களுக்கு காண்பித்திருக்கிறார். 'ஒரு கலைஞன் பிறக்கின்றான் ஒரு போராளி உருவாக்கப்படுகின்றான்' என்று சொல்வார்கள். ஆனால் இங்கே கலைஞனும் போராளியும் சேர்ந்து பிறந்த ஒரு சக்தியைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆகவே இந்த உணர்வின் வெளிப்பாடுகள் எங்களுக்கு எதிர்காலத்தில எங்களுடைய சந்ததியினருக்கு இது மாதிரியான ஓவியங்களை கற்றுக் கொடுக்க வேண்டும் அதிலே பரீட்சயம் பெற வேண்டும் என்கின்ற ஒரு ஆதங்கத்தை ஏற்படுத்தும் என்பது எனது நம்பிக்கை.

தமிழீழத்திலே வாழுகின்ற பொழுது அவருடைய ஓவியக் கலைத்திறனைப் பார்ப்பதற்கு வாய்ப்பு எமக்குக் கிட்டவில்லை. ஆனால் அவர் வெளிநாட்டிற்குச் சென்று வீரச்சாவடைந்த பிறகே அவற்றைப் பார்க்கின்ற வாய்ப்பு எமக்குக் கிடைத்திருக்கின்றது.

என்னுடைய வேண்டுகோள் ஒன்று: கேணல் கிட்டு அவர்களின் ஓவியங்களைக் கொண்ட ஒரு நாட்காட்டியை வெளியிட யாராவது முன்வரவேண்டும். அப்போதுதான் இந்த ஓவியங்கள் சாதாரண மான மக்களுடைய வீடுகளிலே காட்சியளிக்கவும், அவற்றை அவர்கள் புரிந்து கொள்ளவும் உதவியாக இருக்கும்.

### ஓவியர் தீசன்

இந்த அரிய ஓவியப்படைப்பைப் பார்ப்பதற்கு சந்தர்ப்பத்தை அளித்த தமிழீழ நுண் கலைக் கல்லூரிக்கு நன்றியைத் தெரிவிப்ப தோடு, கிட்டண்ணாவை நாங்கள் போராற்றல் மிக்க ஒரு போர் வீரனாகத்தான் யாழ்ப்பாணத்திலே பார்த்திருக்கின்றோம். அத்தோடு அவர் பல துறைசார்ந்த விற்பன்னர் என்றும் அறிந்திருக்கின்றோம். ஆனால், அவர் வெளிநாடுகளிலிருந்த பொழுது ஓவியங்களை படைத்த செய்திகளை, செய்திகள் மூலமாக அறிந்திருக்கின்றோம். அந்த ஓவியங்களுக்குள் பல செய்திகளை அவர் படைத்திருக்கின்றார். வலுமிக்க ஒரு படைப்பை நாங்கள் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஓவியத்தை எமது தமிழீழ மக்கள் அனைவரும் பார்க்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். எமது கிட்டண்ணா அவர்களை போற்றுதலுக்குரிய ஓவியனாகவும் நான் கருதுகின்றேன்.

### யாழ் பல்கலைக்கழக மாணவன்

கிட்டண்ணாவினுடைய இந்தத் திறமையானது எனக்கு உண்மையிலே தெரியாது. நான் அவரை ஒரு சிறந்த தளபதியாகவும், வழிநடத்தக்கூடிய நல்ல மனிதனாகவும் தான் நான் கேள்விப் பட்டிருக்கின்றேன். ஆனால் இன்றைக்கு இந்த ஓவியங்களைப் பாக் கேக்க அவருடைய மன எண்ணங்களை, மன உணர்வுகளை வெளிப்படுத்தவேண்டும் என்பதற்காகவே, நவீனப் பாணியில அதாவது அந்த போஸ்ட் மாடர்னிஸம் என்ற அந்த பாணியில மிக நுட்ப மான முறையில ஒவ்வொரு கோட்டினுடைய அசைவும் மனதினுடைய உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடிய மாதிரி இருக்கு.

உதாரணமாகச் சொல்லப் போனா அவர் பயன்படுத்திய வர்ணங் கள், அவர் பயன்படுத்திய உணர்வு வெளிப்பாடுகள் அனைத்துமே எங்கள் தமிழ் மக்களுடைய உணர்வுகளைக் கிளறி தன்னுடைய அனுபவத்தை அதில சேர்த்து அதன் மூலம் வெளிப்படுத்திய ஓவியங் களாகத்தான் அதை எல்லாத்தையும் நாங்கள் பார்க்கக்கூடியதாக இருந்தது. அதே மாதிரி அந்த ஓவியங்கள் ஒவ்வொன்றும் ஆரம்ப காலத்தில வரைந்த பிக்காசோ, வான்கோ அவர்கள் எவ்வாறு அந்த ஓவியங்களை தங்களுடைய பாணியில மக்களுக்கு வெளிப்படுத்தி புகழை ஈட்டினார்களோ அதே மாதிரி இவருடைய பாணி வந்து ஒரு வித்தியாசமான முறையில இருக்கு. தற்காலத்தில வந்து மக்கள் கூடுதலாக என்னத்தை விரும்பினம் என்று சொன்னால் ஒரு அழகு, கவர்ச்சி அப்படியான முறையில அவர்கள் கொமர்சியல் ஆர்ட்டைத்தான் அவர்கள் கூடுதலாக விரும்பினம். மொடேர்ன் ஆர்ட்டை கண்டால் தள்ளிப் போகின்ற போக்குத்தான் இருக்கு. ஆனால் கிட்டு அண்ணையினுடைய ஓவியங்கள், வர்ணப் பயன்பாடுகள் அவருடைய கோட்டினுடைய திருப்பங்கள், நுணுக்கங்கள் என்பனவும் திரும்பத் திரும்ப பார்க்கவேண்டிய உணர்வுகளையும், கருத்துக்களையும் எனக்குள் தந்தன. அப்படி உணர்வூட்டுகின்ற ஓவியங்களாக இருக்கின்றன. ஒயில் பஸ்டல் முறையில் செய்திருக்கிறார். அதாவது கன்வஸ்சுகளைப் பயன்படுத்தி, அந்த ஒயில் கலருக்குரிய, விதிக்கமைய மிக நுட்பமாக செய்தபடியால் மிகச் சிறப்பாக இருக்கு. நான் உண்மையில நினைக்கவில்லை அவருடைய மனதுக்குள்ள ஒரு கலை உணர்வுகள் இருந்திருக்கும் என்று. ஆனால் இன்று நான் பெருமைப் படுகின்றேன். நான் சந்தோசப்படுகின்றேன்.

### கவிஞர் நா.யோகேந்திரநாதன்

ஏற்கனவே காண்பியத்தில் இருக்கும் ஓவியங்களை நான் ஏறக் குறைய இரண்டு வருடங்களுக்கு முன்பு பார்த்ததுண்டு. ஆனால் அவரின் ஓவியங்கள் பார்வையுடன் நின்றுவிடக் கூடியவையல்ல. அந்த ஓவியங்கள் பார்வைக்கு அப்பால் படிக்கப்படவேண்டிய ஓவியங்கள். அந்த ஓவியங்கள் சொல்லும் ஒவ்வொரு செய்தியும் நாம் ஆழ ஊடுருவிச் சென்று அவற்றில் அறிய வேண்டிய விடயங்கள் நிறையவே சுமந்திருக் கும். அவ்வகையில் இன்று நான் இந்த ஓவியக் கண்காட்சியில் பார்ப்ப தற்கு அப்பால் படிப்பது என்ற ரீதியில் அந்த ஓவியங்களைப் பார்த்தேன்.

கேணல் கிட்டுவிற்கு பல முகங்கள் உண்டு. அதை நாங்கள் அறிவோம். அதாவது அவர் தேசியத் தலைவரின் நம்பிக்கைக்குரிய, அன்பிற்குரிய, நட்புக்குரிய, தோழமைக்குரிய தளபதி. போராட்டத் திசை நோக்கத்தில் அவருடைய சாதனைகள் ஏராளம், ஏராளம். அது சாதாரண மாக எண்ணி முடிக்க முடியாது, சொல்லி முடிக்க முடியாது எனவே தான்போராளி என்ற அவருடைய முகம் மிகப் பிரமாண்டமானது. அதை விட அவர் ஒரு கவிஞன். ஆனால் அவருடைய கவிதைகளுக்குள் தேசிய விடுதலை மட்டும் சுமக்கப்பட்டிருக்கவில்லை. தேசிய விடுதலைக் குள்ளும் மக்களின் சமத்துவம், ஏழைகளின் விடுதலை வறுமையிலி ருந்து மக்களுக்கு நிவாரணம். பல்வேறு பார்வைகளில் அவருடைய கவிதைகள் இருந்தன. இவர் ஒரு சிறந்த படப்பிடிப்பாளர். அதாவது இவருடன் போர் களங்களில் தோளோடு தோள் நின்று போராடிய பல தோழர்கள் சொல்கின்றார்கள் ஒரு கையில் துப்பாக்கி இருக்குமாம், மறு கழுத்தில் கமரா தொங்குமாம். அப்படி அந்தக் களச்சம்பவங்களைக் கூட அந்தக் காலத்திலேயே அவர் படம் பிடிப்பதில் அக்கறை கொண்டி ருந்தார். ஏனென்றால் எங்களுடைய ஒவ்வொரு சம்பவங்களும் ஆவணப் படுத்தப்படவேண்டும் என்பதற்காக. அது மட்டுமல்ல அவருடன் பழகிய வர்கள் பலர். கமராக் கலைஞர்களாக மாறி படப்பிடிப்பை மேற்கொண்டு வருகின்றனர். அந்தத் துறையில் சாதனைகளை ஈட்டியும் வருகின்றனர். அது மட்டுமல்ல அவர் ஒரு வடிவமைப்பாளரும் கூட, அச்சு வேலைகளை செய்யக்கூடிய ஆற்றலும் கொண்டவர். நல்ல ஒரு ராஜதந்திரி.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'சூரியனே இறங்கு எம் ஆற்றல் மிகு கரங்களில்' வெண்ணிறத்தில் சூரியன், மக்கள் பலர், வித்தியாசமான நீல வர்ணத்தில் மேகம், கபில நிறத்திலான மக்கள் கைகளை உயர்த்தியவாறு நிற்கிறார்கள். இதை நாங்கள் மேலோட்டமாகப் பார்த்தால் சூரியனே இறங்கு என மக்கள் மன்றாடுவதைப் போன்ற தோற்றத்தை ஏற்ப்படுத்தலாம். ஆனால் அதற்குக் கொடுக்கப்பட்ட வர்ணம், அதற்கப்பால் எங்களுக்கு நிறைய செய்திகளைச் சொல்லுகின்றது அதாவது அந்த வர்ணம் அவர்கள் எரிந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்கள் விடுதலைப் போர்க்களங்களில் எரியும் தீயாக நிற்கின்றார்கள்.

வெளிநாட்டிலுள்ள மக்கள் மத்தியில் வேலைசெய்வதாய் இருந்தாலும் சரி, வெளிநாட்டு அரசாங்கங்களுடன் தொடர்புகளை வைத்துக் கொள்வதாய் இருந்தாலும் சரி, வெளிநாட்டு விடுதலை இயக்கங்களுடன் தொடர்புகளை வைத்துக்கொண்டிருப்பதானாலும் சரி அதிலும் இவர் சாதனைகளை ஈட்டினார். அவர் கை வைத்த துறைகளெல்லாம் துலங்கின. ஓவியத் துறையிலும் கூட இவர் ஒரு உச்சத்தை தொட்டிருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். ஒவ்வொரு ஓவியங்களும் சொல்லும் செய்திகள், வெளிப்படுத்தும் உணர்வுகள், அந்த உணர்வுகள் எங்களை ஆட்கொண்டு எங்களில் எழும் பிரதிபலிப்புகளைச் சொல்ல நீண்ட நேரம் வேண்டும்.

'சூரியனே இறங்கு எம் ஆற்றல் மிகு கரங்களில்' வெண்ணிறத்தில் சூரியன், மக்கள் பலர், வித்தியாசமான நீல வர்ணத்தில் மேகம், கபில நிறத்திலான மக்கள் கைகளை உயர்த்தியவாறு நிற்கிறார்கள். இதை நாங்கள் மேலோட்டமாகப் பார்த்தால் சூரியனே இறங்கு என மக்கள் மன்றாடுவதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தலாம். ஆனால் அதற்குக் கொடுக்கப்பட்ட வர்ணம், அதற்கப்பால் எங்களுக்கு நிறைய செய்திகளைச் சொல்லுகின்றது அதாவது அந்த வர்ணம் அவர்கள் எரிந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்கள் விடுதலைப் போர்க்களங்களில் எரியும் தீயாக மக்கள் நிற்கின்றார்கள். இந்த பொங்கி எழும் மக்கள் படை என்ற நிலமை நடைமுறைக்கு வந்துவிட்டபோது கூட அன்று கிட்டு அவர்கள் அதைப் பற்றிய ஒரு எதிர்பார்ப்பு அவருடைய அந்த படத்தை என்னால் பார்க்கமுடியாது ஏனென்றால் மக்கள் பொங்கி எழுந்து எரிகின்றார்கள். எரிந்து அவர்களுடைய ஒளி அந்த சூரியனை அவர்களுக்குள் வரைவழைக்கப்போது. அந்த சூரியன்ர ஒளியை அவர்கள் தங்களுக்குள்ளே உருவாக்க எழுந்து எழுந்து கனன்றுகொண்டு இருக்கின்றார்கள் என்ற செய்தியை அந்தப் படம் வலு சாதாரணமாக இது அந்த கிட்டு ஓவியங்களின்ர மகத்தான ஆற்றல் என்று தான் நான் நினைக்கின்றேன்.

அதற்குப் பின்னால் நீலக் கடல் அதற்குள் மீன்கள் இது தான் ஆனால் அங்கே அந்தக் கரையேறத் துடிக்கும் துடிப்பு அந்த மீன்களில் தோற்றம் பெற்றிருக்கிறது. அதாவது சிறைக் கம்பிகளுக் குள்ளால் நீர் வெளியே வந்திருக்க முடியும் வரவில்லை. ஏனெனில் இந்தச் சிறைக் கம்பிகள் எமது மக்களை மட்டுமல்ல மண்ணையும் சேர்த்து முற்றுகையிட்டிருக்கிறது. நாங்களும் எமது மண்ணும் அடிமைப்பட்டிருக்கு. அப்ப நாங்கள் இந்த அடிமைத் தனத்துக்குள்ள அந்தக் கம்பிகளை உடைத்து வெளியில வரவேண்டும் என்றால் நாங்கள் குண்டுகளாகத்தான் வரவேண்டும். அந்தச் செய்தியை அந்த ஓவியம் மிக தத்துருவமாக சொல்கிறது. இன்னொரு படம் கைகளில் வெளிச்சம் நம்பிக்கை முகத்தில் ஒளி, ஒரு தாய், ஒரு கைக் குழந்தை அதே போன்ற இன்னொரு படமும் அங்கே ஒரு கணவனை இழந்த தாய், கையில் குழந்தை பின்னால் துப்பாக்கி. இங்கே நாங்கள் விழ விழ எழுந்துகொள்வோம் என்ற செய்தியை அந்த இரு சித்திரங்களும் மிகத் தத்துருவமாகக் காட்டுகின்றன அதாவது ஒரு தலைமுறையைச் சேர்ந்த ஒருவர் இல்லாமல் போகலாம். ஆனால் அந்த இடத்தை நிரப்ப அடுத்த தலைமுறை தயாராக இருக்கிறது. இது நாங்கள் பார்த்த யதார்த்த உண்மை. இப்படியே கிட்டுவின் படங்கள் முழுவதுமே, நான் சொன்ன அந்தப் படத்தில் 'வாழ்விழந்து போயினும் கையில் புதிய ஒளி' அந்த தாயின் முகத்தில் சோகம் இழையோடினாலும் கூட அவளுடைய கண்கள் தனி ஒளி ஒன்று வாறதை கவனிக்க தக்கதாக இருந்தது. இப்படியே ஒவ்வொரு ஓவியங்களையும் பார்த்தால் அவை ஏராளமான செய்திகளைச் சொல்லிக்கொண்டிருக்கின்றன.

வளவை வளவன்

'வெள்ளத்தனையது மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு' இந்த வள்ளுவன் வாக்கிற்கொப்ப கிட்டண்ணையினுடைய ஓவியங்கள் இருக்கின்றன. இப்பொழுதும் அவருடைய உள்ளத்தின் எழுச்சியையும் அவருடைய விடுதலைப் பற்றையும், எமது இலக்கு என்ன அந்த இலக்கை நாங்கள் எப்படி அடையவேண்டும் என்பதைத் தொட்டதாகவே எல்லாத் தலைப்புக்களும், எல்லா ஓவியங்களும் இருக்கின்றன. அந்த பார்வையிலேதான் அவர் தன்னுடைய ஓவியங்களை வரைந்துள்ளதை காணக்கூடியதாக இருக்கின்றது. நல்லூர் காட்சி ஒன்றை குறிப்பாகச் சொல்லலாம் எல்லோரும் தொட்டு இழுத்தால் எதையும் இழுக்கலாம் அவர் வெறும் பக்தனல்ல. ஆனால் அந்த நல்லூரிலே எல்லோருக்கும் விளங்கக்கூடியதாக நாசூக்காக இந்தத் தமிழீழத்தேரை, விடுதலைத்தேரை எல்லோரும் பற்றி இழுத்தால் நிச்சயமாக வெல்லலாம் என்ற ஒரு அரிய கருத்தை அந்த நல்லூரான் கோவிலையும், தேரையும் வரைந்ததன் மூலம் மிகத் தெளிவுப்படுத்தி இருக்கின்றார். இதே போல ஒவ்வொரு ஓவியங்களும், ஒரு குழந்தையின் கரத்தில் ஏந்திய தாய் அதற்கு தலைப்பு மிகப் பொருத்தமாக எழுதப்பட்டிருக்கிறது. அதே போல கரையேறத் துடிக்கும் மீன்கள் குண்டுகளாக கடற்கரையையும், தமிழீழ மண்ணையும் வரைந்த அந்த ஓவியம். இரண்டுமே காவியத்தின் பிரதிபலிப்பாகத் தெரிகிறது. தமிழீழத்தில் வீழுகின்ற குண்டுகள், கண்ணீர் துளிகளெல்லாம் மீன்களாக வராமல் குண்டுகளாக விழுகின்றது. அருமையான ஒரு சித்தரிப்பு. எமது தேசத்தின் போர் காலம் மட்டுமல்ல அந்த வெற்றிக்கானதும், இலக்கை மீட்டெடுப்பதற்குமான மிகச் சிறந்த சுலபமான வழிகளை தனது உள்ளத்திலே இருந்ததை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியது அதிசயம் தான். இந்த ஓவியங்கள் காலத்தால் சாகாதவை. தமிழீழ விடுதலைப் போராட்டத்தோடு பின்னப்படிருப்பவை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அற்புதமான
## ஒரு நாளுக்கான காத்திருப்பு

சுடுகாட்டுப் பாதையில்
சளிந்த கற்களைப் பொறுக்கி
மூன்று கால்களில் நடக்கிறாள்
வாழ்க்கைக் கிழவி

பொறுக்கிய கற்களை அள்ளி
சாவின் தூதுவர்களை
விரட்டுகின்றாள்

கற்களோடு சேர்த்து
வயதுகளையும்
எறிகின்றாள்

காலத்தின் கைகளை
நெற்றியில் வைத்து
ஏறிட்டுப் பார்க்கின்றாள்
என் தேசத்தை

சாத்தியமாகும் தன்
இருப்புக்கான
சமிக்ஞையை உணர்கிறாள்

நாளை ஒரு விடியலில்
என் நிலத்தில் அவள் குமரியாகி
சுதந்திரக் கடவுளோடு
புணர்வாள்

துயருற்று தசைவற்றி
நரம்பு புடைத்த என் சனங்களை
தன் அகன்றகரங்களால்
அரவணைப்பாள்

பரிபூரணமான ஒரு விடியலில்
என் சனங்கள் அக்களிப்பர்

எங்கள் கூக்குரல் கேட்காத
தேசங்களின் செவிகளிலும்
அது உறைக்கும்

நிமிர்ந்து நிற்கும்
எங்கள் தேசியக் கொடியின்
கீழே நின்று
விடுதலையின் பாடலை
இசைப்போம்
அந்த நாட்களின்
ஒவ்வொரு வினாடிகளும்
உயிர் இழைகளால்
பின்னப்பட்டிருக்கும்.



மெலிஞ்சி முத்தன்

## அவ்வாறு கூறினர் அவர்கள்

அவர்கள் யாருக்கும் என்னைக்
காட்டிக் கொடுக்கமாட்டார்கள்
எனும் வாக்குறுதியின் பின்
மூன்றாம் ஜாமங்களின்
அரூபத்தலையாட்டிகளோடு
பேசத் தொடங்கினேன்

நிஜங்களின்
ஒளிபடாத பக்கங்களில் முளைத்த
நிழல்களை அவர்கள்
இருட்டுக்குள் தேடிக்கொண்டிருந்தனர்

தம் நிழல்களை வைத்தே
தாம் இருக்கின்றனர் என்பதை
உறுதிப்படுத்த முயன்றனர்

காலம் தம் முகங்களை கோரமாக்கியதால்
அவர்கள் முக மூடிகளில் தம் ரேகைகளை
வரைந்திருப்பதாகவும் கூறினர்.

தாம் சனம் எனவும் - ஆதியிலே
சனம் சனமாய் இருந்தனர் - பின்
சனமாய் அல்லாதவர்களால்
சனம் சனமாய் இருக்க முடியவில்லை
என்றும் கூறினர்.

சனமாய் அல்லாதார் தம்மைச் சுற்றி
சனத்தை சேர்த்துக்கொண்டனர்
சனமாய் அல்லாதாரின் கூட்டத்துக்கு - இன்று
சனம் என்று பெயர் எனவும் கூறினர்.

சனம் அருகிக் கொண்டிருக்க
சனம் அல்லாதவர்கள்
பெருகிக் கொண்டிருக்கின்றனர் - என்றனர்

சனத்தை சனத்துக்குக் காட்டிக் கொடுக்க
அவர்களை வெளிச்சத்துக்கு அழைத்து
முக மூடிகளைக் கழற்றினேன்
அவர்கள்........ சனமாய் இருக்கவில்லை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## செயற்கைப் பூக்களுக்கு வாட்டமேது

வேலிகளற்ற
★ டாசு முகாம்
இனியும்
அகற்றப்படப் போவதாகத்
தெரியவில்லை.

கிட்லரும்
முசோலினும்
இறக்கவில்லை அல்லது
மறு பிறவி எடுத்திருக்கிறார்கள்.

சமாதானப்
பூக்கள் வாடிப்பேகின்றதே
என்ற கவலை எனக்கு
வாடாது
என்று உறுதியாகச் சொல்கிறான்
வெள்ளைக்காரன் ..!

கேட்டால்
செயற்கைப் பூக்களுக்கு
வாட்டம்
ஏது என்கிறான்
அப்படியானால் சமாதானம்

* டாசு முகாம் என்பது யூதர்களை கொல்லப்பயன்படுத்திய நாசிகளின் பெரிய வதை முகாம்

## எல்லாமே சொல்லிக் கொண்டன ?!

இப்போது
எங்கள் வீடுகள்
பாதுகாப்பாக இருப்பதாகவே
உலகம் பேசிக் கொள்கிறது .

வீடுகளைச்
சுற்றி
முட்கம்பி வேலிகளும்
மண்மூடை அடுக்குகளும் இட்டே
காத்து வருகிறதாம்
இராணுவம்.

வேலிகளுக்கு
அருகிலே
மனிதர்களோ அன்றி
எந்த விலங்குகளுமோ
உட்புகாதபடி
மிதிவெடிகள் கூட புதைத்திருக்கிறார்களாம்.

இவ்வளவு
பாதுகாப்புக்குள்ளான எங்கள்
வீடுகளிலே
ஓடுகளோ
சுவர்களோ எதுவுமின்றி
அத்திவாரங்களே மீதமிருக்கிறது!

அதைச்
சுற்றிப் பற்றைகளும்
காடுகளுமே படர்ந்திருக்கிறது .

ஆனாலும்
எங்கள் வீடுகள்
இன்னும் பாதுகாப்பாக
உயர் வலயத்தில் இருக்கிறதென்றே
எல்லா
ஊடகங்களும்
சொல்லிக் கொண்டன.

ஞானக்குமாரன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





கப்டன் வாமகாந்




# 'காலத்தின் குரலாக வாமகாந் கவிதைகள்'

'காலம் கொடுக்க முடியாத நம்பிக்கையை ஒரு கவிஞன் கொடுப்பான்' என்கிறது ஒரு தெலுங்குப் பழமொழி. எது கவிதை என்ற கவிதையில் சக்திக் கனல் எனும் கவிஞர், எந்தக் கனல் பொறி/சமுதாய அழுக்குகளை எரித்து/அக்கினி மலர்களாகி/அலங்காரத் தோரணங்களாய் மின்னுகிறதோ/எது சோர்வுற்ற ரத்த நாளங்களில் பூபாள இராகத்தை மீட்டி/வளைந்த முதுகை நிமிர்த்தி/தேவகானம் இசைக்கிறதோ/எது காலப் புயலாகி கண்ணகியின் சிலம்புப் பரலாகி/ராட்சதக் கழுகுகளின் இறக்கைகளை/வெட்டி விழுத்துகிறதோ/அதுதான்/ அதுவேதான்/ கவிதை என்கிறார்.

வீழுமுன் சில வரிகளை இனத்திற்காகவும் விடுதலைக்காகவும் விட்டுச் செல்கின்றார் கப்டன் வாமகாந்.

அவர் ஒரு போராளி. போராளியாக இருந்துகொண்டு கவிதைகளையும் புனைந்தவர். பூநகரியில் நடந்த சண்டையின் போது இடுப்பிற்குக் கீழ் இயங்காத நிலைக்கு போன பிறகும் அவர் விடுதலைக்கான செயற்பாடுகளில் தன்னை தீவிரமாக ஈடுபடுத்தி உழைக்கத் தொடங்குகின்றார். இந்த அற்புதமான விடுதலைச் செயற்பாட்டாளனுடைய உண்மையும், எளிமையும்தான் எம்மை முதலில் கவர்கின்றது. அந்த வகையில் இவருடைய கவிதைகளை நாம் படிக்கின்றபொழுது காலங்களைக் கடந்து பயணிக்கும் ஆற்றலை கவிதைகள் எமக்குத் தருகின்றன. விடுதலைக்கான குரல்களாக அவை ஒலிக்கின்றன. பல்வேறு காலகட்டங்களில் இந்தக் குரல்கள் ஒலித்திருக்கின்றன. இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

'வீழுமுன் சில வரிகள்' புலிகளின் குரல் அமலன் அரங்கில் 10.12.2005 வெளியீட்டு வைக்கப்பட்டது. இது லண்டனிலும், பிரான்சிலும், அறிமுகம் செய்து வெளியீட்டு வைக்கப்பட்டது. எரிமலை சஞ்சிகைக் குழுவினர் இச் செயற்பாட்டை மேற்கொண்டனர். அது கவிதை நேசகர்களால் போற்றப்பட்டது. அவர்கள் அந்தக் கவிதைகளை கருத்தூன்றி பார்த்தார்கள். கவிதைகள் மீதான தொடர்பு, தேவை, முக்கியத்துவம், பலம் என்பது குறித்து நாம் திரும்பத் திரும்பப் பேச வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஏன் ஒரு கவிஞனை துப்பாக்கிக் குண்டுகள் இரையாக்கிக் கொண்டன? அவன் சக்கர நாற்காலியில் உடல் அசைவியக்கம் குறைந்த நிலையில் அல்லவா இருந்தான்? அவனால் விளைந்துவிடக்கூடிய ஆபத்துக்கள் யாவை? ஏன் எதிரி மிகப்பாடுபட்டு அந்தப் படுகொலையை நிகழ்த்தினான்? இவை மிகப் பெரிய கேள்விகளாக எம்முன் எழுந்து நிற்கின்றன.

எதிரிகளும் சரி, ஒட்டுக்குழுக்களும் சரி, ஒரு இனத்தின் ஆன்மக் குரலை அடக்குவதில் தீவிரம் காட்டுகின்றனர். யாரும் பேசக்கூடாது, யாரும் எழுதக்கூடாது, இந்த நிலைதான் மிகவும் ஆபத்தானதாக இருக்கின்றது. இந்த அச்சுறுத்தல் நெருக்கடிகள், துன்பங்கள், ஆபத்துக்கள் மத்தியில்தான் வாமகாந் எழுதினான். அதனால்தான் புலிகளின்குரல் வெளியீட்டுப் பிரிவினர் இந்நூலை வெளியிட்டு வைத்துப் பேசும் பொழுது 'துப்பாக்கியால் சாதித்த சாதனை வேகத்தை ஒத்து பேனாமுனையால் சாதித்த வீரன் இவன் எனக் குறிப்பிட்டனர்.

எனது வீட்டிற்கு சற்றுத் தொலைவில் மிகப் பிரமாண்டமான கறுப்பும், சாம்பலும், பச்சையும் கலந்ததுமான ஒரு சிலை நிமிர்ந்து நிற்கிறது. அந்த சிலையினுடைய கம்பீரமும் எழுச்சி தரும் தோற்றமும் என்னை சதா கவர்ந்திழுக்கும். அப்போ அதன் கீழுள்ள குறிப்புகளை வாசித்து அறிந்தபோதும் என்னால் அதன் முழுமையை அறிந்துகொள்ள முடியவில்லை. சிலை எனக்கு நெருக்கமாகிக் கொண்டு வந்துவிடுவதற்கு 'வீழுமுன் சில வரிகள்' கவிதை நூல் ஒரு காரணமாக அமைந்து விட்டிருந்தது.

கொட்டும் முரசொலி
கேட்கிறதா?

என்ற கவிதையில் :

காற்றிற்கும் விலங்கிட்டு
கட்டிடவா முடியும்?
உன் முன்னோர் ஊட்டிய
வீரம் உனக்குண்டு
[...]

பூட்டிய விலங்கது
பொடிப்பொடியாகட்டும்.
போர்க்களம் நோக்கியே
உன் கால்கள் விரையட்டும்.
பகைவனைக் கண்டு
அஞ்சி நீ அடங்காதே .
பாயும் புலி குணத்தை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழிதோண்டி புதைக்காதே.
[..]

எங்கள் பூர்வீக மண்ணில்
நடக்கும் அவலங்கள்
உன் விழிகளில் தெரிகிறதா?
அந்நியன் வந்து
அன்னை மண்ணை ஆள்கையில்
[...]

இக் கவிதைகளைப் போன்றே வாம காந்தின் அநேகமான கவிதைகள் ஒரு படை யணிக்கான பாடலாக எனக்குள் ஒலித்தன. அந்த சிலையினுடைய உயிர்ப்பும் அவர் அந்த பிரபஞ்ச வெளியில் கவிதையையும், போரையும் இணைத்து பாடிய பாடல் எனக் குள் அதிர்ந்தது. அப்பொழுதுதான் அந்த சிலை எனக்குள் பன்மடங்கு அர்த்தங்களை எனக்குள் சொல்லத் தொடங்கியது. கல்லும் சிலையுமான அந்தக் கவிஞன் என் முன் தோன்றினான்.

பிரான்ஸ் நாட்டினுடைய தேசிய கீதமாக ஒலிக்கின்ற அந்தப் பாடலை எழுதிய ரூஜே து லீல் Rouget de l'Isle அவர்களின் பாடல் ஒலிக்கிறது. ஒரு போரின் பாடலாக ஒலிக் கின்றது. உரிமைகளுக்காக நடக்கும் நடைப் பாடலாக ஒலிக்கிறது. பிரெஞ்சுத் தேசியத் தின் அசைவு இன்னும் பிரபஞ்சத்தில் ஒளிர்ந்துகொண்டிருப்பதை நான் கண்டேன்.

தாய் தேசத்தின் குழந்தைகளே
வாருங்கள்!
மகிமையான நாள் வந்துவிட்டது!
கொடுங்கோலாட்சிக்கு எதிராக
இரத்தத்தால் தோய்ந்த தேசக்கொடி
ஏற்றப்பட்டுவிட்டது
கிராமங்களில் கொடிய இராணுவத்தின்
அலறல் உங்களுக்குக் கேட்கிறதா?
உங்கள் மனைவி பிள்ளைகளை
வெட்டிச் சாய்க்க
உங்கள் கரங்களை நோக்கி
வருகின்றார்கள்.[...]

ரூஜே து லீல் - (Rouget de l'Isle )

எனும் குரல் வாமகாந்தினுடைய குரலாக வும் எனக்குள் ஒலித்துக்கொண்டிருந்தது.

அப்பொழுதுதான் இந்த உலகம் கவி ஞனால் உயிர்க்கிறது. என எனது குழந்தை களிடம் சொன்னேன். கவிதை வேண்டும். எல்லா இடங்களிலும் கவிதை ஒலிக்கவேண் டும். எம்மைச் சுடர்ந்து ஒளிரப்பண்ணும் கவிதைகள் வேண்டும். இப்படித்தான் எனது கவிஞன் வாமகாந் என்னுடன் கூடவே பய ணித்தான்.

■ தா.பாலகணேசன்

# சிறைச்சாலை

மனித நடமாட்டமில்லாமல்
என்றுமில்லாத
மயான அமைதி
வீதியெங்கும் பரவியிருக்கும்.

நம்பிக்கையில்லாத நிலையில்
நாடுமுழுவதும்
எந்தக்கணத்திலும்
இருண்டுபோகலாம் என்ற
அச்சத்தோடு மௌனித்துப்போகும்.

அதி உயர்பாதுகாப்பு வலயத்தில்
இன்னும்...
இராணுவப் பாதுகாப்பு
பலப்படுத்தப்பட்டிருக்கும்.

அரச மாளிகைகளில்
பாராளுமன்ற வளாகத்தில்
விமான நிலையத்தில்
பொருளாதார நிலையங்களில்
பொது இடங்களில்
மக்கள் நடமாட்டம் இல்லாமல்
இராணுவ நடமாட்டம் அதிகரிக்கும்.

அவர்களின்...
சந்தேகத்துக்குரிய நபர்களாக
எதுவுமறியாத...
எங்கள் சகோதரர்களே
வழமைபோல
கைதுசெய்யப்படுவார்கள்.

அரச தொலைக்காட்சி
வானொலி
பத்திரிகைகளில்
இன்று...
மக்கள் வீதிகளில்
நடமாடவேண்டாம்
என அறிவிக்கப்படும்

சொந்தநாட்டுக் குடிமக்கள்
நடமாடக்கூட
சுதந்திரமில்லாத
அந்த நாள்தான்
அவர்களின்...
சுதந்திர தினம்...!!!

த.சரீஷ்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வீழுமுன் சில வரி

என் கால்கள் வலியன
நான்..
வாழ்வையிழக்கலாம்.

என் பாதம் பதித்த சுவடுகள்
இந்த மண்ணில் நிலைக்கும்.
நாளைய தூண்களில்
நல்வழிகாட்டலாய்..

என் பாதம் பதித்த சுவடுகள்
தேசத்தில் நிலையாக
தீ சுமந்து நிற்கும்
புதியவேதமாய்
புழுதி சுமந்த காற்றில்
மூச்சுக்கலந்து போக
வலிய என் பாதங்களாக
முளைத்த இனமொன்று
முட்டிமோதியெழுந்து
தடையாக எழும்
கரங்களைத் தகர்க்கும்.

## அமைதியற்ற ஒரு காலை

அந்தக் காலையோ
அமைதியற்றது.
விடியலைச் சொல்ல
சேவல் கூவவில்லை,
ஊர்த்தெருவில்
வேட்டுக்கள் முழங்கின.
காலைக் காற்றோடு
கலைந்து போன சிட்டுகளின்
கீதம் ஒலிக்கவில்லை.
புரியாத ஒலிகளாய்
பட்சிகளின் குரல்கள்.

'எண்ட புள்ளையாரே
இண்டைக்கும் நம்மடவூர்
ரவுண்டப்புப் போல'
தலையிலடித்தலறி
அம்மா சொல்வாள்.
முற்றங்களிலெல்லாம்
கவசக்கால்களே
இராட்சியம் நடத்தும்.

அப்பா அண்ணன்
ஆண்கள் யாவரும்
கோவிலின் முன்னே
குவிக்கப்படுவர்.
அவர்களுக்குத் தேவை
தாண்டவம் புரிவதற்கு
தமிழனின் உடல்.

வேட்டையின் பயன்
வெளிறிய முகங்களுடன்
தாயுள்ளம் கதற,
இளைய குருத்துக்கள்
ஏற்றப்படுவர் ஊர்தியில்.
இனி அவர்களை
அந்தத் தாயுள்ளங்கள்
என்று தழுவுமோ?
அன்றி சேதி கேட்டு
இதயத்தில் இடி சுமக்குமோ



## மனிதப்புதையல்கள்

அகழ்ந்தெடுக்கப்பட்டதாய்
செய்திகள் வரும்.
இவள் என்றும் போலவே
கதறிப் புலம்புவாள்.
ஒட்டிய வயிறு கொண்ட
குழந்தைகள் தடுமாறும்.

நகர்க்கிணற்றில்,
தெருப்புதரில்
மலக்குழியிலென
மனிதக் கூடுகள்
மீளும் போதெல்லாம்
இவள் ஓடுவாள்.

அடையாளம் இருக்காது
அவளவன் தானென
இனங்காட்ட
எதைக்காண்பிப்பாள்.

நாளையும்
இதயத்தில் இடியிறங்க
செய்திகள் வரும்.
அதிலும் இவள் துணைவன்
இல்லாதிருக்கலாம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கப்டன் வாமகாந் கவிதைகள்

வீழுமுன் சில வரிகள் எனும் கவிதைத்தொகுப்பிலிருந்து....





## நாளை புலரும் தேசமதில் சிறகடிக்கும் சிட்டானால்

விடியலுக்காய் நிமிர்ந்து
விடுதலைப்போர் புரியும்
இந்தத் தேசம் - நாளை
புலர்ந்து விடும் வேளையில்
சிறகடித்து வான் பறக்கும்
சிட்டாய் நானிருந்தால்

அலைபாடும் கடல் மீது
விளையாடி கவி பாடி
வந்து கரைமோதும் அலையோடு
பல நூறு கதைபேசி
மகிழ்ந்து குலாவி
உயர்ந்து பறந்திடுவேன்.

கலைந்த மேகமதாய்
சிதைந்த உறவுகள்
இணைந்து பாடியாடும்
இனிய ஊர் மீது
எழுந்து பறந்து
இன்புற்றிருப்பேன்

வளங்கள் நிறைந்த
தேசம் தன்னில்
உயர்ந்து வளர்ந்த
மலைகளெங்கும்
தடைகளின்றி
பறந்து உளம் திளைப்பேன்

புலிமறவர் புரிந்த
புயலான போரின் முன்
பணிந்து போன எதிரியின்
படை முகாம் காண்பேன்.
அவ்விடம் நின்று ஓர்
கவிதையும் புனைவேன்.

வெங்களமாடிய எம் வீரர்
துயிலுமிடஞ் சென்று
கண்ணீர் சிந்தி
காணிக்கை செலுத்தி
வண்ணமலர் கொண்டு
அவர் தாள் பணிவேன்.

தமிழீழத்தாயின்
எண்ணங்கள் ஈடேற
செங்குருதி சிந்தியவர்
சுமந்து நின்ற உணர்வுகளை
உள்ளம் உருக
மீட்டிப்பண்ணிசைப்பேன்.

செந்தமிழைக் காத்த எம்
தலைவனைக் காண்பேன்.
சந்ததியின் மனங்களிலே
சமதர்மம் வளர்ப்பேன்.

எங்கு சென்ற போதிலும்
இருளை நான் மறப்பேன்
தடையின்றி இடரின்றி
தமிழீழமெல்லாம் பறப்பேன்.

வங்கக்கடல் தொட்டு வரும்
தென்றலானதை சுவைப்பேன்.
வரிப்புலிகள் அணிவகுப்பை
கண்டு நான் இரசிப்பேன்.

வந்ததிங்கு வசந்தமென
புதிய பண் இசைப்பேன்.
வண்ணச் சிறகடித்து இந்த
மண்ணை நான் அளப்பேன்.

## வேண்டுதல்

யாரோ சொல்கிறார்கள்
உன்னை நம்பாதேயென்று.
எப்படி நானிருப்பேன்?

கரையும் பொழுதுகளெல்லாம்
உன்னையே நினைவில் நிறுத்த
கால்கள் மிக வேகமாய்.

யார் சொன்னால் என்ன..?
எனக்கு நீ
எதையும் தரவேண்டாம்

உன்னிடம் நான் கேட்பது
என் தாய் மடியை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# ஒளியின் கண்ணீரும் கதையின் கதையும்- 5

தி.தவபாலன்

## திறந்தவெளிச் சிறையாக யாழ்ப்பாணம்

போர்நிறுத்தம் வந்தபின்னர் நான் முதல்த்தடவையாக 7 ஆண்டுகளுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் செல்கிறேன். யாழ்ப்பாணத்தின் உட்பகுதியில் மக்கள் ஏதோ தாம் சுதந்திரப்பிரசைகள் போல நடமாடினாலும் கடற்கரைக்குப்போகும்போது அவர்கள் ஒரு சிறையில் வாழும் கைதிகள் என்பதைக் கண்டேன். அப்போது அதனை ஒளிப்பட ஒப்படையாகச் செய்யும் எண்ணத்தில் அதனைச்செயலாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டேன். நான் ஒரு தமிழன் என்பதால் படையினரின் அரண்கள், வேலிகளைப் படம்பிடிக்கமுடியாது. படம் பிடித்தால் கைது செய்யப்படுவேன். இதனால் இரகசியமாகவே படங்களை எடுக்க வேண்டியதாயிற்று.

யாழ்ப்பாணத்தின் அடையாளமாக இப்போது இருப்பது 1981ல் சிங்களக்காடையரால் எரியூட்டப்பட்ட யாழ் நூலகம். அடித்துச் சேதமாக்கப்பட்ட தந்தை செல்வா நினைவுத்தூபி. நூலகத்தை புனரமைத்து தாம் செய்த அட்டூழியத்தை ஸ்ரீலங்கா அரசு மறைத்து நிற்கின்றது. என்னதான் நூலகம் அழகுபடுத்தப்பட்டாலும் அது சிறைக்குட்தான் இருக்கிறது என்பதைக் காட்டவேண்டும். இராணுவ வேலி கடற்கரையிற் போடப்பட்டுள்ளது. கடலுட் சென்று படம் எடுக்க முடியாது. கடலில் இறங்க மீனவர் பாஸ் வேண்டும். அதனால் வேறு கோணங்கள் தேடினேன். யாழ்ப்பாணம் தீவுக்குச் செல்லும் பண்ணை வீதியால் தீவுக்குச் சென்றபோது அந்தக்கோணம் கிடைத்தது. பண்ணை வீதியின் இருபக்கமும் இராணுவ வேலிபோடப்பட்டுள்ளது. இதில் 50 மீற்றருக்கு ஒரு காவலரண்.

இதற்குள் படம் எடுக்கமுடியாது. இது உயர்பாதுகாப்பு வலயம். இதனால் கண்டபாட்டுக்கு கமரா எல்லாம் எடுக்கமுடியாது. இதனால் பல தடவைகள் பல நாட்கள் இதனால் பயணம் செய்து எந்த அரணில் இராணுவம் இருக்கிறது. எது டம்மியாக இருக்கிறது. எந்த அரணில்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நின்று பார்த்தால் நாம் நிற்பது இராணுவத்துக்குத் தெளிவாகத் தெரியாது என்று அவதானித்து ஒருநாட் காலை வேளையில் படைகள் விழிப்படைய முன்னர் தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு சிறிய மொபட் மோட்டர்சைக்கிளில் பயணித்து தெரிவுசெய்த கோணத்தின் இடத்தில் சடாரென்று நின்று பழையதாக இருந்து பையினுள் இருந்து கமராவை அதிவேகத்தில் எடுத்து ஒன் பண்ணி கோணம். பிரேம் போக்கஸிங் பார்த்துப் பிலிம் கமராவில் 80 மில்லிமீற்றர் லென்ஸில் அதிவேகத்தில் இரண்டு சொட்கள் எடுத்து அதேவேகத்தில் கமராவைப் பையுள் வைத்துக் கிளம்பினேன். அப் போது கிட்டவாக மோட்டர் சைக்கிளில் வந்த வயோதிபர் ஒருவர் என்ன ஆமிட்டை உழக்குப்படப்போறியோ என்று பேசினார். இதன் பின்னர் இதே பகுதியில் கடலில் மீன்பிடி சிறைக்குள் நடக்கிறது என்பதை காட்ட இதே பாணியில் படங்கள் எடுத்தேன். சூரிய ஒளியில் பளபளக்கும் கடல்கூட இப்படித்தான் சிறைப்பட்டிருக் கிறது என்பதை சித்தரிக்கும் வகையிலும் இந்தப் பண்ணைவீதிக் கோணங்கள் சாதகமாக இருந்தன. கடலை மேடுறுத்தி அமைந் துள்ள இந்த வீதியில் சூரியனின் உதயத்தையும் மறைவையும் பார்க்கலாம். இதன் வழியாகவே யாழ்ப்பாணம் சிறைக்குள் இருப் பதைச் சித்தரிக்க எடுத்தேன்.

எப்படி யாழ்ப்பாணம் இராணுவச்சிறையாக உள்ளது போல கடலும் இராணுவத்தால் மக்களுக்கு சிறைவைக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்டக் கோணங்கள் தேடினேன். குருநகற் பக்கம் கடலுக்குக் கிட்டப்போக முடியாது மிக நெருக்கமாக இராணுவத்தி னர். கடலை மறைத்து கிடுகு வேலியும் அமைத்திருந்தனர். இதனால் வேறு கோணங்கள்தேடினேன். நாவாந்துறையில் முட் கம்பிவேலிகள்தான் இருந்தன. கிடுகுவேலிகள் இல்லை. ஆனால் படையரண்கள் நெருக்கமாகத்தான் இருந்தன. காக்கைதீவுக்கு போனேன். இங்கு மீன்சந்தைக்குள்போய்க் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையில் இருந்து வந்ததாகவும் மீன்பிடித்ததொழில் பற்றி செய்தி செய்கிறேன் என்று கதைத்துக்கொண்டு மீனவர்களைப் படம் பிடித்துக்கொண்டு கடலைச்சிறைவைத்திருக்கும் பாங்கையும் அவர்களுக் குச் சந்தேகம் வராதபடிக்குப் படம்எடுத்தேன்.

நாவாந்துறையில் கரையோரம் இறால் பதனிடும் இடங்களுக்குப் போய் அதற்குள் இருந்தும் கடல்சிறைவைக்கப்பட்டுள்ளதை எடுக்கமுடிந்தது. இதை விட குருநகர் இறங்கு துறையை எடுக்கமுயற்சி செய்தேன். குருநகர் நண்பர் கொலின் உடன் இடம் தேடி ஒரு மாடியைத் தெரிவுசெய்தேன். மாடிக்கருகாக இராணுவம் இருக்கிறது. கொலின் உறவினராக அவர்கள் இருந்ததால் அவர்கள் வீட்டிற் போய் ஜன்னலில் ஒருவரை நிறுத்தி அவரின் தோழில் கமராவை வைத்து தெரியாதபடிக்கு பறவைப்பார்வையில் அந்தக் காட்சிகளைப் படம்பிடிக்கமுடிந்தது. எங்கட நிலத்துக்கு எங்கட கடலுக்கு என்ன நிலைமை பார்த்தீர்களா. எப்ப நாங்கள் இதில சுதந்திரமாக நிற்கப் போறம். இதுதான் என்னிடம் இந்த யாழ்ப்பாணம் சிறை ஏற்படுத்திய கேள்வி.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒளிப்படம்: தி.தவபாலன்



தமிழ தேசிய ஆவணச சுவடிகள


www.tamilarangam.net





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




■ மணலாறு விஜயன்

# அட்டப்பள்ளத்தில் கலைந்துபோன அமைதி

அம்பாறை மாவட்டத்தின் வளங் கொழிக்கும் கிராமங்களில் அட்டப்பள்ளக் கிராமும் ஒன்று. மதத்தால் வேறுபட்டாலும் இனத்தால், மொழியால் ஒன்றுபட்ட முஸ் லீம் மக்கள் இனத்தின் மகிமையினையும் மொழியின் பெருமையினையும் சிங்கள இனவெறியர்களிடம் விலைபேசி விற்று விட்டார்கள். இனத்துவத்தை இழந்து, மொழியின் மகத்துவத்தை இழந்து, மொழியின் மகத்துவத்தை மறந்து சிங்கள இராணுவத்தோடு சேர்ந்து தமிழ் மக்க ளைக் கொன்றுகுவித்தார்கள். நிலத்தை யும், வீடுகளையும் வியர்த்துழைத்த சொத்துக்களையும் பறித்தார்கள். அழித்து ஆக்கிரமித்தார்கள். ஏழாயிரம் விதவைகள் இன்று அம்பாறை மாவட்டத்தில் வாழ் கின்றார்களென்றால் அவர்களின் கண வன்மாரைக் கொன்றொழித்த கொடுமை யில் சிங்களப்படையோடு பாதிப்பங்கு முஸ்லீம்களுக்குமுண்டு.

பணத்துக்காக இனத்தை மறந்து போன முஸ்லீம் கொடூரவாதிகளின் கிரா மங்களுக்கு நடுவே அமைந்துள்ளது அட் டப்பள்ளம். கிழக்கே கடலும், மேற்கே ஆறும், வடக்கிலும், தெற்கிலும முஸ்லீம் கிராமங்களையும் கொண்டது அட்டப் பள்ளம் வறுமை என்ற சொல்லை விரட்டி விடும். வயல் நிலங்கள் நிறைந்துகிடக் கின்ற பூமி, கடல்வளமும், ஆற்று வளமும், இக்கிராமத்தின் பொருளாதாரவளம் குன் றாமற் காத்துநிற்கின்றன. இக்கிராமத்தின் வளம்தான் எதிரியின் கண்களைக் கவர்ந் தது. கொலை, தீவைப்பு, பாலியல் கொடுமை, கொள்ளை எனத் தொடர் நடவ டிக்கையால் இக்கிராமத்துமக்களை அடித்து அழித்து விரட்டிவிட சிங்களப் படைகள் முடிவெடுத்தன. தங்கள் இன அழிப்புப்பசிக்கு முஸ்லீம்களையும் கரம் கோர்த்துக் கொண்டார்கள்.



1983ம் ஆண்டிலும், 1990ம் ஆண்டி லும், பொதுமக்கள் கணக்கின்றிக் கொல்லப் பட்டார்கள், காணமற்போனார்கள். விசேட அதிரடிப்படை முகாம்களை நிறுவி அந்த முகாம்களையே சித்திரவதைக் கூடமாக் கினார்கள். வெட்டுப்பாட்டி, கொலைப்பாட்டி என்றெல்லாம் இவ்வதிரடிப்படைக் கொலை ஞர்களைத் தமிழ்மக்கள் காதோடுகாதாகப் பேசிக்கொண்டார்கள். கொலை செய்ததை, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதை கண்டவரும், கண்டதை வாய்திறந்து சொன் னவரும் கூடக் காணமற் போனார்கள். அத னால் வாயிருந்தும் ஊமைகளாய், கண்ணி ருந்ததும் குருடர்ககளாய் வாழும் இக்கி ராமத்துத் தமிழ்மக்களின் துயரக்கதையின் ஒருசில உண்மைகளை அக்கிராம மக்க ளோடு பகிர்ந்துகொண்டேன்.

பாலியல் வல்லுறவோடுகூடிய படு கொலையில் தனது அழகிய மூன்று பெண் பிள்ளைகளையும், உடன்பிறந்த சகோத ரர்களையும் இழந்துவிட்ட அட்டப்பள்ளம் கமலாதேவியின் ஊமை உள்ளத்திலிருந்து கண்ணீர்க்கதையொன்று வெளிவந்தது.

“என்ர பேரினை ஒரு இடத்திலேயும் சொல்லிப்போட வேண்டாம் கிளி. நான் சொன் னதைக் கேள்விப்பட்டால் அண்டைக்கே வந்து கொண்டுபோவாங்கள். என்னோட பிள் ளையைப் பறிகொடுத்து பத்து வருசத் துக்குமேல். கடவுளிட்டச் சொல்லியழுதன். பத்து வருசத்துக்குப்பின்னால ரெண்டு பிள் ளைகள் பிறந்திருக்கிறார்கள். அந்த ரெண்டு பேரையுமாவது நான் காப்பாற்ற விரும்பிறன் கிளி. தயவுசெய்து என்ர பெயரைமட்டும் பேப் பரில, ரேடியோவில சொல்லிடாதீங்க” என்று தொடங்கும்போதே அச்சத்தோடுகூடிய வேண்டுதலைக் கொடுத்தாள் அந்தத்தாய். 1990ம் ஆண்டு, கார்த்திகை மாதம், 21ம் திகதி என்னோட சகோதரர்களோட என்ர பிள் ளையளும் சேர்ந்து கொழும்புக்குப் போனா ங்க. கொழும்பில நம்மட தங்கச்சீட கலியா ணத்திற்கென போனவங்கள மல்வத்தையில செக் பண்ணீட்டு விட்டிட்டாங்க. திரும்ப வளுதாப்பிட்டி செக்கிங்கில பஸ்சைவிட்டு இறக் கீட்டாங்கள். விசாரிச்சுப்போட்டு விடு றமென சொல்லிப்போட்டு பத்துப்பேரையும் வெள்ளை வானொண்டில STF ஏத்தீட்டு காம்புக்கு கொண்டு போனாங்கள். ஒரு முஸ்லீம் ஓடிவந்து சொன்னான் வளுத்தாப் பிட்டி செக்கிங் பொயின்ரில வடிவான பொம்பிள்ளைப்பிள்ளைங்கள STF இறக்கி வெள்ளவானில கொண்டுபோறாங்களெண்டு. நம்மட அம்மா பரமேஸ்வரி, என்னுடைய மகன் அனித்தியா, தங்கச்சி புஸ்பராணி, தங்கச்சீ புருசன் சிதம்பரநாதன், தங்கச்சி யோகராணி பேரப்பிள்ளையள் பேரிஹா, புருசலட்சுமி, அட்டப்பள்ளம் விதானையார் பொஞ்சாதி சிவகாமி (விதானையார் கதி ரேப்பிள்ளை) அரியநாயகம், அட்டப்பள்ளம் பெடியனொருவன் என எல்லாரையும் தேடாத இடமில்லை, அவங்கள விடுவிக்க எத்த னையோ எம்பி மாரையெல்லாம் போய்சந்திச் சம். சி.ஐ.டி பகுதியினரிடம் கூட போய்முறை யிட்டோம். எல்லோரும் கடைசியாய் சொன் னாங்கள் “அவங்கள் உயிரோட இல்ல. போய்க்கச்சேரியல நிவாரணம் எடுங்க” என்று

மௌனப் புதைகுழிகள்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


எங்கட உயிருக்கு உத்தரவாதமும் பெறுமதியுமில்ல அப்படியிருக்க நிவாரணம் எடுக்கவுமில்ல.

என்னோட பிள்ளையள என்னமாதிரியெல்லாம் கொடுமைப்படுத்திக் கொண்டானுகளோ தெரியாது. நினைச்சு நினைச்சு அழாத நாட்கள் இல்லை. ஒருபாவமும் அறியாத என்ரபிள்ளையள ஏன்தான் இப்படிக் கொன்றாங்களோ தெரியாது. இதுக்கெல்லாம் முடிவுகாலம் எப்பவரப்போகுது. நடந்த சம்பவத்தை வெளியில சொல்லிப் போடுவானென்று CTP றைவர் தர்மலிங்கத்தைக்கூட கொண்டுபோய்க் கொலை செய்துபோட்டாங்கள். கொஞ்சங் கொஞ்சமாய் அழிச்சு இப்ப கன கிராமங்களையே இல்லாமப் பண்ணீட்டாங்க. இன்னுங் கொஞ்சக்காலத்தில எங்கட அட்டப்பள்ளம் கிராமமும் முஸ்லீம் கிராமமாய் அல்லது சிங்களக் கிராமமாய் மாறிப் போய்விடும்" என ஆத்திரமும், வேதனையும்பொங்க அழுதமுது சொன்னார்.

கொலைஞர்களிடம் தன் கணவனைப் பறிகொடுத்து பிள்ளைகளோடு வாழத்துடிக்கும் விதவைத்தாய் திருமதி பொன்னம்பலம் ராஜேஸ்வரி சிலநிமிடம் தனது துயரவாழ்வைச்சொல்லிக்கொண்டார். 1990ம்ஆண்டு, ஆவணி மாதம், 2ம் திகதி ஒவ்வொரு கிராமமாய் சுத்திவளைச்சு எல்லா ஆம்பிளையும் பிடிச்சாங்கள். நம்மட புருசனோட, பாக்கியநாதன், ரவீந்திரன், வினாயகமூர்த்தி, சுனேந்திரன் என ஐஞ்சுபேரை இடையில நம்மட பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்தில வச்சு சுட்டுக் கொண்டாங்கள். விடியச்சாமத்தில வந்து சுத்தி வளைச்சு பிடிச்சவங்கள் பிடிச்சுக் கொண்டு போகேக்க வீதியில இடைக்கிடையே ஐஞ்சுபேர், ஏழுபேர் என சுட்டுப் போட்டாங்கள். காம்பில கொண்டுபோய் நாப்பத் தஞ்சு பேருக்குமேல கொண்டிட்டாங்கள்.

அம்பாறை மண்ணில் தமிழர்களின் உயிரும், உடமைகளும், நிலமும் வீடுகளும் சிங்கள அரசுகளின் கொலைத் தாண்டவ பயிற்சிக்களாமாகிப் போனதை இந்த உலகம் எப்போது உணரும்? அல்லது உணராமலே உண்மைகள் உறங்கி விடுமா?

நிந்தவூர், திராய்க்கேணி அட்டப்பள்ளம் என மாறிமாறி பிடிச்சுக்கொண்டுபோய் சுட்டுக் கொண்டிருந்தால எல்லாக் கிராமத்தாக்களும் இடம்பெயர்ந்து ஓடிப்போய் காரைதீவுப் பள்ளிக்கூடத்தில இருந்தோம். அங்கேயும் வந்து சுத்திவளைச்சுப் பிடிச்சிட்டுப்போனான். பிடிச்ச இடத்திலேயே ராஜா, பழனி, காளி என ஏழுபேரையும் சுட்டுப்போட்டிட்டு மற்றவங்களைக் கொண்டு போனவங்கள்தான் இண்டைக்குவரையும் யாருமில்ல. காம்பில போய்க்கேட்டா அவங்க இல்ல கச்சேரியில போய்ப் பதிஞ்சு நிவாரணம் எடுங்க எனச்சொல்லுறாங்க. காரைதீவுப்பள்ளியில இதேவருடம் மார்கழி மாதம் பிடிச்சிட்டுப் போனவங்க அங்க வச்சுத்தான் CTP டிரைவர் தர்மலிங்கத்தையும் பிடிசுட்டாங்கள். காரைதீவு, வீரமுனை, அட்டப்பள்ளம், திராய்க்கேணி, நிந்தவூர், ஒலுவில் என எல்லாக் கிராமங்களிலும் இருக்கிற விதவைப் பெண்களைக் கணக்கெடுத்தாலே எத்தினை ஆயிரம்பேரை கொன்றிட்டாங்களெண்டது தெரியும். எல்லாருமே ஆமி சொன்னதைக்கேட்டு இனந்தெரியாத நபர்களால சுட்டுக்கொல்லப்பட்ட தாய் பதிவு செய்து நிவாரணம் எடுத்திட்டாங்க. நிவாரணத்தையெடுத்தா நம்மட புருசன் கிடைச்சிடுவாரா? அவங்க தாங்க செய்த கொலையை மறைக்க இப்பிடிப் பதியவச்சு நிவாரணம் கொடுக்கிறாங்கள். திட்டமிட்டு அரசாங்கமே செய்யிற இந்தக் கொலையினை யார்தான் விசாரிக்கப்போறாங்க. செய்யிறதையும் செஞ்சிட்டு நிவாரணம் தந்து ஏமாத்தப்பாக்கிறானுகள். எப்பவோ ஒரு நாளைக்கு இவனுகளுக்கு அழிவு வராதா என திருமதி பொன்னம்பலம் ராஜேஸ்வரி தன் உள்ளக் குமுறலை வெளியிட்டார்.



நாளுக்குநாள் நிமிடத்துக்குநிமிடம் சிங்களத்தாலும் முஸ்லீம் கொடுமைவாதிகளாலும் அழிந்துபோகும் அம்பாறை மக்களின் உயிரும், உடமைகளும் கணக்கிட முடியாதவை. ஆக்கிரமிக்கப்பட்ட கிராமங்கள் பெயர்மாற்றம் பெற்று சிங்கள, முஸ்லீம் கிராமங்களாகிவிட்டகதை யார் செவிக்கும் எட்டாதவை. அம்பாறை மண்ணில் தமிழர்களின் உயிரும், உடமைகளும், நிலமும் வீடுகளும் சிங்கள அரசுகளின் கொலைத் தாண்டவ பயிற்சிக்களாமாகிப் போனதை இந்த உலகம் எப்போது உணரும்? அல்லது உணராமலே உண்மைகள் உறங்கி விடுமா?



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போராளிகள் சிந்தும் குருதியில் மலர்கிறது வாழ்க்கை



புலுகுணாவ முகாம் தாக்கி அழிப்பு நிகழ்வை தளபதி கேணல் ரமேஸ் அவர்கள் விபரித்துச் சொல்கிறார்.

95ம் ஆண்டு நாங்கள் அம்பலாந்துறையில் அமைந்திருந்த ஒரு விசேட அதிரடிப் படை முகாமைத் தாக்கி அழிப்பதற்காய்த் திட்டங்கள் வகுத்து சண்டையை ஆரம்பித்த பொழுது அந்தத் தாக்குதல் எமக்கு ஒரு தோல்வியான தாக்குதலாகவே அமைந்திருந்தது அதாவது முன்கூட்டியே எமது திட்டங்கள் எதிரிக்குத் தெரிந்திருந்த காரணத்தினால் அந்தத் தாக்குதலிலே நாங்கள் எமது போராளிகளை இழக்க நேரிட்டது இந்த முகாம் தாக்குதல் ஒரு தோல்வியான தாக்குதலாக இருந்த காரணத்தினால் நாங்கள் உடனடியாக பலமான ஒரு விசேட அதிரடிப்படை முகாமொன்றைத் தாக்கி அழிக்கவேண்டும் என்று மீண்டும் திட்டமொன்றை வகுத்தோம்.

அம்பலாந்துறை முகாம் தாக்குதல் நடந்து மூன்றாம் நாள் நாங்கள் அந்த முகாமை வேவு பார்க்க ஆரம்பித்தோம். கிட்டத்தட்ட அந்த புலுகுணாவ முகாம் தாக்குதலுக்கு ஒரு வருடக் கணக்காக வேவுப்பணிகள் தயார்ப்படுத்துதல்கள் நடந்தது.

அந்த முகாம் எமது எல்லைப் பிரதேசத்திலிருந்தது. அதாவது சிங்கள தமிழ் எல்லைப் பிரதேசத்திலிருந்தது; அந்த இடத்திலே ஒரு தமிழ் கிராமம் இருந்தது. ஆரம்ப காலத்தில் அந்தத் தமிழ்க் கிராமத்தை, தமிழ் மக்களைப் படுகொலை செய்து, அந்த மக்களை விரட்டி அடித்த பிற்பாடு, சிங்கள மக்களைக் குடியேற்றி அவர்களுக்குப் பாதுகாப்பாகத்தான் அந்த விசேட அதிரடிப் முகாம் அந்த இடத்தில் அமைந்திருந்தது; அது ஒரு சவாலான ஒரு முகமாயும் இருந்த காரணத்தினால் நாங்கள் அந்த முகாமைத் தெரிவு செய்து எடுத்தோம். ஒரு நாள் நாங்கள் வேவு பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, அந்த முகாமிலே ஒரு ஆட்லரி இருப்பதை நாங்கள் கண்டோம்; அந்த ஆட்லரியைக் கண்டவுடனே நாங்கள் எங்களுடைய பணியை மிகவும் தீவிரமாக செயற்படுத்தினோம்.

வேவு வீரர்களின் மூலம் நாங்கள் மிகவும் துல்லியமான முறையிலே அந்த வேவுகளை எடுத்து, தலைவர் அவர்களிடம் கொடுத்து திட்டங்களை வகுக்க வேண்டும் என்று திட்டம் போட்டோம்; அந்த வேவுப் பணியை மிகவும் தீவிரமாகச் செய்து முடித்தோம், இதிலே குறிப்பாக அந்த வேவுப் பணி வீரர்களை பற்றிக் குறிப்பிடவேண்டி இருக்கின்றது. அந்த முகாம் பலமாக இருந்த காரணத்தினாலும் நகர்வுக்கு எமக்கு சாத்தியப்பாடுகள், அதாவது சாதகங்கள் குறைவாக இருந்த காரணத்தினாலும் எமது வீரர்கள் அங்கே செய்த



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடமைகளை, அவர்களுடைய சாதனைகளை நாங்கள் குறிப்பிடவேண்டியிருக்கின்றது.

ஆரம்பத்திலே இந்த முகாம் வேவுப்பணியைச் செய்துகொண்டிருக்கின்ற பொழுது, விசேட அதிரடிப் படையினுடைய செயற்பாடு முகாமுக்கு வெளியிலே மிகவும் தீவிரமாக இருந்தது. எமது வேவு அணி வீரர்கள் பலமுறை தாக்கப்பட்டிருந்தார்கள். எதிரி பதுங்கித் தாக்குதலைக் கூடச் செய்தான். இவ்வாறு பலமுறை தாக்கப்பட்டார்கள். செல் தாக்குதலின் போதுகூட எங்களுடைய வீரர்கள் காயப்பட்டிருக்கின்றார்கள்.

அதையும் அவர்கள் பொருட்படுத்தாமல் விடா முயற்சியுடன் செயற்பட்டார்கள். வெளியிலே திரிந்த விசேட அதிரடிப்படையினருடன் சண்டைகள் செய்து முகாம்களுக்குள்ளே முடக்கினார்கள். எங்களுடைய வேவு அணியினர் நடந்துகொண்டிருக்கும் பொழுது இரகசியமாகப் போராளி ஒருவர் கம்பித் தடையைத் தூக்கிப் பிடித்துக்கொள்கின்ற பொழுது போராளிகள் அதற்குக் கீழாலே பூந்து அங்கிருக்கின்ற அந்தக் காப்பரண்களைப் பார்த்து விட்டு வருவார்.

அது வழமையான அவருடைய செயற்பாடு. ஒவ்வொரு வேவுப் போராளியையும் உள்ளே நகர்த்திக்கொண்டிருக்கின்ற வேளையிலே அந்தக் கம்பித் தடையிலே ஒரு பெரிய நாகபாம்பு ஒன்று. அந்தக் கம்பியின் மேலால் ஏறி வரும் பொழுது அவர் அந்தக் கம்பியைத் தூக்கிக் கொண்டிருக்கிறார். அந்தப் பாம்பைக்கண்டு அந்தக் கம்பியை விட்டால் அதிலிருக்கிற அந்த தடயப் பொருட்கள் போடும் சத்தம் எதிரிக்குக் கேட்டு விடும் அந்த இடத்திலே போராளிகள் உயிருடன் திரும்புவதும் ஒரு சந்தேகமாக இருந்தது. உடனே, அவர் அந்த நேரத்திலே மிகவும் துணிந்து அப்படியே அந்தக் கம்பியைத் தூக்கிக் கொண்டிருக்கும் பொழுது அந்த நாக பாம்பு அவருடைய கழுத்தால ஏறி முதுகால ஏறிக்கொண்டு அடுத்தப் போராளிக்குப் பக்கத்தால் கடந்து போனது.



அப்படித்தான் அந்தப்பாம்பு நகர்ந்த பிற்பாடு மீண்டும் அவர்கள் அந்தத் தடையினூடாகச் சென்று, அந்த எதிரியினுடைய பிரதேசத்துக்குட் சென்று வேவுப் பணியை அன்றிரவு மிகவும் துல்லியமாகப் பார்த்து வந்து எம்மிடம் குறிப்பிடும் பொழுது, அந்த வேவு வீரர்கள் எந்தளவு துணிந்து ஒரு அர்ப்பணிப்போடு அங்கு செயற்பட்டுக் கொண்டு அந்த வேலையை முடித்தார்கள் என்பது ஒரு மிகவும் உணர்வுபூர்வமான, துணிவான ஆச்சரியப்படக்கூடிய விடயமாக இருந்தது. எனவே ஒவ் வொரு தாக்குதல்களையும் நாங்கள் செய்வதற்கு முதல் அந்த தயார்படுத்தும் பொழுது வேவு அணியினுடைய செயற்பாடுதான் எங்களுடைய அந்த இறுதி வெற்றியை இலக்கை அடைவதற்குக் காரணமாக இருக்கிறது.

இரவிலே சென்று சென்று அவர்களுடைய கடமைகளை முடித்து முடித்துக் கொண்டு வருவார்கள். வந்து ஒரு நாள் பக்கத்திலே அந்த விசாரமலை என்று சொல்லுகின்ற ஒரு முக்கியமான மலையொன்று அந்த மலையிலே நாங்கள் அந்த வேவு அணியினருடன் நின்று அதிகாலையிலே கருவியைக் கொண்டு அந்த வேவுப் பணியைப் பார்த்து, துல்லியமாக கணிப்பிட்டு அந்த வரைவிடங்களை செய்துகொண்டிருந்தோம்.

அந்த வேளையிலே ஒரு நாள் காலை ஏழரை மணி இருக்கும் எங்களுடைய போராளி ஒருவர் அந்தக் கருவியை வைத்துப் பார்க்கும் பொழுது சொன்னார் “ஒரு முக்கியமான ஆயுதம் ஒன்று இருக்கு பாருங்கோ” என்று நாங்கள் பார்த்தோம் அது ஆட்லரி; நாங்கள் எதிர்ப்பார்க்கவில்லை; அந்த முகாமில் இருக்கும் என்று சொல்லி. அதுவும் இந்த ஆட்லரியைக் கண்டவுடனே நாங்கள் சந்தோசப்பட்டோம். மகிழ்வடைந்தோம். எல்லாரும் அந்த மலையிலிருந்து துள்ளி குதித்து பாட்டெல்லாம் பாடினோம். எப்படியோ அந்த ஆட்லரியை எடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டோம். நீண்ட காலம் வேவுப் பணி தொடர்ந்துகொண்டு எவ்வளவு காலம் சென்றாதலும் துல்லியமாக அந்த வேவுப் பணியை நாங்கள் முடித்து, இந்த ஆட்லரியை எப்படியும் கையில எடுக்கவேண்டும் என்ற ஆதங்கம் வளர்ந்து விட்டது. உடனடியாக நாங்கள் அந்த வேவு வீரர்களிடம் இதில இரகசியம் என்பது மிக முக்கியம் என்பதை வலியுறுத்திச் சொன்னோம். உடனே, அதை எல்லோரிடமும் குறிப்பிட்டோம். ஆட்லரி இருப்பது எவருக்கும் தெரியக்கூடாது நாங்க எங்கட பணிகளை முடிச்சு இரகசியமான முறையிலே இந்தத் தாக்குதலை செய்து, இந்த ஆட்லரியை நாங்கள் எடுக்கவேண்டும். அதாவது இந்த ஆட்லரியை எடுத்து தலைவரிடம் கொடுக்கவேணும் என்று சொல்லி நாங்கள் எங்களுக்குட் கதைத்தோம்.

அதன் பிற்பாடு, அந்த வீரர்கள் மிகவும் துல்லியமாக வேலையைச் செய்துகொண்டிருந்தார்கள். நாங்கள் அனைத்து வேவுப்பணிகளையும் முடித்து தலைவரிடம் அந்த விசேட அதிரடிப்படை முகாமினுடைய வரைபடத்தைக் காட்டவேண்டும் என்று சொல்லி வன்னிப் பிரதேசத்துக்கு வரைபடத்தைக் கொண்டுசென்றோம். அதன் பொழுது நாங்கள் இன்னும் பல இராணுவ முகாம்களுடைய வரைபடங்களைக் கொண்டுவந்திருந்தோம். உடனடியாகத் தலைவர் அதைப் பார்த்துவிட்டு அந்த ஆட்லரி இருக்கின்ற விசேட அதிரடிப் படை முகாமை உடனடியாக தாக்குவதற்குரிய திட்டங்களை நேரடியாகத் தலைவர் கொடுத்தார். தாக்குதலிலே நாங்கள் குறிப்பாக குறிப்பிடுவது, மட்டக்களப்பு பிரதேசத்திலிருந்த இராணுவ முகாம் தாக்குதலுக்கு, நேரடியாக ஒரு இராணுவ விசேட அதிரடிப் படை முகாமினுடைய வரைபடத்தைப் பார்த்து, துல்லியமாக எங்களுக்கு தலைவர் அவர்கள் திட்டங்களை வகுத்து தந்ததும் அந்த சண்டையினுடைய வெற்றிக்கு ஒரு பெரிய காரணமாக இருந்தது. அதன் பிற்பாடு வன்னிப் பிரதேசத்திலே எங்களுக்குரிய பணிகள் தரப்பட்டது. அதன் பிற்பாடு இந்த திட்டம் மட்டக்களப்புக்கு எங்களுடைய தேசியத் தலைவர் அவர்களால் அனுப்பப்பட்டு அந்த முகாமுக்குரிய, தாக்குதலுக்குரிய அணிகள் பிரிக்கப்பட்டு அந்த முகாமுக்கு நான்கு பாதைகள் போடப்பட்டது. இரண்டு மாதங்களுக்கு மேலாக அந்த நான்கு பாதைகளுக்குரிய பயிற்சிகள் தொடர்ந்து கொடுக்கப்பட்டிருந்தது. தாக்குதலுக்குச் செல்லவிருந்த அனைத்து வீரர்களுக்கும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெரியும் தலைவர் அவர்களால் போடப்பட்ட திட்டம் இதுவென்று. விடுதலை உணர்வு, விடாமுயற்சி, துணிவு, அந்த ஆதங்கம் இருந்துகொண்டிருந்ததை நாங்கள் அங்கு அந்தத் தாக்குதலிலே கலந்துகொண்ட வீரர்களிடம் அறியக்கூடியதாக இருந்தது. அதே போன்று அந்தத்தாக்குதலுக்கு நகருவது என்று சொன்னால், கிட்டத்தட்ட அது சிங்களவர்களுடைய எல்லைப் பிரதேசம் அதனால் அங்கு எதிரியினுடைய கண்காணிப்பு மிகவும் தீவிரமாக இருந்தது. ஆரம்ப காலத்தில்அந்த எதிரியினுடைய கண்காணிப்பை மீறி அங்கு ஒரு தாக்குதல் செய்வது என்பது மிகவும் கடினமாக இருந்தது. இப்பவும் இரகசியமாகச்சென்றால் மட்டும் தான் தாக்குதலை வெற்றிகரமாகச் செய்யமுடியும். ஒரு படை நகர்த்தல் என்பது மிக மிகக் கடினமானது. எப்படியோ பொது மக்களுக்குத் தெரியாமல் நாங்கள் படையை நகர்த்த வேண்டும். அந்த புலுகுணாவைத் தாக்குதலுக்கு முதலும் நாங்கள் பல தாக்குதல்கள் செய்திருக்கின்றோம். பல தாக்குதல்கள் நடக்காமல் நாங்கள் திரும்பி வந்திருக்கின்றோம்.

காரணம், அந்தக் காடுகளிலே எதிரியினுடைய நடமாட்டங்களும் ஊடுருவல்களும் மிகவும் தீவிரமாக இருந்தது. அங்கு இரகசியமாகப் பெரிய படைகளை நகர்த்தி ஒரு தாக்குதலை வெற்றிகரமாகச் செய்வது சரியான கடினம். மிக இரகசியமாக நகர்த்தவேண்டும். அனைத்து வீரர்களையும் கட்டம் கட்டமாக மிகவும் நிதானமாக இரகசியமான முறையிலே காட்டுப் பிரதேசத்துக்கு நகர்த்தினோம்.

அந்த நேரத்திலே வந்து முகாமிற்கு பக்கத்திலே எங்களுடைய போராளி ஒருவர் பாம்பு கடித்து வீரச்சாவைத் தழுவுகின்றார். அந்த இராணுவ முகாமிற்கு பக்கத்திலே படைகளை எடுத்து இறுதிக்கட்டமாக ஒழுங்குபடுத்துகின்ற நேரத்திலே ஒரு படப்பிடிப்பாளர் (எங்களுடைய போராளி) ஒருவர் காயப்படுகின்றார். அவரை உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கின்றோம். அவர் அங்கு வீரச்சாவடைகின்றார். பிறகு எமது படைகள் நகர்ந்துகொண்டிருக்கின்றன. படைகள் நகர்ந்துகொண்டிருக்கின்ற பொழுது இன்னுமொரு தடை இயற்கையினுடைய வடிவில் வருகிறது. அதாவது - பக்கத்திலே புலுகுணாவ குளம் ஒன்று இருக்கின்றது. அந்தக் குளம் தண்ணியால் நிரம்பி வழிகிறது. படை நகர்த்துவதற்கு மிகவும் தடையாக இருந்திருக்கின்றது. அதிலே எவருக்கும் தெரியாமல் ஒரு வேவு வீரர் என்ன செய்திருக்கிறார் என்று சொன்னால் குளத்துத் தண்ணியை திறந்துவிட்டிருக்கின்றார்.

எல்லாமே எங்களுக்கு ஒரு சாதகமாகவே அமைந்திருக்கின்றது. நாங்கள் சண்டையின் பிற்பாடு அதிலே கலந்துகொண்டிருந்த போராளிகளுடன் உரையாடும் பொழுது சில விடயங்களை அறிந்தனாங்கள். அப்ப ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு, அன்றைய இரவு அதாவது தாக்குதலுக்குப் படைகள் நகர்ந்துகொண்டிருக்கின்றது. அதே நேரத்தில் வேவு வீரர்கள் திடீரென்று படைகளை நகர்த்துவதற்கு அங்கு போய் பார்க்கும் பொழுது தண்ணி கூடுதலாக இருந்திருக்கிறது; அந்தக் குளத்தில். அந்தக் குளத்தைத் தாண்டுவதற்குரிய நேரம் அவர் சொன்னார் எப்படி என்று சொன்னால் அந்தக் குளத்தினுடைய கதவைத் திறந்து தண்ணியை ஓடவிடாமல் இருந்திருந்தால் அந்த தாக்குதல் குறிப்பிட்ட நேரத்திற்கு நடந்திருக்காது. சில வேளையில் எங்களுக்குத் தோல்வியிற் தான் முடிந்திருக்கும்.

ஏனென்றால் படைகளை அதுக்குள்ளால் நகர்த்துவது கடினமாக இருந்தது. அனைத்துக் கதவுகளையும் திறந்துவிட தண்ணியெல்லாம் ஓடி முடிந்ததும் எங்கட நகர்வுக்கு ஒரு காரணமாக இருந்திருக்கென்று குறிப்பிட்டிருந்தார். இன்னும் ஒரு காரணம் எங்களுடைய போராளிகள் நகர்ந்துகொண்டிருந்த பொழுது எதிரியினுடைய அந்த தடையினூடாக ஊர்ந்துகொண்டிருக்கின்ற நேரத்திலே இரண்டாம் லெப்டினன் குருதீஸ்வரன் என்ற போராளிக்கு மைன்ஸ் வெடித்திருக்கிறது. அந்த போராளியின் பக்கத்தில் நின்ற குழுத்தலைவன் அவனது வாயை மூடுகிறான். சண்டை இடையிலேயே ஆரம்பிக்கப்போகின்றது எல்லாம் தலைகீழாக மாறப்போகின்றது எனப் போராளிகள் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நேரத்திலே. மைன்ஸ் வெடித்த உடன இவருடைய வாயை பக்கத்திலிருந்த போராளி பொத்தி பிடிச்சிருக்கின்றார். பொத்தும் பொழுது அவர். இரகசியமான முறையிலே பக்கத்திலிருந்தவர்களுக்குச் சொல்லியிருக்கின்றார். "எனக்குப் பிரச்சனையில்லை நான் இந்த இடத்திலே இருக்கின்றேன். என்னை எவரும் யோசிக்கவேண்டாம்! நீங்கள் நகர்ந்து உரிய நேரத்தில் தாக்குதலை ஆரம்பித்து ஆட்லரியைக் கைப்பற்றுங்கள்! என்னைப் பற்றி சிந்திக்கவேண்டாம் அனைவரும் நகர்ந்துகொண்டு இருங்கள்! நான் ஆழமாட்டன் சத்தம்போடமாட்டன்!"

அந்த மைன்ஸ் வெடிக்கிறது என்று சொல்றது சாதாரணமான நிகழ்வல்ல; ஒரு ரைபிளால சுட்டுக் காயம் வருவதுபோல அல்ல. மைன்ஸ் வெடித்தால் அது ஒரு பாரிய அதிர்வு. எலும்பு உடைந்து கால் பாதி பறந்த நேரத்தில கூட தான் வீரச்சாவடையப்போகின்றேனோ, தான் தப்பவேண்டும் என்றோ தன்னைக் காப்பாற்றவேண்டும் என்ற சிந்தனையோ அந்தப் போராளிக்கு இல்லை. இந்தச் செய்தியைக் கேட்கும்பொழுது சண்டையின் மறக்க முடியாத ஒரு உணர்வு. பிறகு அவர் சொல்லியிருக்கின்றார் "நீங்கள் எல்லோரும் நகருங்கோ என்று" அந்த போராளி மைன்ஸ் வெடித்த கால்மணித்தியாலத்துக்குப் பிறகுதான் சண்டை ஆரம்பிச்சது. அந்தக் கால் மணித்தியாலம் வரும்வரையும் அமைதியாக தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டே படுத்திருக்கின்றார். அந்தச் சண்டை ஆரம்பித்த பிற்பாடு பிறகு அவர் வீரச்சாவடைந்து விட்டார். அவரைக் காப்பாற்றவேண்டும் என்று முயற்சி செய்திருந்தால், அவர் தான் தப்ப வேண்டும் என்று முயற்சி செய்திருந்தால் அந்த சண்டை இடையிலே குழம்பியிருக்கும். சண்டை ஆரம்பித்து உள்ளே எங்களுடைய தலைவர் அவர்களுடைய கட்டுப்பாட்டுக்குள் படைகளை நகர்த்திக்கொண்டிருந்த பொழுது கடுமையான எதிர்ப்புக்களைச் சந்தித்ததாக குறிப்பிட்டிருந்தார்கள். கிட்டத்தட்ட ஒண்டரை மணித்தியாலம் சண்டை நடந்ததாக குறிப்பிட்டிருந்தார்கள். அதற்கு பிற்பாடு ஆட்லரியைக் கைப்பற்றி அந்த ஆட்லரியை இயக்குவதற்கு அதை ஒழுங்குபடுத்துவதற்கு, முன்கூட்டியே தலைவர் இங்கு ஒரு அணிக்குப் பயிற்சி கொடுத்து அனுப்பியிருந்தார். ஆட்லரியை என்ன விதமாகக் கையாளுவது, ஆட்லரியை அடிப்பதற்கு பழகுவது என்பதை விட, நிலைப்படுத்தியிருக்கின்ற இடத்திலேயிருந்து அந்த ஆட்லரியை எடுத்து ஒரு இடத்திற்கு நகர்த்துவதற்கு சரியான அறிவு வேண்டும். அப்ப அதற்குரியவாறு அங்கிருந்து குழுக்களை பயிற்சி கொடுத்து (நேரடியாக தலைவருடைய கட்டுப்பாட்டுக்குள்ளே பயிற்சி கொடுத்து அனுப்பியிருந்தமையும்) ஒரு காரணம்.

நாங்கள் அந்த வரைபடத்தைத் தலைவரிடம் கொண்டுசென்று காட்டினோம். இப்படியொரு ஆட்லறி இருக்கின்றது என்று சொல்லி விளங்கப்படுத்தாமலுக்கு நாங்கள் அந்தச்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சண்டையை செய்திருப்போமாகயிருந் திருந்தால் அந்த ஆட்லறியை உருப்படியாக வெளியில் எடுத்திருக்க முடியாது. அதன் பிற்பாடுதான் தலைவர் சொன்னது என்று சொல்லி இந்த ஆட்லறியை வெளியில் எடுப்பதற்கு பயிற்சி கொடுக்கவேண்டும் என்று சொல்லி, மட்டக்களப்பிலிருந்து போராளிகளை எடுத்து, இங்கு பயிற்சி கொடுத்து தலைவர் அவர்கள் அங்கு அனுப்பியிருந்தார்.

ஆட்லறி கைப்பற்றப்பட்டு வெளியில் எடுத்த பிற்பாடு காட்டுக்குள்ளே மறைமுகமாகக் கொண்டுவந்து பாதுகாப்பாக வைத்திருந்த பொழுது, மிகவும் பரவலான ஒரு இராணுவ நடவடிக்கை ஒன்று அங்கு நடந்துகொண்டிருந்தது. அது ஆட்லறியை மீண்டும் கைப்பற்றுவதற்கான நடிவடிக்கையாக இருந்தது. பல நாட்கள் இந்த ஆட்லரியைத் தேடித் தேடி மக்களை அடித்து, துன்புறுத்தினார்கள். அதைத் தேடிக்கொண்டிருந்தார்கள். அதை நெறிப்படுத்துவதற்காக விசேட அதிரடிப்படைக்கு இரண்டாவது பொறுப்பாக இருந்தவர் சகபந்து - அவர் தான் இராணுவ நடவடிக்கையை நடத்திக்கொண்டு இருந்தார். புலுகுணாவ சண்டையில் ஆட்லறி எடுத்த சண்டை வெற்றியோட எதிரியினுடைய முக்கிய கட்டளை அதிகாரியும் கொல்லப்படுகின்றார்.

இந்த ஆட்லரியை மீண்டும் கைப்பற்றுவதற்காக ஒரு இராணுவ நடவடிக்கையை நெறிப்படுத்துவதற்காக சகபந்து அவர்கள் அங்கு நெறிப்படுத்திக்கொண்டிருந்த நேரம். கரும்புலித் தாக்குதல் ஒன்று செய்வதற்குரிய தகவல் வந்து கிடைத்துக்கொண்டிருந்த பொழுது இதற்கு அங்கு இராணுவப் புலனாய்வுப் பொறுப்பாளராக இருந்த எங்களுடைய வீரச்சாவடைந்த லெப்டினன் கேணல் நிசாம் அவர்கள் இதைப் பொறுப்பெடுத்தார். உடனடியாக அக்கரும்புலித் தாக்குதலுக்கு கரும்புலி மேஜர் செந்தேவனை தயார்ப்படுத்தினார். தொடராக ஒரு முயற்சி எடுக்கும் பொழுது உடனடியாக சகபந் அவர்களுக்கு செந்தேவன் அவர்கள் கரும்புலித் தாக்குதலை செய்து அவரை அழிக்கின்றார். அதன் பிறகு, விசேட அதிரடிப் படை முகாமினுடைய வெற்றியுடன் சேர்ந்து அங்கு விசேட அதிரடிப்படை பொறுப்பாளாராக இருந்த இரண்டாவது பொறுப்பாளரைக்கூடத் தாக்கி அழிக்கக்கூடியதாக இருந்தது. இந்த அனைத்து நடவடிக்கைகளுக்கும் பிற்பாடு அங்கு விசேட அதிரடிப்படை பற்றியிருந்த அந்த மாயை அழிக்கப்பட்டது. அதற்கு முதல் எங்களுடைய போராளிகள் மத்தியிலும் அவ் வாறான எண்ணம் இருந்தது. "விசேட அதிரடிப் படை முகாமை நாங்கள் தாக்குவது மிகவும் கடினம்தான்". என்கின்ற தன்மை அங்கு இருந்தது. அதே போன்று மக்கள் மத்தியிலும் இருந்தது. "விசேட அதிரடிப் படையை ஒன்றும் செய்யமுடியாது நாங்கள் பதுங்கித் தாக்குதல்களைச் செய்து ஆயுதங்களைக் கைப்பற்றியிருந்தாலும் முகாமைத் தாக்க முடியாது" என்ற ஒரு மாயை அங்கு இருந்தது.

இந்தத் தாக்குதலுக்குப் பிறகு தாக்குதலினுடைய உக்கிரத்தால் பல விசேட அதிரடிப் படை முகாம்கள் மூடப்படுகின்றன. இதிலே குறிப்பாக, நாங்கள் சொல்லுவதாக இருந்தால் பாலையடிவட்டை என்கின்ற இடத்தில் இருந்த விசேட அதிரடிப் படை முகாம், முப்பதாறாம் குழலி எங்களுடைய எல்லைப் பிரதேசத்தில் இருந்த ஒரு முகாம், வெல்லாவெளிப் பிரதேசத்திலே இருந்த விசேட அதிரடிப் படை முகாம், புல்லுமலையிலிருந்த விசேட அதிரடிப் படை முகாம், கொஸ்க்கொல்ல என்ற இடத்தில் இருந்த விசேட அதிரடிப் படை முகாம் குறிப்பிட்ட காலத்துக்குள் இந்த இராணுவ முகாம்கள் மூடப்படுகின்றன. அதன் பிற்பாடு பெரிய பிரதேசங்கள் எங்களுடைய தமிழ் மக்களுடைய பிரதேசங்கள் விடுபடுகின்றன. ஒரு முகாம் தாக்குதலால் இன்னும் பல பிரதேசங்கள் விடுபடுகின்றன. இதில் நாங்கள் பார்க்கவேண்டியது என்னென்று சொன்னால் ஒரு கேந்திர முக்கியத்துவமான முகாம் தாக்குப்பட்ட பிற்பாடு இன்னும் பல சிறிய முகாம்கள் தாக்கப்படும் என்கின்ற அந்த அச்சம் விசேட அதிரடிப் படையினருக்கு வந்தது. அதன் காரணமாக இந்த முகாம்களெல்லாம் வெளியேற்றப்பட்டது. பிறகு மக்களுக்கும் ஒரு நம்பிக்கை ஏற்பட்டது .

புலுகுணாவ முகாம் அமைந்திருந்த இடம், ஆரம்ப காலத்தில் தாலையடிமடு என்று சொல்வார்கள். இது ஒரு தமிழ்க்கிராமம். இதற்கு பக்கத்திலேயும் ஒரு தமிழ்க்கிராமம் இருந்தது. அந்தத் தமிழ் கிராமம் சிங்களவர்களால் விரட்டி அடித்த பிற்பாடுதான்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்த இடத்திற்கு வந்து பொலிஸ் போட்டவன். அதாவது இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டது. அந்த இராணுவ முகாம் அமைக்கப்பட்டதனுடைய நோக்கம் அதற்குப் பக்கத்திலே தாலையடிமடு என்ற எங்களுடைய தமிழ்க் கிராமத்தை முதற் கட்டத்திலே அடித்துக் கலைத்துப் போட்டு படுகொலைகளை செய்து கலைச்சுப் போட்டு அந்த முகாமை அமைக்கின்றார்கள். அதற்குப் பக்கத்திலே பல கிராமங்கள் இருக்கின்றது. விசாரமலைக்குப் பக்கத்திலே எங்களுடைய கிராமம் இருந்தது. பச்சைக் கொடி சுவாமி மலை என்று சொல்வார்கள் அதற்குப் பக்கத்திலே ஒரு கிராமம் இருந்தது. விசாரமலைக்குப் பக்கத்திலே இருந்த கிராமத்தையும் சிங்கள இராணுவமும் சிங்களவர்களும் சேர்ந்து எங்களுடைய தமிழ்க்கிராமத்தை அழித்து மக்களை குடி அனுப்புகின்றார்கள். அதன் பிற்பாடு பச்சைக்கொடிசுவாமி மலை என்கின்ற கிராமமும் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, விரட்டி அடிக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்டு எழுப்பப்படுகினர். அதன் பிற்பாடு முப்பத்தி ஒன்பதாம் கிராமம் ஏழாம் வட்டாரம் என்று சொல்லுகின்ற பிரதேசத்திலுள்ள மக்களும், சிங்களவர்களாலும், இராணுவத்தினராலும், படுகொலை செய்யப்பட்டு எழுப்பப்படுகின்றது. அதன் பிற்பாடு வாழக்காலை என்று சொல்லுகின்ற அந்தப் பிரதேசத்திலே இருந்த மக்களும் அந்த சிங்களவர்களாலும் இராணுவத்தினராலும் ஆக்கிரமிக்கப்பட்டு வெளியேற்றப்படு கின்றார்கள். தாண்டாமலை என்கின்ற இடம் தாண்டாமலை என்று சொல்லுகின்ற அந்த இடத்திலே இருந்த மக்களும் சுற்றிவழைக்கப்பட்டு, படுகொலைசெய்யப்பட்டு அந்த கிராமும் எழுப்பப்படுகின்றது.

நாப்பதுவட்டை என்று சொல்லுகின்ற அந்த கிராமமும். தொடராக இந்த முகாம் அமைத்த காலத்திலிருந்து ஆண்டாண்டு காலமாக ஒவ்வொரு கிராமமாக தமிழ் மக்களைப் படுகொலை செய்து சுட்டு, அடித்து அவர்களை குடியெழுப்பிக்கொண்டே இருந்தார்கள். இது ஒரு பெரிய அச்சுறுத்தலாக இருந்தது வளமான எங்களுடைய அந்தப் பிரதேசம், எவ்வளவோ மக்கள் வாழ்ந்த அந்த பிரதேசம், மக்கள் அங்கு குடியிருக்கிறத்துக்கும் அஞ்சி இடம் பெயர்ந்து, நகரப் பிரதேசத்தை அண்டி அவர்கள் அகதி முகாம்களில் வந்து சேர்ந்தார்கள்.

கால் நடைகளை மேய்ப்பதற்காக அந்தப் பிரதேசம் அரசாங்கத்தால் ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த பிரதேசத்திலே மாரி காலம் வந்தால் நெற்காணிகளில் விவசாயம் செய்வார்கள் அப்பொழுது, அனைத்து விவசாயிகளுடைய கால்நடைகளும் அந்தக் காட்டுப் பிரதேசத்துக்குள்தான் வளர்ப்புக்காக செல்லும். அங்கு அந்த கால்நடைகளை சுட்டழித்தார்கள், கால்நடைகளை மேய்ப்பதற்கு செல்லுபவர்கள் கொலைசெய்யப்பட்டர்கள்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதிலே நான் குறிப்பாக சொல்லவேண்டும் என்னென்று சொன்னால், புலுகுணாவ இராணுவ முகாமில் இருந்து வந்து செய்த கொலையில் மிகவும் கொடூரமான கொலை ஒன்று பெருவட்டை என்று சொல்லுகின்ற தாண்டாமலைக்குப் பக்கத்தில் இருக்கின்ற பெருவட்டை எனும் இடத்திலே அங்கு கால்நடைகள் செறிவாக வளர்க்கின்ற இடம். அந்த இடத்திலே இருந்த கால் நடைகளை மேய்க்கிறதுக்காக போயிருந்த எல்லோரையும் பிடித்து, அந்த வளர்ப்பாளர்களுடைய குடிசைகள் எல்லாம் சுற்றிவளைக்கப்பட்டு, அவர்களை உயிரோட அந்த குடிசைகளுக்குட் போட்டு, நெருப்புக் கொடுத்து கொலை செய்த சம்பவம் என்றது எங்களுடைய படுகொலை வரலாறுகளிலே மறக்க முடியாதது. அதில மறக்கமுடியாத ஒரு சம்பவம். ஒரு சிலர் மட்டும்தான் தப்பி காட்டுக்குள்ளால் ஓடினவர்கள். ஏனையவர்களைக் காலையும் கையையும் கட்டிப் போட்டு அந்தக் கிடுகுக் கொட்டில்களில் போட்டு தீயிட்டு கொழுத்தினார்கள்.

அந்த இடம் ஒரு முக்கியமான இடம். வளமான ஒரு பிரதேசம். அதன் பிற்பாடு அந்தக் கால்நடைகள் சிங்களவர்களால் கொண்டுசெல்லப்பட்டு, சுட்டு அப்படியே நாசப்படுத்தப்பட்டது. மட்டக்களப்பு தமிழர்களினுடைய, விவசாயிகளுடைய வளமான பிரதேசம் அது. அவர்களுடைய அந்த வளம் இந்த இராணுவ முகாமிலே, இருந்த இராணுவத்தினராலும் பொலிசாராலும் அழிக்கப்படலாயிற்று. 1977 ம் ஆண்டு ஜே.ஆர் அரசாங்கம் வந்த பிற்பாடு இந்த முகாம் பலப்படுத்தப்பட்டு, ஒரு கேந்திர முக்கியத்துவமான ஒரு இராணுவ முகாமாகிறது. .

1978 ம் ஆண்டு ஜனாதிபதி ஆட்சிக்கு வந்த பிற்பாடு இந்த முகாமில் இருந்து தீவிரமான முறையிலே இராணுவத்தினர் செயற்பட்டனர். அதிலே ஏற்கனவே கூறிய அந்தக்கிராம மக்கள் படுகொலை செய்யப்பட்டு அடித்து துன்புறுத்தி கலைக்கப்படுகின்றனர். ஜே.ஆர். ஆட்சியின் ஆரம்ப கட்டச் செயற்பாடு. அதன் பிற்பாடு பயங்கரமான பிரதேசமாக அந்தப்பிரதேசம் வந்தது. தமிழர்கள் நகர முடியாது, போக முடியாது பெரிய பயங்கரம். பக்கத்திலே ஒரு பூர்வீக தாண்டாமலைக் கோயில் ஒன்று என்பது வரலாற்றிலே முக்கியத்துவமான எங்களுடைய எல்லையை பாதுகாத்துக் கொண்டிருக்கின்ற இடம் அது.

அந்தக் கோயிலிலே வந்து, கோயிலை உடைத்தது உள்ளுக்குள் நாசப்படுத்தி பக்கத்திலிருந்த கிராமங்களெல்லாம் விரட்டி அடிச்சார்கள். அதன் பிற்பாடு நீண்ட காலத்திற்குப் பிறகு தான் நாங்கள் பல தாக்குதல்களை அந்தப் பிரதேசத்தில் செய்தாலும் அந்த புலுகுணாவை தாக்குதலுக்குப் பிற்பாடு மக்கள் அந்த இடத்திலே சென்று மீண்டும் புதிதாக தங்களுடைய கிராமங்களை அபிவிருத்தி செய்யிறத்துக்குரிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டு இருக்கிறார்கள். இப்ப நான் குறிப்பிட்டது போல தாளையடிமடு என்கின்ற ஒரு தமிழ்க்கிராமம். அது ஒரு முக்கியமான தாக்குதல் என்றுதான் நாங்கள் குறிப்பிடவேண்டும். மக்கள் மத்தியில் எல்லோருக்கும் சந்தோசம். புலுகுனாவ தாக்கப்பட்டது ஒரு சந்தோசம் அதிலே ஆட்லறி எடுத்த சம்பவங்கள் எல்லாம் பெரிய சந்தோசம். அதன் பிற்பாடு மக்கள் இப்பொழுது படிப்படிப்படியாக முற்று முழுதாக என்றில்லை படிப்படியாக அந்த இடங்களை அபிவிருத்தி செய்துகொண்டு, தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அந்தப் பிரதேசத்தில் இருக்கும் மக்கள் வறுமைப்பட்டவர்கள். ஆனால் இப்பொழுதும் அந்த இடத்தில் முகாமிட்டு இருக்கின்றான். எப்படியோ நிச்சயமாக அடுத்த அடுத்தக் கட்டங்களில் இந்த முகாம்களை கைப்பற்றி முற்றுமுழுதாய் எங்களுடைய எல்லைகளைப் பாதுகாக்கும் பொழுதுதான் எமது மக்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பு இருக்கும். கிட்டத்தட்ட இந்தப் புலுகுணாவக் காம்பில் இருந்து நாங்கள் சரியாக ஒரு 15 - 20 கிலோமீற்றர் வரும் என நினைகிறேன். அந்தக் காட்டுக்குள்ளால் வந்து, பிரதேசத்தை சுற்றிவழைச்சு எல்லாம் அந்த ஏழை மக்கள் தான் கால் நடைகளுக்கு சொந்தக்காரர். அவர்கள் கூலி ஆட்கள். அதைக் கொண்டுதான் குடும்பம் நடத்துகிறாங்கள். அப்ப அவங்கள் வந்து சந்தோசமா பால் குடிச்சு, தயிர் கட்டி, வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அன்று மாடு கட்டிக்கொண்டிருந்த நேரம் திடீரெண்டு வந்து ஒரு சுற்றிவழைப்பு. "ஒருத்தரும் ஓடக்கூடாது ஓடினா சுடுவம்" என்று சொல்லிவிட்டு. காலையும் கையையும் கட்டி போட்டு, அதில இருந்த அரிசி சாப்பாட்டு சாமான் எல்லாம் போட்டு எரிச்சாங்கள். புலுகுணாவ முகாம் வந்து ஆரம்பத்தில சிறிய முகாமாக இருந்தது; அதாவது பதுளை றோட் அதால பதுளைக்கு போகலாம், அம்பாறையிலிருந்து பதுளைக்கும் போகலாம், கண்டிக்கும் போகலாம் அப்படியே வந்து வடபகுதிக்கும் வரலாம். அது ஒரு எல்லைப் புற றோட். தமிழீழத்தினுடைய எல்லை றோட் தான் அது. அந்த றோட்டில் பிரதான பாதை இருந்தது. எங்கட தமிழீழப் பிரதேசத்திலதான் ஒரு முகாம் ஆரம்பத்தில இருந்தது; ஒரு சிறிய முகாமாக இருந்தது; ஆரம்பத்தில இது வனவளப் பாதுகாப்பு செயலகமாக இருந்தது. அதன் பிற்பாடு பொலிஸ் இருந்தது. திரும்ப ஆமி இருந்தது; பிறகு விசேட அதிரடிப் படை இருந்தது.

சிங்களக் குடியேற்றத் திட்டம் ஆரம்பித்த பொழுது அதாவது இந்த முகாம் விஸ்தரிக்கப்படுகிறது. 77 ம் ஆண்டுக்குப் பிறகு. ஜே.ஆர். ஆட்சிக்கு வந்த பிறகு தான் இந்த முகாம் பன்மடங்காக விஸ்தரிக்கப்பட்டது. சிறிய சிறிய முகாம்களெல்லாம் நிறையப் போடப்பட்டிருந்தது. 400 மீற்றர் அகலமும் 500 மீற்றர் நீளமும் அண்ணளவாகக் கொண்டிருந்த இந்த முகாமைத்தாக்கும் பொழுது இருந்த அளவு திட்டம். ஆரம்பத்திலே மிகவும் சிறியதாகத்தான் இருந்தது. நெருங்க முடியாத அளவுக்கு நெருக்கமானதாகக் கம்பித் தடைகளும். மற்றும் மிதி வெடிகளும் செறிவாக இருந்த பிரதேசம். அடுத்தது அந்தக் காப்பரண்கள் மிகவும் நெருக்கம் நெருக்கமாக இருந்தன.

வேவுப் பணிகளைச் செய்யும் பொழுது ஒவ்வொரு இரவும் இரண்டு மைன்ஸ், மூன்று மைன்ஸ் என்று வெடிக்கும். விசாரமலை என்ற இடத்தில் இருக்கின்ற நேரத்தில் காலையில அங்க மான், பண்டி, வெடிச்சு செத்துக் கிடக்கும். தூரத்தில் அவன் நின்று கொழுவி மான்களையெல்லாம் கொம்புகளில் கொழுவி இழுப்பது வடிவாத் தெரியும். அப்படி நின்று இழுப்பான் அல்லது அதுகளை எடுக்கிறத்துக்கு சின்ன கிளியரிங்கை ஒன்றைச் செய்துகொண்டு அந்த மிருகங்களை எடுப்பான்.

நான் நினைக்கிறேன் எங்கள் போராளிகள் குறிப்பிடும் பொழுது ஒரு விடயம் குறிப்பிட்டிருந்தாங்கள் என்னென்று சொன்னால் அந்த நகர்வுக்குள்ள குருதீஸ்வரனுக்கு மைன்ஸ் வெடிக்கேக்குள்ள ஆமி அலேட்டாகெல்ல என்று. அவையள் சிலநேரம் நினைத்திருப்பினம் காலையில் மானோ, பண்டியோ எடுக்கலாம் என்று அதால அவையள் அலேட்டில்லாம இருந்துவிட்டார்கள்.

காலமை அவர் எதிர்ப்பாத்திருக்கிற பொழுது இடையில அவருக்கு எங்களுடைய ஆட்கள் இறைச்சி கொடுத்துட்டாங்கள். வேவுப்பணியில் ஆரம்பத்தில வந்து கப்டன் அவர்னா என்ற



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரைத்தான் பொறுப்பாக விட்டது. அவரைப் பார்க்கேக்குள்ள இவரையா வேவுக்குப் பொறுப்பாக விட்டிருக்கிறது என்று சொல்லுவீங்கள். ஆனால் மிகவும் உறுதியான, துணிவான ஒரு தலைமைத்துவப் பற்றுள்ள ஒரு விசுவாசி. அவரை நாங்கள் அந்தப்பணிக்கு அனுப்பும் பொழுது நாங்கள் குறிப்பிட்டது நாங்கள் அம்பலாந்துறையிலிருந்த முகாமைத் தாக்கப் போய் நாங்க நிறையப் போராளிகளை இழந்திருக்கின்றோம் தோல்வியைச் சந்தித்திருக்கிறம்.


இந்த வேவுப் பணிக்கு. நீங்கள் தான் பொறுப்பாக நின்று செய்யவேண்டும். நீங்கள் இந்த முகாமில வீரச்சாவடைஞ்சிட்டியள் என்று வைத்துக்கொண்டு இந்தப் பணியை செய்து தரவேண்டும் என்று. உடனே அவர் சந்தோசமாக ஏற்றுக்கொண்டார். சிரித்துக்கொண்டு, அவருடைய விடாமுயற்சியைத் தொடாந்தார். வேவுப் பணிகள் விரைவாக முடிகிறத்துக்கு அவரும் ஒரு காரணம். மிகவும் தீவிரமான போராளி அவர் ஒவ்வொரு இரவும் பொறுப்பாக ஒவ்வொரு போராளியினுடைய பாதையை, ஒவ்வொரு பாதையாகத்தான் கிளியர் செய்தவர். இப்ப நாங்கள் வளவுக்குள்ள போய் நின்று ஒரே நேரத்தில இரண்டு, மூன்று பாதையாக நடந்து பார்க்கேலாது. ஒரு இரவுக்குப் போனா மறுநாள் இரவு இன்னுமொரு பாதை, அந்தப் பொறுப்பாளர் நேரடியாகப் புகுந்து போய் எல்லாம் கிளியர் பண்ணித்தான் அந்த வேவுப்பணியைச் செய்தார்.

வன்னிச் சண்டைக்கு வந்து நிண்டவர். அப்ப இஞ்ச வந்த இடத்தில அவர் சொன்னார் “நான் புலுகுணாவ முகாம் தாக்குதலுக்கு எப்படி பணி செய்து தந்தேனோ அதே போல ஆமிக்குள்ள புகுந்த இந்த கொமாண்டோ ஆர்.பி.ஜி அணியோட போய் ராங்க உடைக்கோணும்” என்று அதோட அவரையும் இணைச்சு பொறுப்பா விட்டிருந்த நேரத்தில, மாங்குளத்தில நடந்த சண்டையில அவர் வீரச்சாவடைந்திட்டார்.

அந்த முகாமினுடைய - நேரடியாக நின்று எடுத்த வேவுத் தகவல்களைப்பற்றி அவரோட கதைக்கும்பொழுது சொன்னார்கள். மிகவும் இறுக்கமாக, நெருக்கமாக கம்பி வேலிகளிலெல்லாம் இருந்தது. கிட்ட நெருங்க முடியாத அளவுக்கு மைன்ஸ் கிடந்தது. இரவில அந்த மைன்சுகளெல்லாம் அந்த மிதி வெடிகளெல்லாம் கிளியர் பண்ணிப் போட்டுத்தான் அங்க போறன். போய்த் திரும்ப அந்த மிதி வெடிகளையெல்லாம் வைத்துக்கொண்டு வாறனான். அவங்கள் காலையில் வந்து சில வேளைகளில் மிதிவெடிகளெல்லாம் இருக்கா என்று பார்ப்பானுகள். பார்த்து அதில ஏதேனும் சந்தேகம் இருந்தால் பிரச்சனை. மிதிவெடி எடுபட்டுட்டோ என்று பார்க்கிற போது சந்தேகம் வராதது மாதிரி அப்படியே வைத்து உருமறைப்புச்செய்வன். மிகவும் கஸ்டப்பட்டுத்தான் வேவுப்பணிகளை செய்தன்” எனபதைச் சொன்னான். இந்த முகாம் தாக்குதலில் கிட்டத்தட்ட 75 க்கு மேற்பட்ட விசேட அதிரடிப்படை கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலே முதல் முதல் கரும்புலித் தாக்குதல் நடத்திய மேஜர் ரங்கன் அவர்களுடைய நினைவாகவும்தான் விசேட அதிரடிப் படை முகாம் தாக்கப்பட்டது. தாக்குதலுக்குரிய அந்தத் திகதியும் அவருடைய நாளை வைத்துத்தான் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இன்றும் அந்தப் பசும் புல்வெளிகளிலும் நீல வானத்தின் கீழும் எமது காலடிச்சுவடுகள் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. ஒளிரும் சூரியன் தடங்களில் மீதாக நடந்து செல்வதும் வருவதுமாய் இருக்கின்றன.






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆதிகால மானுட வரலாறு நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் 3



நிலாந்தன்



சில வரலாற்றாசிரியர்கள் நகரங்களின் எழுச்சியே ஒரு சமூகம் நாகரீகம் அடைந்துவிட்டதற்குரிய முக்கிய அடையாளம் என்று கூறுவதுண்டு. இத்தகையோர் நகரம், நாகரீகம் என்பவற்றின் ஆங்கிலச் சொற்களின் - City Civitization மூலச் சொல் ஒன்றே எனவும் வாதிடுவதுண்டு. குறிப்பாகக் கொல்டன் சைல்ட் நகரமயமாக்கலே ஒரு நாகரீகத்தின் எழுச்சிக்கான முக்கிய முன் நிபந்தனை என்று கூறியுள்ளார். ஆனால் பிந்திய ஆய்வுகளின்படி குறிப்பான எகிப்திய மற்றும் அமெரிக்க நாகரீகங்களைப் பொறுத்தவரை அங்கெல்லாம் நகரமயமாக்கல் பெரிய அளவில் நிகழ்ந்திராமலேயே ஒரு நாகரீகத்திற்குரிய ஏனைய வளர்ச்சிகளில் அநேகமானவை காணப்பட்டமை நிரூபிக்கப்பட்டுள்ளது. அதாவது எகிப்திய தென் அமெரிக்க அனுபவங்களின்படி அங்கெல்லாம் நாகரீகத்தின் எழுச்சி எனப்படுவது நாகரீகங்களின் எழுச்சியுடன் இன்றியமையாத விதங்களில் தொடர்பு கொண்டிருக்கவில்லை என்பதே. கோல்டன் சைல்ட் அவர் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருந்த மொசபப்பத்தோமிய நாகரீகம் பற்றிய முடிவுகளின் செல்வாக்கிற்குட்பட்டே முன்கண்டவாறு கூறியிருக்கலாம் என்று இன்று நம்பபப்படுகின்றது. (எனினும் எல்லா முதல் நகரங்களும் நதிக்கரைகளில் பொருளின் மீது அறிவுபெற்ற வெற்றிகளை அவற்றின் தொகுக்கப்பட்ட இறுதி வடிவத்தில் காட்சிமயப்படுத்தின.)

வர்த்தகர்களின் எழுச்சியோடு நதிக்கரைகளில் இயற்கையைப் புத்தி பூர்வமாகச் சுரண்டும் வளர்ச்சிப் போக்கில் மற்றொரு புதிய கட்டம் தொடங்கிவிட்டது. இதனை இன்னும் சரியாகச் சொன்னால் நதிக்கரைகளில் பாசனப் பயிர்ச்செய்கையில் தொடங்கிய பொருளை வசப்படுத்தும் அதன் முயற்சிகளில் மனித அறிவு மேலும் ஒரு வெற்றியைப் பெற்றுவிட்டது எனலாம்.

நீர்ப்பாசனப் பயிர்ச்செய்கையிலிருந்து தொடங்கி அதை ஆதாரமாகக் கொண்டு குடும்பம் சமூக முகாமைத்துவம், முதல் மதங்கள் புராணங்கள் மற்றும் சிறப்புத் தேர்ச்சி பெற்ற தொழில்கள் குறிப்பாக வர்த்தகம் என்று தொடர்ச்சியாக நிகழ்ந்து வந்த எல்லா வளர்ச்சிகளின் போதும் அங்கெல்லாம் அறிவு பொருளின் மீது படிப்படியாகத் தனது வெற்றிகளை ஸ்தாபித்து வந்தது. இத்தகைய



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்ச்சியான வெற்றிகளின் ஒரு கட்ட உச்சமாகவும் மனித சிந்தனைக் கூர்ப்பில் ஒரு திட்டவட்டமான காலகட்டப் பிரிவைக் குறிப் பனவாயும் காணப்படுகின்றவையே எண் ணும் எழுத்தும்.

நாகரீகம் எனப்படுவது மனித வாழ்வில் அறிவு மேலாண்மை பெறும் ஒருநிலை. அதாவது பொருளின் மீது அறிவு பெற்ற வெற்றி என்பதன் அடிப்டையில் பார்த்தால் நதிக்கரைகளில் மனித அறிவு அதன் ஆகக் கூடிய பலத்தைப் பெற்றது. எண்ணோடும் எழுத்தோடும் தான் மனிதனின் உளவியலை எண்ணும் எழுத்தும் தீர்மானித்த அளவிற்கு அதற்கு முன்பு வேறெந்தக் கண்டுபிடிப்பும் தீர்மானித்திருக்கவில்லை. எண்ணும், எழுத் தும் மனிதனை முன்னெப்பொழுதையும்விட உளவியல் ரீதியாக ஆயுதபாணியாக்கின.

எண்ணோடும், எழுத்தோடும் மனிதன் காலத்தையும், பொருளையும் அளப்பவன் ஆயினான். எனவே எண் எழுத்தின் வருகை மனித அறிவு அதன் வயதிற்கு வந்து விட்ட தையே காட்டுகின்றன. இதனை இன்னும் சரியாகச் சொன்னால் மனிதனின் நாகரீகம் அதன் மகத்தான முதற்கட்ட இறுதி வெற்றி யைப் பெற்று விட்டது எனலாம்.

கோவில்களில் திரண்ட சொத்துக்களை நிர்வகிக்கவும், பதிவில் வைக்கவும், வேண்டிய தேவைகளின் தொடர்ச்சியாகவே பின்னாளில் எண்ணும் எழுத்தும் கண்டுபிடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று பொதுவாக வரலாற்றாசிரி யர்கள் நம்புகின்றார்கள்.

சில வரலாற்றாசிரியர்கள் நதிப்பள்ளத் தாக்குகளில் சொத்துத் திரட்டப்படக் கூடிய முக்கியமான இரண்டு வழிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்கள். ஒன்று மத வழி, அதாவது கடவுள்கள் பற்றி பயத்தின் பெயரால் காணிக்கைகளாகக் கோயில்களை நோக்கித் திரண்ட சொத்துக்கள் இப்படிக் கடவுள்களுக் குக் காணிக்கை தரும் முறையே பின்நாளில் அரசுகளுக்குச் செலுத்தப்படும் வரியின் தொடக்கம் என்றும் சில வரலாற்றாசிரியர்கள் கூறுவதுண்டு. மேலும் சொத்துக்களைக் கையாளுவதில் கோயில்கள் வகித்த பங்கு பற் றிக் கூறும் வேறு சில வரலாற்றாசிரியர்கள் அவற்றை Community Banks என்றும் கூறு கின்றார்கள். சொத்து இந்த வழியில் யுத்த மின்றித் திரண்டது. மற்றது யுத்தம். இதில் அரசர்கள் யுத்தங்களைச் செய்து சொத்துக் களைச் சூறையாடினார்கள்.

இப்படிக் கோவில்களில் திரண்ட சொத் துக்களின் அதிபதிகளான மத குருக்களிடமே முதல் எழுத்துக்கள் காணப்படுகின்றன. அவர் கள் எழுத்தின் மீது மிக நீண்ட காலத்திற்குக் கொண்டிருந்த ஏகபோகமும், எண்ணும், எழுத்தும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கக்கூடிய நிலமைகளைப் பற்றி நாம் முற்கண்ட கருத் திற்கு பலம் சேர்க்கின்றன. எனினும் எண் ணும் எழுத்தும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கக் கூடிய நிலமைகள் பற்றிக் கருத்துப்பேதங்கள் இப்பொழுதும் உண்டு. ஆனால் நதிக்கரை களின் மிக நீண்ட காலத்திற்கு எழுத்து சமூகத் தின் மேல் தட்டினரின் இரும்புப் பிடிகளிலேயே குறிப்பாக மதகுருக்களிடமே இருந்தது என்பதில் வரலாற்றாசிரியர்களிடம் இருந்து பேதம் இல்லை.

எண்ணுவதிலிருந்தே எண் தொடங்கியி ருக்க வேண்டும். மனிதன் எப்பொழுது எண்ணத் தொடங்கினான் என்பதைக் கூறும் குறிப்பிடத்தக்க சான்றாதாரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. எனினும் எகிப் தில் கி.மு 3000 அளவிலும் ஆதி எண்களைக் காண முடிகின்றது.

எழுத்து அநேகமாக வரைவதில் இருந்தே தொடங்கியிருக்க வேண்டும். மனிதன் இற் றைக்கு 15000 ஆண்டுகளுக்கு முன்பே அல்ரா மேராவிலும் ஏனைய குகைகளிலும் வரையத் தொடங்கிவிட்டான். அன்றைய ஓவியங்கள் நேரடியானவை. அங்கு தோற்றம் அப்படியே வரையப்பட்டிருக்கின்றது. இப்படிக் காண் பதை அப்படியே வரைவதில் தொடங்கி படிப்படியாக வரையப்படும் பொருளின் தேவையற்ற விபரங்களைத் தவிர்த்து அந்தப் பொருளின் சாராம்சமாக அமையக் கூடிய கோட்டுருவை வரைவது என்பது சுமாராக கி.மு 8000 அளவில் ஹெற்றல் ஹ்யூக்கில் காணப்படுகின்றது. இதுதான் குறியீட்டின் தொடக்கம் இங்கிருந்தே எழுத்து வளர்ந் திருக்க வேண்டும். பொதுவாக மொழியியல் வரலாற்றாசிரியர்கள் எழுத்தின் தோற்றம் கி.மு 6000 ஆண்டுகளுக்கு முன் செல்வதற்கில்லை என்று கூறுகின்றார்கள். மேற்காசியாவில் மொசப்பத்தேமியாவில் கி.மு. 3300 இல் எழுத்துக் காணப்படுகின்றது. எகிப்தில் கி.மு 3100 இலும், இந்தியாவில் கி.மு 2300இலும் காணப்படுகின்றது. இதற்குப் பின்னரே சீனாவி லும் ஏனைய நாகரீகங்களிலும் எழுத்துக் காணப்படுகின்றது.

மொழி பேசப்படுவதாக மட்டும் இருந்த போது அது அருவமானதாக இருந்தது. ஆனால் எழுதப்படுவதாக மாறியபோது அது ஏதோ ஒரு தூலமான திட்டவட்டமான வடி வத்தை எடுக்கலாயிற்று. பேசப்படும் மொழி செவிப்புலனில் பெரிதும் தங்கியிருந்தது. ஆனால் எழுதப்படுவதும் ஆகிய போது அது கட்புலனுக்கும் உரியதாகியது. இது சிந்தனை யின் பரிமாணம் மேலும் ஒரு புலனால் அதிகரித்ததற்குச் சமம். மேலும் பேசப்படும் மொழி மனிதனின் நினைவாற்றலில்தான் சேகரிக்கப்பட்டு வந்தது. எனவே அதனூடாக அடுத்த தலைமுறைகளுக்கு கடத்தப்பட்ட மனித அனுபவங்களும் திரட்டப்பட்ட அறிவும் மனிதனின் நினைவாற்றலில்தான் பெரிதும் தங்கி யிருந்தன. ஆனால் எழுத்தின் வருகை யோடு மனித அனுபவங்களும் திரட்டப்பட்ட அறிவும் மனிதனின் நினைவாற்றலிற்கு வெளி யில் தூலமான விதங்களில் சேகரிக்கப்படும் ஒருநிலை தோன்றியது. இது திரட்டப்பட்ட அறிவு பின்வந்த தலைமுறைகளிடம் நிச்சய மான விதங்களில் கையளிக்கப்படுவதையும் அதனால் தலைமுறைகள் தோறும் சேர அறிவு அதிகரித்துச் செல்வ தையும் உறுதி செய்தது. இன்றைய அர்த்தத்தில் கூறுவதானால் மனி தன் இங்கிருந்துதான் தூலமான விதங்களில் வரலாற்றுத் தொடர்ச்சி உள்ளவனாகின்றான்.

இது காரணமாகவே பொதுவாக வரலாற்றாசிரியர்கள் மனிதன் பூர்வீக நிலையி லிருந்து நாகரீக நிலைக்கு உயர்ந்துவிட் டதைக் குறிக்கும் திட்டவட்டமான அடையா



நன்றி: படங்கள் À L'AUBE DES GRANDES CIVILISATIONS



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளமாக எழுத்தைப் பற்றிக் கூறுகின்றார்கள். மேலும் பண்பாட்டின் ஊடகம் என்ற வகையிலும் மொழி அதன் முழுமையான வடிவத்தை அடைந்தது எழுத்தோடுதான்.

எண்களோடுதான் காலப் பிரக்ஞை அதன் சரியான பிரயோக வடிவத்தை எடுத்திருக்க முடியும். ஆவர்த்தனமாக காலத்தைப் பகுப்பதற்குரிய அடிப்படை ஒழுங்கை எண்களே கொண்டிருந்தன. அத்தோடு அளவை முறைகள் அவற்றின் திருத்தமான வடிவத்தை அடைவதை எண்கள்தான் சாத்தியமாக்கியிருக்கவும் வேண்டும்.

எண்ணும் எழுத்தும் கண்டுபிடிக்கப்படும் வரை மனிதன் ஒலிக் குறிப்புகளிற்கூடாகவும், மங்கலான அருவத்தன்மை கூடிய குறியீடுகளுக்கூடாகவும் சிக்கலான காட்சிப் படிமங்களிற் கூடாகவுமே சிந்தித்திருப்பது சாத்தியம். ஆனால் எண்ணும், எழுத்தும் வந்தவுடன் பொருளுலகம் தானங்களாகவும் குறியீடுகளாகவும் இயன்றளவு எளிமைப்படுத்தப்பட்டு சுருக்கப்பட்டுவிட்டது. இது பொருளுலகின் மீதான சிந்தனையின் பிடி முன்னெப்பொழுதையும் விட ஸ்திரமானதாகவும், வலிமையானதாகவும் மாறிவிட்டதைக் குறிக்கின்றது. சிந்தனைக் கூர்ப்பைப் பொறுத்தவரை இது ஒரு மகத்தான பாய்ச்சல். இப்பொழுது குறியீடுகளிற்கூடாகவும், தானங்களிற் கூடாகவும் சிந்திப்பது முன்னெப்பொழுதையும்விட இலகுவானதாகவும், விரைவானதாகவும் மாறிவிட்டது. இந்தவகையில் இன்றைய கொம்பியூட்டர்கள் கண்டுபிடிக்கப்படும் வரையிலும் வரலாற்றில் மனித சிந்தனைப் பொறிமுறையை எண்ணும் எழுத்தும் பாதித்த அளவிற்கு வேறெந்த கண்டுபிடிப்பும் பாதித்திருக்கவில்லை எனலாம்.

எண்ணும் எழுத்தும் நதிக்கரையில் மத குருமார் மற்றும் மூளை உழைப்பாளிகளை மேலும் சக்திமிக்கவர்களாக மாற்றின. இதனால் அவர்கள் சமூகத்தின் மீது ஆதிக்கம் செய்ய மேலும் புதிய கருவிகள் கிடைத்தது போலாயிற்று. நதிக்கரைகளில் மிக நீண்ட காலத்திற்கு ஏன் பின்வந்த 'கிளசிக்' யுகத்திலும் கூட எழுத்து சாதாரண மக்களை அனேகமாகச் சென்றடைந்திருக்கவில்லை. இந்நிலையில் முதல் நாகரீகங்களில் எழுத்து சமூகத்தில் ஏற்கனவே காணப்பட்ட அதிகாரப் படிநிலைகளை ஆழமாக்கி உறுதிப்படுத்திய தென்பதே சரி. பேசப்படும் மொழியானது அது பேசப்படும் சமூகத்தின் பண்பாட்டின் பிரதான ஊடகம் என்ற வகையில் முழுச் சமூகத்தையும் இறுகப் பிணைத்தது. ஆனால் எழுதப்படும் மொழியோ, சலுகை பெற்ற மூளை உழைப்பாளிகளின் கருவியாகி சமூகத்தில் காணப்பட்ட அதிகாரப்படி நிலைகளின் பாற்பட்ட பிரிவுகளை மேலும் திட்டவட்டமாக்கியது.

நதி மைய வாழ்வில் அதன் ஆரம்பகாலமிருந்தே அங்கு அறிவு மேலாண்மை பெறும் விதத்தில் நிகழ்ந்துவந்த எல்லாக் கண்டுபிடிப்புக்களும் மாற்றங்களும் அவற்றின் இயல்பான தர்க்கபூர்வ வளர்ச்சியாக சமூகத்தின் மீதான மூளை உழைப்பாளிகளின் ஆதிக்கத்தை பலப்படுத்தியே வந்துள்ளன. இந்த வகையில் மனித சமூகக்கூர்ப்பின் அறிவின் மேலாண்மை எனப்படுவது ஒரு விதத்தில் அங்கு நேரடி உடல் உழைப்பிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த சலுகைபெற்ற சிறு பிரிவினரின் கூர்ப்பாகத்தான் காணப்படுகின்றது. எனவே எண், எழுத்து மூலம் மனித அறிவு பொருளுலகு மீது அடைந்த முதற் கட்ட இறுதி வெற்றி எனலாம். இந்த மூளை உழைப்பாளிகளே சமூக முகாமைத் துவத்தின் மையத்தில் காணப்பட்டார்கள். எனவே அவர்கள் முதற்கட்ட இறுதி வெற்றியை சமூக முகாமைத்துவம் பெற்ற முதற் கட்ட இறுதி வெற்றியாகவும் கூறலாம். இப்பொழுது முழுச் சமூகத்தையும் முகாமை செய்வதற்கு, ஆள்வதற்கு சமூக முகாமையாளர்களுக்கு புதிய ஆகப்பிந்திய ஆயுதங்கள் கிடைத்துவிட்டன. இது முதலாவது சமூக முகாமைத்துவம். அதன் முதற்கட்ட உளவியல் முதிர்ச்சியை அடைந்துவிட்டதையே காட்டுகின்றது. இதனை இன்னும் திருத்தமாகச் சொன்னால் முதலாவது சமூக முகாமைத்துவம் நாம் அதனை அரசு என்று அழைக்கத்தக்க வளர்ச்சிக்குரிய அடிப்படைத் தகுதியை உளவியல் முதிர்ச்சியை அடைந்துவிட்டது எனலாம்.

இதனை வேறொரு வழியிலும் நிறுவ முடியும். எவ்வாறெனில் அநேகமாக எல்லா நதிப்பள்ளத்தாக்குகளிலும் எண்ணும் எழுத்தும் காணப்பட்ட சற்றேறக்குறைய அதே காலப்பகுதியில்தான் அங்கெல்லாம் மிக வலிமையான ஒரு ஒன்றிணைக்கப்பட்ட வலிய அரசின் பிரசன்னத்தை காணமுடிகின்றது.

நதிப்பள்ளத்தாக்குகளில் ஆரம்பத்தில் தன்னியல்பாகத் தோன்றி வளர்ந்து வந்த உதிரியான நகரங்கள் அல்லது மதநகர அரசுகள், அல்லது சிறு, சிறு அரசுகள் போன்றன நிலத்தொடர்ச்சி காரணமாக அல்லது நதி சார்பாக ஒரு மையப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பின் கீழ் ஆட்சியதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட நிலையே இது.

உலோகப்பாவனையில் மேலாண்மை பெற்றிருந்த காரணத்தினாலோ அல்லது வேறெந்தக் காரணங்களுக்குமாகவோ பலம் பெற்றிருந்த குறித்த ஒரு இனக்குழு அல்லது பலசாலியான ஒரு மன்னன் இவ்விதம் சிறிய உதிரி அரசுகளை அவை அமைந்திருந்த நதிசார்பாக ஒன்றிணைத்தான். எனவே நதிக்கரை வாழ்வில் பொருளுலகம் மீது மனிதன் அடைந்த முதற்கட்ட இறுதி வெற்றியை அதன் உளவியல் அர்த்தத்தில் கூறுமிடத்து எண்ணும், எழுத்தும் எனலாம். அதை இதன் பௌதீக அர்த்தத்தில் கூறுமிடத்து முதலாவது வலிய அரசுகள் எனலாம்.

எண்ணும், எழுத்தும் வந்தவுடன் பொருளுலகம் தானங்களாகவும் குறியீடுகளாகவும் இயன்றளவு எளிமைப் படுத்தப்பட்டு சுருக்கப்பட்டுவிட்டது. இது பொருளுலகின் மீதான சிந்தனையின் பிடி முன்னெப்பொழுதையும் விட ஸ்திரமானதாகவும், வலிமையானதாகவும் மாறிவிட்டதைக் குறிக்கின்றது. சிந்தனைக் கூர்ப்பைப் பொறுத்தவரை இது ஒரு மகத்தான பாய்ச்சல். இப்பொழுது குறியீடுகளிற்கூடாகவும், தானங்களிற் கூடாகவும் சிந்திப்பது முன்னெப்பொழுதையும்விட இலகுவானதாகவும், விரைவானதாகவும் மாறிவிட்டது. இந்தவகையில் இன்றைய கொம்பியூட்டர்கள் கண்டுபிடிக்கப்படும் வரையிலும் வரலாற்றில் மனித சிந்தனைப் பொறிமுறையை எண்ணும் எழுத்தும் பாதித்த அளவிற்கு வேறெந்த கண்டுபிடிப்பும் பாதித்திருக்கவில்லை

இத்தகைய முதலாவது வலிய அரசு அல்லது வலிமையான மைய அதிகார அமைப்பின் பிரசன்னமானது ஒரு நாகரீகம் அதன் முழு வளர்ச்சிக்கு வந்துவிட்டதையே காட்டுகின்றது என்று பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகின்றது. சில வரலாற்றாசிரியர்கள் இதனை நாகரீகங்களின் Take off - நிலை -மேலெழுநிலை என்று வர்ணிக்கின்றார்கள்.

நதிப்பள்ளத்தாக்குகளில் இப்படியொரு Take off முதலில் நிகழ்ந்தது சுமாராக கி.மு 3360 என்று நம்பப்படுகின்றது. மத்தியதரைக் கடல் பிராந்தியத்தில் மேற்காசியாவில் உள்ள மொசப்பதேமியாவில் (யூபிரட்டீஸ் ரைக்கிறீஸ் நதிக்கிடைப்பட்ட நிலத்தில்) மேற்படி முதலாவது Take off நிகழ்ந்தது. இதற்கடுத்ததாக இப்பிராந்தியத்திலுள்ள வட ஆபிரிக்காவில் எகிப்திய நாகரீகம் கி.மு 3110இல் அதன் Take off நிலையை அடைந்தது. தொடர்ந்து ஐரோப்பாவின் தாய் நாகரீகமான கிறிற்றன் நாகரீகம் இதே பிராந்தியத்தில் தென் கிழக்கு ஐரோப்பாவில் கி.மு 2500 இல் அதன் Take off நிலைக்கு வந்தது. ஏனைய இரு நாகரீகங்களும் ஆசியாவின் இரு வேறு பகுதிகளில் இந்தியாவில் கி.மு 2250 இல், சீனாவில் 1523இலும், அவற்றின் Take off நிலைக்கு வந்தன. மிஞ்சிய எல்லா நாகரீகங்களும் இவற்றிற்கும் பிந்தியவைதான்.

(இன்னும் வரும்)



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒளிப்படங்கள்: அமரதாஸ்



ஆதிலட்சுமி சிவகுமார்

# ஒரு பயணப்பொழுது

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பனைவெளியூடாக நாங்கள் சென்றுகொண்டிருந்தோம். மணற்தரையில் வாகனச் சில்லுகள் நகர்வதற்கு அடம்பிடித்தன. "யோகன் ரைக்ரர் பாதையைவிட்டு விலகாம ஓடு..." ஓட்டுநருக்கு எங்களோடு வந்தவர் சொன்னார்.

"ஏன் அப்பிடிச் சொல்லுறியள்..."

அப்பாவித்தனமாகக் கேட்ட என்னைப் பார்த்து அவர் புன்னகைத்தார். "இந்தப்பக்கம் எல்லாம் ஆமி இருந்தவன்... ஏராளமான புதைவெடிகள் இருக்கும்... பாரத்துக்கு ஏற்றமாதிரி வெடிக்கிறதுக்கு வைச்சிருப்பான்"

கண்ணாடியூடாக வெளியே பார்த்தான். எங்கும் பனைமரங்கள் காயப்பட்டவை. கருகியவை, கழுத்துமுறிந்தவை... போரின் வடுக்களை அவையும் சுமந்திருந்தன. வீடுகள் அதிகமாய் இல்லை.... இருந்தவைகளும் கற்குவியல்களாய்... இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து இந்தப்பிரதேசம் மீட்கப்பட்டபிறகு இப்போதான் கொஞ்சம் கொஞ்சமாகச் சனங்கள் குடியேறிக்கொண்டிருக் கிறார்கள். கட்டிடங்கள் எல்லாம் கற்குவியல்களாகிக் கிடக்க அருகே பனை ஓலைகளால் அமைக்கப்பட்ட சிறிய குடிசைகளில் மக்கள். கண்ணம்மாவின் வீடும் இங்குதான். சரியாகத்தெரியாது. சந்திகளில் ஒழுங்கைகளில் விசாரித்து விசாரித்து பயணித்தோம். தங்கள் கிராமத்துக்குள் நுழையும் புதிய வாகனத்தை பல சிறுவர்கள் ஓடிவந்து வியப்போடு பார்த்தார்கள். வழிகேட்டுக்கொண்டு பயணித்துக்கொண்டிருந்தோம்.

"மண்டைதீவில இருக்கிற ஆமி அடிச்ச செல்கூட இஞ்சவந்து விழுந்தது" அப்போது எங்களோடு வந்துகொண்டிருந்த போராளி.

"நான் கௌதாரிமுனையில லைன்ல நிண்டனான்.... அங்க சாப்பிட்ட புட்டை என்னால மறக்கமுடியாது...." என்றார்.

"அவ்வளவு ருசியோ அண்ண"

"அவசரத்தில அவியிற புட்டுத்தானே வெறும் மாவா வரும்..... பிறகு நாங்கள்.... அதை தண்ணிவிட்டுக்குழைச்சு.... வெய்யில காயவைப்பம்.... பிறகு கொமாண்டோச் சட்டியில வறுத்து.... இடைநேரங்களில சாப்பிடுவம்...."

வழிநெடுக நீண்ட போரின் வடுக்களைப் பார்த்துக்கொண்டிருந்தேன் நான். "இப்ப நாங்கள் போறவீடு சொந்தமோ"

"ம்"

எனக்கு கண்ணனம்மாவின் நினைவுகள் எழுந்தன. அவருக்கு என்ன பெயரென்று எங்களுக்குத் தெரியாது. ஆனால் அவரது குட்டிமகன் கண்ணன் என்பதால் கண்ணனம்மா என்றுதான் சொல்வோம். கண்ணனம்மாவின் இன்னொருமகன் மாவீரன். மகளும் குடாரப்புத் தரையிறக்கத்தில் வீரச்சாவு. மாவீரனான மகன்தான் முதலில் எங்களுக்குப் பழக்கம். தன் துறைசார்ந்த பணிக்காக எங்களோடு பழகி எங்கள் குடும்பத்திலும் ஒன்றானவன். அவனுடைய வீரச்சாவுக்குப் பிறகு.... யாழ்குடாநாடு இடம்பெயர்ந்த போது.... அவனுடைய குடும்பமும் அறிமுகமானது. அந்தக் குடும்பத்தின் இன்னொரு போராட்ட பங்காளியாக மல்லிகா.

"தம்பிக்கு நெருக்காமாயிருந்தவர்கள்" என்று எங்களைத்தேடி வந்தாள். கலகலவென்ற பேச்சு.... மதியம் உணவுண்டு போனாள்...

"நேரம் கிடைச்சா வந்து போவன்....."

அவள் பிறகு வரவேயில்லை.

இடம்பெயர்ந்து.... அநாதரவாய்.... நாங்கள் ஒதுங்கிக்கொண்டபோது.... அரவணைத்தது இந்தக்குடும்பம்தான். அண்ணனும் அக்காவும் போராடப்போக.... படிப்பை நிறுத்திவிட்டு அப்பாவுக்குத் துணையாக இருப்பவன் கண்ணன். தோட்டவேலை செய்து இறுகிய உடம்பு. வெயில் குடித்துக் கறுத்துப்போயிருந்தது. உடம்பும்.... உயரமும் மாறிவிட்டாலும் சிரிப்பு மாறாதிருந்தான். அம்மாதான் குடும்பத்தின் நிர்வாகம். அப்பாவுக்கு சமனாக மண்வெட்டிவேலை செய்யவோ அல்லது தண்ணீர் இறைக்கவோ எல்லாம் அம்மாவால் முடியும். வீட்டைச் சுற்றி மரக்கறித்தோட்டம். அது அம்மாவுடையது. ஆலங்கேணியில் அப்பாவின் தோட்டம் நெற்புலவிலிருந்து ஆலங்கேணிக்கு அம்மாதான் உணவு கொண்டுபோவார். இடப்பெயர்வு நேரம் உணவின்றி, உழைப்பின்றி நாங்கள் பரிதவித்தபோது.... கண்ணனம்மா குடும்பத்தினர் காட்டிய ஆதரவை எங்களால் மறக்க முடியாது.

அம்மாவிடம் யாரது ? இவையள் ஆர்?? என்று யாரும் கேட்டால் "இவை தம்பிக்குத் தெரிஞ்சவை" என்பார் தம்பி என்பது மாவீரனான அவர்களுடைய மகன். பூநகரி சிங்களப்படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நேரம்.... அம்மாவின் குடும்பம் வன்னேரி ஆனைவிழுந்தானில் இருந்தது. நாங்கள் ஜெயபுரத்தில் இருந்தோம். அம்மா அடிக்கடி நடந்துவருவா. வரும்போது பாலைப்பழமோ, வாழைப்பழமோ, எள்ளுருண்டையோ கொண்டுவந்து தருவா. அம்மாவுக்கு வரநேரமில்லை எண்டால்.... அப்பாவைப்பிடித்து துரத்திவிடுவா அம்மா.... அப்பா வரும்போதும் மரவள்ளிக்கிழங்கு, வாழைக்காய், பனம்பழம் என்று ஏதாவது கொண்டு வருவார். "என்னத்துக்கப்பா இப்பிடிச் சிரமப்படுறியள் உங்களுக்கு நாங்கள் அப்பிடி என்ன செய்திருக்கிறம்..." என்று கேட்டால். "தம்பி அங்க நிண்ட நேரத்தில அவனைப் பாத்தனீங்கள்தானே" என்பார் "தம்பிய இயக்கமெல்லோ பாத்தது" என்றால் சிரிப்பார். அவர்களின் வீடும் குசினியும் பிறம்பு பிறம்பாக இருந்தது. அப்பா வீட்டுக்குள் தனியத்தான் படுப்பார். அம்மாவும் கண்ணனும் அடுப்படிக்குள். திடீரென்று ஒருநாளிரவு யானை வந்துவிட்டதாம். ஏதோ சரசரப்புக் கேட்க அப்பா எழுந்துவெளியே வர இருளில் யானை பெரிய உருவமாய்... தும்பிக்கையை விசுறுவதற்குள் அப்பா ஓடிவிட்டார்.

"நல்ல காலம்"அம்மா தவித்துப்போனா. இரவு ஓடியவர் காலையிற்தான் வீடுவந்தார். அம்மா துடித்துப்போய்.... அப்பா வந்தததும் ஆறுதல்பட்டா.

"அக்கான்ர மூச்சுப் பேச்சக் காணேல்ல...ஏதும் கனாக்கினாக் காணுறியளோ......"

ஓட்டுனர் யோகன் கேட்க......

"இல்லையில்லை வீடுவந்திட்டுதே..." கேட்டேன் ஒரு சிறிய தட்டிக் கடைக்கு முன்னால் வாகனம் நின்றிருந்தது. ஏழெட்டுச் சிறுவர்கள் வாகனத்தை மொய்த்தனர்.

"டேய் இயக்கமடா"

"இல்லையடா.... ஒரு அம்மாவும் இருக்கிறா .... சனமெடா....."

சிறுவர்கள் ஆரவாரப்பட்டனர். கடைக்குள்ளிருந்து பெரிய மீசை வைத்த ஐயா ஒருவர் வந்தார். நாதன் அவரிடம் வீடுகேட்க அவர் வீட்டின் குறிப்பைச் சொன்னார். வாகனம் புறப்படுகிறது. சொன்னமாதிரியே வீட்டின் முன்னால் நிற்கிறது. கடதாசிப்பூ மரப்பந்தலின் கீழ் சாக்குக்கட்டிலில் அப்பா படுத்திருப்பதை நான் கண்டுவிட்டேன்.

"இதுதான் வீடு"

முன்னாலிருந்தவர்களை இடித்துக்கொண்டு முதலில் இறங்கினேன். "அப்பா என்னைத் தெரியுதோ?......."



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாகனம் புறப்பட்டது. மாலை மங்கிக்கொண்டிருந்தபொழுது வெய்யில் அமந்துவிட்டது. வழிநெடுகலும்.... முறிந்த காயப்பட்ட பனைமரங்களில் கீழே புன்னகையோடு வடலிகள் தலைநிமிர்த்தியபடி நிற்கும் அழகையும் அற்புதத்தையும்.... அர்த்தத்தையும் உள்வாங்கியபடி நாங்கள் பயணித்துக்கொண்டிருந்தோம்

கண்களை இடுக்கிப் பார்த்தார். பிறகு பெரிதாகச் சிரித்தார். "இருங்கோ" பின்னால் நின்றவர்களைப் பார்த்துச் சொன்னார்.

"அம்மா எங்கையப்பா"
"இப்ப வருவா இருங்கோ"

அப்பாவின் சாக்குக் கட்டிலிலும்.... முன்னாலிருந்த வாங்கிலுமாக அமர்ந்தோம்... வீடென்பது வெறும் குடிசையாகத் தெரிந்தது. காட்போட் மட்டைகளாலும் எண்ணைபரல் தகரங்களாலும்... இன்னும் வேறு பொருட்களாலும்செருகப்பட்டு ஒழுக்கில்லாமல் தயார் செய்யப்பட்டிருந்தது. அம்மா கையில் தேங்காயெண்ணைப் போத்தலுடன் கடதாசிச் சுருள்களில் ஏதோ பொருட்களுடனும் வந்தா. அம்மாவைப் பாத்தவுடன் என் கண்கள் கலங்கின. இரண்டு பிள்ளைகளை அர்ப்பணித்துவிட்டு அம்மா மெலிந்து முதிர்ந்து தெரிந்தா. அம்மா கொஞ்சநேரம் உற்றுப் பார்த்தா. எந்தவினாடியும் வெடித்துச் சிதறப்போகும் அம்மாவின் அழுகுரலை எதிர்பாத்து.... அதை எப்படித் தாங்கப் போகிறேன் என்று மனம் தவித்தது.

"இருங்கோ...அடுப்பில தண்ணிகொதிக்குது... தேத்தண்ணி ஊத்திக்கொண்டு வாறன்" அம்மா சிறிய அடுப்படிக்குள் நுழைந்தா.

"உள்ளபோய் தம்பி தங்கச்சியின்ர படத்தைப் பாருங்கோ" நாங்கள் நான்கு பேரும் வரிசையால் அந்தக்கொட்டிருக் குள் குனிந்து உள்நுழைந்தோம்.... மண்சுவரில் இறுக்கியிருந்த பலகையில் கப்டன் ஆபிரகாம்.... மேஜர் ஆதவி.... கடற்கரும்புலி மேஜர் காந்தி, திருவுருவப்படங்களாய்......

"காந்தி எங்கட வீட்ட வந்துவந்து பழகி... எங்கடை விலாசம்தான் குடுத்தது" அம்மா கூறினா. மீண்டும் வந்து வாங்கிலில் அமர்ந்தோம். அம்மா தேத்தண்ணி கொண்டுவந்து ஒவ்வொருவருக்கும் கையிற் தந்தா.

"கடிக்கிறதுக்கு ஏதும் குடன்"

"ஓ.... மாப்பிரட்டி வைச்சிருக்கிறன்... எடுத்துக்கொண்டுவாறன்..."

அம்மாவின் மாப்பிரட்டலும்...தேனீரும்.... எங்களுடைய மாலை உணவாகின.

"தோட்ட வேலையள்.. எப்பிடியப்பா?......"

அப்பா சிரித்தார். முழங்காலுக்குக் கீழே வீங்கிக் கிடந்த தன் கால்களைத் தடவினார்.

"தோட்டப்பக்கம் இப்ப நான் போறேல்ல... தம்பிதான் போறவன்..... அம்மான்ர தோட்டத்தை நம்பித்தான் இப்ப இருக்கிறன்...." சிரித்தார். அப்பா சிரிக்கும்போது நெற்றியில் நரம்புகள் புடைத்தன. அப்பா மல்லிகாவில் அதிகளவு பாசம். அவளின் இழப்பு அப்பாவைக் கூடுதலாகப் பாதித்திருந்தது. "நேற்றைக்கும் தம்பி கனவில வந்தவன் பிள்ள... சக்கரைப் புக்கையெண்டா சாப்பிடுறன் எண்டான். திடுக்கிட்டு எழும்பினன் கனவு....." அம்மா துயரம் தோயச் சொன்னா. அம்மாவின் மகன் இடிமுழக்கத்தாக்குதலில்தான் வீரச்சாவு. வித்துடல் கிடைக்கவில்லை. அம்மாவுக்கு ஒருவேளை தன்பிள்ளை உயிரோடிருக்காலம் என்ற நப்பாசை. ஆனாலும் அப்பாவைவிட அம்மா உறுதியோடிருந்தா. "அந்த வேம்பைப் பாருங்கோ தம்பி...அதிலை செல்விழுந்து வெடிக்கேக்கைகூட இந்தச் சாக்குக்கட்டிலிலைதான் படுத்துக் கிடந்தனான். இனி எனக்குச் சாவுவாறதெண்டால் இந்த இடத்திலதான் அதை எதிர்கொள்ளவேணுமெண்டு விரும்புறன்" அம்மாவும் அப்பாவும் வசிக்கும் அந்தச் சிறு குடிசையில் அருகருகாக ஒரு தூண் நின்றது. அதிலும் காயங்கள் இருந்தன.

"எங்கட முந்தினவீடு நாலறையில பெரிய கல்வீடு பிள்ளை.. இப்ப நினைவுக்கு ஒரு தூணும்.. நாலு தென்னமரமும்தான் இருக்கு" அப்பா கூறினார்.

"நீ இப்ப வடிவா மீன்குழம்பு வைப்பியோ?...." அம்மா என்னைப் பார்த்துக்கேட்டா சிரிப்புடன்..... அம்மாவை ஒருமுறை வற்புறுத்தி... "நான் வைச்ச மீன்குழம்பு. சாப்பிட்டுவிட்டுத்தான் போகவேணும்" என்றேன். அம்மாவும் சம்மதித்தா. அன்று அளவுக்கு அதிகமாக உப்போடும் புளியோடும் அந்தக் குழம்பு இருந்தது. அதைத்தான் அம்மா கேட்கிறா எனப்புரிந்துகொண்டு நானும் சிரித்தேன். வீட்டைச் சுற்றியும் பல பனைமரங்கள் முறிந்து கிடந்தன. அந்தக் கிராமத்தின் அமைதியும், எஞ்சிக்கிடக்கும் போரெச்சங்களும் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. எல்லாவற்றையும்விட.. வழிநெடுக மாபிள் அடித்துக்கொண்டும், வண்டில் உருட்டிக்கொண்டும் திரியும் சிறுவர்களின் மகிழ்ச்சி என்னைப் பரவசப்படுத்தியது. இந்தக் குழந்தைகளின் மகிழ்ச்சிக்காகத்தானே இத்தனை மாவீரர்களும் தங்கடை அர்ப்பணித்தார்கள். நான் பூநகரி மீட்புச்சமரில் வீரச்சாவணைத்தவர்களை நினைத்துக்கொண்டேன். அம்மாவின் பிள்ளைகளிலும் இருவர் மாவீரர்... எல்லா அம்மாக்களையும் போலத்தான் அம்மாவும் தன் பிள்ளைகளை எண்ணி உருகுவதும்...பின்னர் "இந்த மண்ணை விடுவிக்கத்தானே போனதுகள்....." என்று ஆறுவதுமாய்....... அப்பாவுக்கு வெளிப்படையாய் கவலைகளைக் கொட்டத்தெரியாது. அதனால்த்தான் இப்பிடி உருக்குலைந்து போயிருக்கிறார். ஆனால் சிரித்தபடிதான் இருப்பார்...... வெற்றிலைபாக்கோடு அவரின் பொழுதுகள் போய்விடுமாம்........ "உதையேனப்பா சப்புறியள்.... வாய்ப்புண்ணெல்லே வரப்போகுது....." என்று கேட்டால்..... மிகமெதுவாக..... "தாம்பூலம் தரிக்கிறது... தமிழன்ரை பண்பாடு" என்பார் மிகமெதுவாக... "வெளிக்கிடப்போறம்..." எங்களுடன் வந்தபோராளி எழுந்தபோது.... "மல்லிகாவின்ர வீரச்சாவுக்குக்கூட வரேல்ல..... எப்பிடியாவது வரோணும் எண்டு நினைச்சு.... இண்டைக்குத்தான் முடிஞ்சுது...." குற்ற உணர்வோடு கூறியபோது..... அம்மா கையைப்பிடித்தா. "இந்தா பிள்ளை இது எங்கட மரத்தில காய்ச்சது... முதல்ப்பழம் உங்களுக்குத்தான்" இரண்டு மாம்பழங்களை பையில் வைத்து அம்மா தந்தா. மனம் ஒருமுறை பொங்கித் தணிந்தது. "என்பும் உரியர் பிறர்க்கு" என்பது இதுதானா? என்று மனம் அலசியது. "போட்டுவாறம்" விடைபெற்றுக்கொண்டோம். வாகனம் புறப்பட்டது. மாலை மங்கிக்கொண்டிருந்தபொழுது வெய்யில் அமந்துவிட்டது. வழிநெடுகலும்.... முறிந்த காயப்பட்ட பனைமரங்களில் கீழே புன்னகையோடு வடலிகள் தலைநிமிர்த்தியபடி நிற்கும் அழகையும் அற்புதத்தையும்.... அர்த்தத்தையும் உள்வாங்கியபடி நாங்கள் பயணித்துக்கொண்டிருந்தோம்.

■



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

■ சாமி சுரேஸ்

# மௌனவெளி



ஒளிப்படம்: ஜீவகுமார்

எல்லாம்
புரிவதும் புரியாததும் முட்கள்தான்

எனக்குள் ஒரு முகம்
மரணம் கொள்கிறது

வானத்தின் சிரசைமுட்டி
தூவுகின்ற வேளையில்
எனக்குத் தெரியும் நான் யாரென்று

வா தரையில் நடப்போம்

கோர்த்த கைகளின் விரல்வெளியினூடு
உள்ளங்கை உணர்வு புரிந்தது

மௌனச்சுமைவெளியில்
மனப்பாறையில் எச்சம்

சொற்சகதிகளில் காலடிவைக்க
கரையோரஅலைகளில் மனிதக்குரல்கள்

அழகென்பது பயப்பிராந்தியில் வெளியேறுகிறது

உண்மையெது பொய்யெது
கண்தொலைவில் முடிவிலிகள்

வாசல்வரை வந்துபோகின்ற மகிழ்வுகள்
மனப்பதருக்குள் விழிசெருக
தூரத்துப்புள்ளிகளெல்லாம்
மாயமாய் மறையும்

இதுவரையும் மழைச்சாயங்களில் கூட
என் துளிர்கள் சிலிர்க்கவில்லை

அழகென்பது....?



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எம்.அரியநாயகம்



# தக்காவெர்

கடந்த ஒருவாரமாக விடுமுறையில் நிற்கும் வான்சுவாங்கிற்குப் பதிலாக புதிதாக வேலைக்கு வந்திருக்கும் சியாங்கை வைத்துக் கொண்டு வேலை செய்வது தியாகருக்கு இரட்டிப்புக் களைப்பைக் கொடுத்தது. உணவு பரிமாறும் பெண் சியாங்குடன் உரசிக்கொள்வதற்காக காரணமில்லாமல் அந்தச்சிறிய சமையலறைக்குள் அடிக்கடி வந்து போவது அவருக்கு இடைஞ்சலாக இருந்தது. இருப்பினும் அவர்கள் இருவருமே முதலாளியின் உறவினர்கள் என்ற வகையில் எதையும் அவர்களுக்குச் சொல்ல முடியாத நிலையில் அவரது மனம் புழுங்கித்தவித்தது. வாயில்லாப் பூச்சியாகத் தனது வேலையை முடித்துக்கொண்டு நெருப்பின் வெப்பம், மனவெப்பம் இரண்டலிருந்தும் விடுபட்டவராய் சமையல் அறையிலிருந்து வெளியே வந்த தியாகருக்கு அவருடைய முதலாளி ஒரு அளவு விஸ்க்கியை ஊற்றிக் கொடுத்தது அவரது உள அமுக்கத்தை சற்றுக் குறைத்தது.

கொடுக்கப்பட்ட நேரத்திற்கு அதிகமாக தினமும் ஒரிரு மணித்தியாலங்கள் தன்னிடம் அவர் வேலைவாங்குவதற்கான சமரச பானம்தான் அது என்று தியாகுக்கு தெரியாதல்ல...

இருப்பினும் கையால் பணம் கொடுக்காமல், இலவசம் என்ற திருப்தியோடு பருகும்போது அதிக போதை ஏற்படுவது போன்ற உணர்வு அவருக்கு ஏற்படவே செய்தது.

"மோசி மிஸ்யூ ஓர்வா ஆ துமாய்"
"Merci monsieur, aurevoir, à demain"
"நன்றி, போய்வருகிறேன் நாளை சந்திப்போம்"

வியட்நாம் நாட்டுக்காரின் உணவுவிடுதியை விட்டு அவசரமாக வெளியே வந்தவருக்கு இனி மற்றொரு உலகம் அவருக்காக காத்திருப்பது போல் எட்டி நடக்கத் தொடங்கினார்.

"தியாகு நீ மேல் நாட்டுக்குப் போறாய் திரும்பி வாறதுக்குள்ள நாங்கள் மேல் லோகம் போயிடுவம்" என்று அவர் அம்மாவும் அப்பாவும் சொல்லி அழ பிரியமனமில்லாமல் அவரது மனைவி பிள்ளைகள் அவரது கைகளை இறுகப் பற்றிப்பிடித்துக்கொள்ள அவர் தனது மனசைக் கல்லாக்கிக்கொண்டு புறப்பட்டு அகதியாக நாற்பதைத் தொட்டிருந்தது. இப்போது அவர் ஐம்பத்திரண்டைக் கடந்து விட்டார். இந்த அந்நியநாட்டில் வாழும் இந்த வாழ்க்கையில் அமிழ்ந்து கிடக்கும் போலித்தனங்கள். மனைவி பிள்ளைகள் வீடு குடும்பம் உறவுகள். என எல்லோரும் சேர்ந்துதான் வாழ்கிறோமா? என்ற கேள்விகளுக்கெல்லாம் விடைதெரியாத புதிராகவே அவருக்கு இருந்தது.

இன்னும் ஐந்து நிமிடங்களுக்குள் வடக்கு மின் தொடர் நிலையைத்திலிருந்து இறுதியாகப்புறப்படும் இரவு நேர நில அடிமின் தொடர் உந்தை அவர் பிடித்தாக வேண்டும். அவர் வேகமாக நடந்துகொண்டிருந்தார். மனசுதான் வேகமாகச் செயல்பட்டதேயொழிய அவருடைய வயது தனது வேலையைச் சரியாகவே செய்து கொண்டிருந்தது.

மனிதனுக்குள் இருக்கும் மனசு அதற்கு எங்கிருந்தோ எப்படியோ எல்லாம் ஆசைகள் எண்ணங்கள், ஏக்கங்கள் எல்லாம் வந்து சூழ்ந்து கொள்கின்றன. ஆசைப்பட்டது கிடைக்கும்வரை அது படும் பரிதவிப்பு வெறி மூர்க்கம்.... அவற்றையெல்லாம் அடைந்து விட்டால் அவையெல்லாம் அதற்கு மிக அற்பமாகி விடும்... இந்த மனமே மனிதனுக்கு ஒரு புரியாத புதிர்தான்.

ஆறு ஆண்டுகள் பிடித்தது அவருக்கு பிரான்ஸ் நாட்டின் அகதிக்கான வதிவிட உரிமை கிடைப்பதற்கு அந்த ஆறு ஆண்டுகாலமும் வேலை, உணவு, அரச உதவி, இருப்பிடம் எதுவுமே நிரந்தரமில்லாமல் அவர்பட்ட இன்னல்கள் வார்த்தைகளுக்குட்படாதவை. அகதி அந்தஸ்த்து கோருபவருக்கு ஒத்தாசை செய்கிறோம் என்ற போர்வையில் செயல்படும் சில முகவர்களிடமும் அவர் அகப்பட்டுக் கொண்டு தவித்தார்.

அவரைப்படுத்தியபாடு, ஊரிலிருந்து அவரது மனைவியும் அவரைக் கெஞ்சிக் கூத்தாடி கடிதங்கள் மூலமாகவும் தொலைபேசி மூலமாகவும் காட்டிய அன்புத் தொல்லைகள், இப்போது நினைத்தால் கூட தியாகுக்கு எல்லாமே ஒரு வெறுமையாக இருந்தது.

நடையை மேலும் வேகப்படுத்தி பின்னர் ஓட்டமாய் ஓடி தான் பிடிக்க வேண்டிய மின்தொடர் உந்தைப் பிடித்து



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட்ட தியாகர்.

"அப்பா பெருமானே என்ன வாழ்க்கையப்பா!" மேல்மூச்சு கீழ்மூச்சோடு சேர்ந்து வார்த்தைகளும் இளைத்து வெளிவந்தன. ஓடி, படிகள் ஏறி இறங்கிய களைப்பில் இருதயம் வேகமாக அடித்ததில் வாய்வு வந்து நெஞ்சுக்குள் முட்டி கனத்துக் குத்துவது போல் வலியை ஏற்படுத்தியது, இருக்கையில் அமர்ந்தவர் தலையை சற்றுச் சாய்த்து கண்களை மூடிக்கொண்டார்.

இப்படி கண்களை மூடிக்கொண்டு அவர் ஓய்வு கொள்ள முயலும் போதெல்லாம் சில நினைவுகள் அவர் மீள் தரிசனத்திற்கு வந்து போவது அவருக்கு பழக்கப்பட்டுவிட்டதொன்று.

"என்னப்பா! பரிசுக்கு வந்து ஆறு வருசமாய் என்ன செய்தீங்கள்? நேற்று வந்ததுகள் எல்லாம் வீடு வாசல் எண்டு வாங்கிப் போட்டு காலுக்கு மேல கால் போட்டு ஒய்யாரமாய் இருக்குதுகள். புறாக் கூடு மாதிரி ஒரு வாடகைவீட்டை வைச்சுக் கொண்டே எங்களைக் கூப்பிட்ட நீங்கள்?"

பரிசுக்கு வந்து பத்தே நாளில் அவரது மனைவி அவரிடம் கேட்ட இந்தக் கேள்வியில் இரு கோடுகள் தத்துவமாய் அதுவரை அவர் பட்ட துன்பமெல்லாம் மிக மிகச் சிறிதாய் ஆகியது.

அன்றே அவர் ஒரு பேச்சு மூச்சற்ற ஒரு நடைப்பிணமாய் தான் ஆகிப்போனதை உணர்ந்து வருந்தினார் மின் தொடர் உந்து இரண்டு தரிப்பு நிலையங்களைத் தாண்டிய பின்னரே கண்களை விழித்துக் கொண்டவர் பார்வையை விழித்து ஒரு நோட்டம் விட்டார். நடுநிசியை பலர் தூக்கத்திலும் சிலர் குடிபோதை மயக்கத்திலும் தள்ளாடிக் கொண்டிருந்தனர்.

அவர் வாழ்கையும் கலக்கத்திலும் மயக்கத்திலும் தான் கழிந்து கொண்டிருக்கின்றது.

மீண்டும் தலையைச் சாய்த்து கண்களை மூடிக்கொண்டார்.

"மெய்யப்பா! எங்கட பிள்ளையளை சனி ஞாயிறில தமிழ்ப் பள்ளிக்கூடத்துக்கு கூட்டிக்கொண்டுபோய் படிக்கவிடுமென்"

"உங்களுக்கென்ன விசரே! இஞ்ச இருந்து கொண்டு இரண்டுபேரையும் இழுத்துக்கொண்டு பரிசுக்குப் போய் வாறதெண்டால் எனக்கு வேற வேலை இல்லையா? போய் வாறதுக்கு ரிக்கற் செலவே நாலு நாள் சாப்பாட்டுச் செலவைத் தாக்காட்டும். வந்த பிள்ளையள் முதல் பிரஞ்சைப் படிக்கட்டும்"

மனைவியின் இந்த உதாசினப்பேச்சு இன்றுவரை அவர் மனசை வருத்தாமலில்லை.

"கணவனும் மனைவியும் வலதுகை இடதுகை போல இருவரும் ஒருவர் மற்றவர் குறைகளை பொறுத்துக் கொள்ளவேண்டும். பின்னர் இரு கைகளும் சேர்ந்து முகத்தைக் கழுவுவது போல இந்தச் சமுதாயத்தைக் கழுவ வேண்டும். இதைத்தான் இனிய இல்லறத்துக்கான ஒரு பாதை" என்கிறது இஸ்லாம்.

எங்கேயோ எப்போதோ போட்ட இந்த வார்த்தைகள் தியாகரின் மனதில் மிக ஆழமாகவே பதிந்துவிட்டது. அதன் படியே வாழ்ந் விடுவது என்று அவர் எடுத்துக் கொண்ட முடிவு அவரது மனச்சுமைகளுக் கெல்லாம் அருமருந்தாக இருப்பதை தீர்க்கமாக உணர்ந்தார்.

தூரத்தே இருவர் பலமாகப் பேசிச்சிரிப்பது காதில் விழ மீண்டும் கண்களை விழித்தபோது சற்றுத்தள்ளி அடுத்த ஆசனத்தில் இருந்த வெள்ளைத்தோல் மனிதன் வெறுப்போடு அவர்களை எட்டிப் பார்த்து விட்டு பின்னர் திரும்பி அவரையும் அதே வெறுப்போடு பார்த்தது. அவருக்கு கூச்சமாக இருந்தது.

வேலைக்களைப்பிலும், தூக்க நிலையிலும், பல்வேறு சுமைகளை மனதுக்குள் அசைபோட்டுக்கொண்டும் அமைதியாப் பயணித்துக் கொண்டிருந்தவர்களுக்கு அவர்களின் பலத்த பேச்சும் சிரிப்பும் அருவருப்பைக் கொடுக்கவே செய்தது.

அவர்கள் பேசிய மொழியிலிருந்து பாகிஸ்தானியர்களாகவோ அல்லது குஜராத்தியராகவோ தான் அவர்கள் இருக்கவேண்டும். என்பது தியாகுக்கு தெரிந்தது. ஆனால் அந்த வெள்ளைத்தோலுக்க அது புரியாமல் அவர்கள் தன்னையும் அவர்களில் ஒருவனாக கருதி வெறுப்போடு பார்க்கிறான் என்பதை அவர் உணர்ந்து கொண்டார். எங்கள் இனத்தவரும் இந்தத் தவறுகளைச் செய்வதில் சளைத்தவர்கள் அல்ல என்பது அவருக்கு தெரியாததல்ல.

துருக்கி,ஈரான்,ஈராக் மொரோக் அல்ஜிரியா போன்ற அரபு நாட்டார்கள் எல்லாம் ஆசியர்களின் பார்வைக்கு ஒரு நாட்டைச் சேர்ந்த இனத்தவர்களாகவே தெரிகிறார்கள். ஏன் ஐரோப்பியர்கூட அவர்கள் பேச்சு மொழியிலேதானே, யார் பிரெஞ்சுக்காரன், யார் ஜேர்மன்காரன் என அடையாளம் காண முடிகிறது. இது போலத்தானே ஆபிரிக்க கறுப்பு இனத்தவர்களும் இவற்றினைப் புரிந்து கொள்ள முடியாத வெள்ளையர்களின் அறியாமைக்கு தியாகர்தான் என்ன செய்ய முடியும் எதையும் கண்டு கொள்ளாதவர்போல மீண்டும் அவர் கண்களை மூடிக்கொண்டார்.

தியாகர் நடுத்தரக்கல்வியறிவும் நல்லவற்றைத் தேடவும், அறியவும் ஆர்வமுள்ளவர். மனச்சான்றுக்கு பயந்து, மதித்து வாழ்கின்ற ஒரு சாதாரணமனிதர்.

அவரது பேரனார் ஐம்பத்தெட்டுக்கலவரத்தில் சிங்களக் காடையார்களினால் கொல்லப்பட்டவர்.

அவரது தந்தையார் சதாசிவம் வட்டுக்கோட்டை மகாநாட்டில் தமிழர் விடுதலைக்கூட்டணியினால் தனி நாடு பிரகடனத்தைக் கொண்டு வந்தபோது வீட்டில் பாயாசம் காய்ச்சிக் குடித்து மகிழ்ந்தவர்.

இருப்பினும் "சிங்களவனிட்ட எதையும் பேசி வாங்கிறதெண்டால் அது கல்லில் நார் உரிச்ச கதைதான்" இந்த எண்ணம் தான் தியாகரின் உடலிலும் ஊறிப் போய் உள்ளது.

"தாய் பிள்ளை உறவு என்று எப்படிச் சந்தோசமாகச் சீவிச்ச நாங்கள் எங்கட மண்ணில. ஆர்... கஞ்சியைக் குடிச்சாலும் அதில இருந்த சந்தோசம் இங்க இம்மி அளவும் இல்ல. பிரான்சுக்கு வந்திட்டால் இப்ப நாங்கள் என்ன பிரான்ஸ்சுக்காரரே. லண்டனுக்குப் போயிற்றா அங்க நாங்கள் என்ன இங்கிலீஸ்காரரோ. தப்பி பிழைச்சு நாங்கள் இங்க வந்திட்டம். ஆனால் எங்கட மண்ணில இருந்துகொண்டு எங்கட சனங்கள் உறவுகள் தங்களை அர்ப்பணிச்சு எங்கட தேச விடுதலைக்காக போராடுதுகள். இஞ்ச இருந்துகொண்டு அதுகளுக்கு உதவி செய்யாவிட்டால் நாங்கள் என்ன மனுசர். இந்த உணர்வை. எண்ணத்தை கட்டாயம் அடுத்த சந்ததி எங்கட பிள்ளையளுக்கும் குடுக்க வேண்டியது எங்கட கடமை"

எங்கேயாவது நாலுபேர் சேர்ந்து குலாவிக் கதைக்கிற சந்தர்ப்பங்களில் தியாகர் அடித்து, அழுத்தி சொல்லிற வார்த்தைகள்தான் இவை. இப்படித் தனிமையில் பயணிக்கும் போதெல்லாம் இந்த எண்ணங்களோடு பிள்ளைகளின் நினைவும் வந்து அவரைச் சித்திரைவதைப் படுத்தும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்னும் சிலநிமிடங்களில் அவர் வீடு போய்ச் சேர்ந்துவிடுவார். அங்கே அவர் மனைவி தொலைக்காட்சியில் ஏதாவது திரைப்படம் ஒன்றைப் போட்டு பார்த்துக்கொண்டிருப்பாள்.

அவர் போனதும் சாப்பாட்டைச் சூடாக்கி வைத்துவிட்டு அவள் தூங்கப் போய்விடுவாள். அதுவரை எதையாவது சொல்லி நச்சரிப்பாள். பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் ஏது செய்கிறார்கள் என்பது அவருக்குத் தெரியாது. அவரவர் அறைக்கதவுகளை சாத்தியிருப்பார்கள் அல்லது கைத்தொலைபேசியில் மணிக்கணக்காகப் பேசிக்கொண்டிருப்பார்கள்.

இந்த எண்ணங்களோடு தன் தரிப்பிடம் வந்ததும் இருக்கையை விட்டு இறங்கியவர், இயக்கி வைத்த இயந்திரம் இயங்குவது போல சில நிமிட நேர நடைக்குப் பின்பு வீட்டுக்கதவைத் திறந்து உள்ளே சென்றவருக்கு பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

வீட்டில் உள்ள எல்லாவிளக்குகளும் எரிந்து கொண்டிருந்தன. வரவேற்பறையில் ஆடிப்பாடிக்கொண்டிருக்கும் தொலைக்காட்சி அமைதியாக ஒளியிழந்து போயிருந்தது. நாடியில் கை வைத்த வாறாய் கோபமும் சோகமும் கலந்த முகத்துடன் மெத்தையில் சாய்ந்திருந்த அவரது மனைவியைக் கண்டதும் இன்று ஏதோ அசம்பாவிதம் நடந்திருக்கிறது. என்பது அவருக்குத் தெளிவாகத் தெரிந்தது.

கதவு திறந்திருந்த படியால் மகனுடைய அறையை எட்டிப்பார்த்தார். இருகைகளையும் பின் தலைக்கு தாங்கலாக வைத்துக்கொண்டு கோபம் கொப்பளிக்க அவன் சிந்தனையில் ஆழ்ந்தவனாய் நிமிர்ந்து படுத்திருப்பது தெரிந்தது.

மீண்டும் வரவேற்பறைக்கு வந்தவர் "என்னப்பா நடந்தது?" என்று கேட்பது போல மனைவியை ஏறிட்டு நோக்கினார்.

"என்ன பாக்கிறியள். காலமை போறது இரவுக்கு வாறது இதுதானே உங்கடவேலை. கத்திக்கத்திச் சொன்னாலும் கேக்கிறிங்களே! வீடுவாசல்தான் சொந்தமா வாங்க உங்களுக்கு வக்கில்லை. வாடகைக்கு எடுத்த வீட்டையாவது நல்ல பிரெஞ்சுக்காரசனங்கள் இருக்கிற இடமாப் பாத்து எடுத்தியளா? நாலு நாட்டாலயும் வந்திருக்கிற சனங்கள் சீவிக்கிற இடங்களில இருந்தால் இப்பிடித்தானே நடக்கும்.."

"அதுகளை விட்டுட்டு என்ன நடந்தது எண்டு விசயத்தைச் சொல்லப்பா?"

"உங்கட செல்ல மகளைப் போய் பாருங்கோ பள்ளிக்கூடத்தில நாலைஞ்சு குமரியள் சேர்ந்து அடிச்சு முகமெல்லாம் வீங்கிப் போய் வந்திருக்கிறாள்"...

ஒவ்வொருநாளும் பிள்ளைப் பாசத்தால் துடித்துக் கொண்டிருப்பவருக்கு மனைவியின் இந்த வார்த்தைகளைக் கேட்டு படபடத்துப் போனார். உடலெல்லாம் அவருக்கு உதறத் தொடங்கியது.

"ஏன் அடிச்சதுகள் என்ர பிள்ளைக்கு?" அழுகுரலில் வெளிவந்த அவர் வார்த்தைகளைக் கேட்டு அவர் பிள்ளைகள் இருவரும் அவர் அருகே ஓடிவந்தார்கள். மகளை நிமிர்ந்து பார்த்தார். கன்னங்களில் கீறல் அடையாளங்கள் அழுது கண்களும் வீங்கிப்போயிருந்தன.

ஒரு இனம் புரியாத சூழலில் தத்தளித்துகொண்டிருந்தார் தியாகர். ஒரு அந்நீதம் இப்போ எல்லோரையும் ஒன்றுபடவைத்திருக்கிறது அவருக்குத் தெரியாமலே அவர் நெஞ்சுக்குள் ஒரு பூரிப்பு. மறுபுறம் தன் மகள் அடிபட்டு வந்து நிற்கும் வேதனை!

"ஏன் பிள்ளை இப்படி?"

அவர் கேள்வியை முடிக்கவில்லை.

"எப்ப பார்த்தாலும் என்னைக் 'கக்காவெற், கக்காவெற்' எண்டு இரண்டு ஆபிரிக்க பிள்ளையும், ஒரு துருக்கிப் பிள்ளை இரண்டு அல்ஜரிபிள்ளையும் பகிடிதான் செய்வினம்."

தமிழை அதிகம் உச்சரிக்காத நாக்கு திக்கி திக்கி வர அவருக்கு தித்திப்பாகவும் இருந்தது.

"இவள் நல்லாப் படிக்கிறாள் அதுதான் அவள்களுக்குப் பிடிக்கேல்ல" மகன்குறுக்கிட்டான்.

"நான் காக்காவெற் இல்லை" எண்டு கோபத்தில ஒருத்தியைத் தள்ளிவிட்டன். அவள் விழுந்திட்டாள் அதுக்குப் பிறகுதான் "அப்ப, ஆர் நீ, நீ கக்காவெற், உன்ர அப்பா கக்காவெற்" எண்டு சொல்லி சொல்லி எல்லாரும் சேர்ந்து அடிச்சினம்".

தியாகருக்கு தான் வரும்போது உரக்கப் பேசிச் சிரித்த பாகிஸ்தானியரும், குஜராத்தியரும் நினைவுக்கு வந்தார்கள். பாவம் அவர்களும் என்ன செய்வது எங்களைப்போலவே உயிரைக் காக்கவோ பிழைக்கவோ இந்த நாட்டிற்கு வந்தவர்கள். ஒழுங்கான வேலை வதிவிட உரிமை கிடைக்காதாதல், ஊரிலே தங்கள் கைகளை எதிர்பார்த்திருக்கும் தங்கள் குடும்பத்திற்காக இந்த நாட்டின் தொழில் விதிமுறைகளுக்கு மாறாக சில தெரு வியாபாரங்களை செய்கிறார்கள்.

பாரிசில் உள்ள மின்தொடர் உந்து நிலையங்களில் மறைவாக நின்று கொண்டு கச்சான்(கக்காவெற்) விற்பதும்,சிறுவர் விளையாட்டுப் பொருட்களை விற்பதையும் தம் பிழைப்பாகக் கொண்டிருக்கிறார்கள். தொடர் உந்து நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் நகரக் காவலர்களைக் கண்டதும் ஓடி மறைவது பாப்பவர்களுக்கு கேலியாகவும் சிரிப்பாகவும் இருக்கும்.

இன்னும் சில முரட்டுச் சுபாவமுள்ள இளைஞர்கள் இவர்களிடம் பணம் செலுத்தாமலே கக்காவெற் பக்கற்றுகளை எடுத்துக் கொண்டு ஓடுவதை சிலர் நின்று வேடிக்கை பார்ப்பதுண்டு.

இவற்றையெல்லாம் மனதில் கொண்டுதான் இன வேறுபாடு தெரியாமல் தமிழர்களைக் கண்டாலும் சில குளப்படித்தனமான சிறுவர்கள் சிறுமிகள் இளைஞர்கள் "கக்காவெற்" என்று கேலியும் கிண்டலும் செய்வது தியாகருக்கும் தெரிந்ததுதான். ஆயினும் மகள் தாக்கப்பட்டதை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"அப்ப நீ சொல்லாதயன்பிள்ளை நாங்கள் கக்காவெற்(கச்சான்) விக்கிற ஆக்களில்லை எண்டு. நாங்கள் ஈழத்தமிழர். எங்கட தமிழ் ஈழம், லண்டன்காரன் பாத்த மோட்டு வேலையால சிங்களவன் எங்கட நாட்டையும் ஆக்கிரமிச்சு போட்டான். எங்கட நாட்டை திருப்பி எடுத்து அதில நாங்கள் சுதந்திரமாக வாழ, ஒரு தலைமையில ஒரு கொள்கையில ஒரு கொடியில நிண்டு போராடுறம் எண்டு சொல்லாதையன் பிள்ளை?"....

தியாகர் அவரையறியாமலே உணர்ச்சி வசப்பட்டுப்போனார். அவரின் ஆத்திரத்தையும் வேதனையும் கண்டு வீடே அதிர்ச்சியில் அமைதியடைந்தது. எல்லோரும் தூங்கிப் போய்விட்டார்கள்.

"நாங்கள் நிம்மதியா நித்திரை கொள்ளுற நாள் எங்களுக்கு எப்ப வரும்" என்ற கேள்வியோடு படுக்கையில் தூக்கமின்றி துவண்டு கொண்டிருந்தார். ■



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒளிப்படம்: அமரதாஸ்

# வழித்தடங்களில்

மாரி.மகேந்திரன்

நீண்ட புதைகுழியின்
மரணங்கள் பற்றிய
குறிப்புகளை தயார் செய்தபடி
கழியும் வாழ்நாட்கள்

கணிப்பொறிகள்
அறைகளின்
வெட்கை கனலின்
பேச்சுத்துணையற்ற
முடியும் கவிதையின் மொழி
குழந்தைகள் வருகிறார்கள்
போகிறார்கள்
அர்த்தங்களோடு புரிந்து
கொள்ள முடியாமல் தவிக்கும் மனசு

ஓவியங்களின் நிழல்
பிம்பங்களின் கானல்
பொழுதில்
வெளியே அடிக்கும்
வெய்யிலின் தணல்!

இருப்புக்களின்
மீதெழும் அவநம்பிக்கையுடன்
மிகுதி வாழ்வை
நம்பிக்கையற்று
வறண்ட வழித்தடங்களில் நான்!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாழ்க்கை என்பது

பொன் காந்தன்



கனவிலிருந்து திடீரென விழித்த போடியார் மணிக்கூட்டின் பெரியமுள் பத்து என்ற இலக்கத்திலும் சிறியமுள் நான்கை நன்றாகக் கடந்து, ஐந்து என்ற இலக்கத்தினை அண்டியும் நிற்கக்கண்டு மளமளவென்று படுக்கையைச் சுருட்டிக்கொண்டு எழுந்துவிட்டார். வயது ஐம்பத்தி ஐந்தைத் தாண்டியும் ஓரளவு கட்டுக்குலையாத தேகம் அவர் தனது கடைசிக்காலத்தை எல்லோரைப் போலவும் கோவில்களிற் கழிக்க விரும்பாதவர், எமது தேச விடுதலையின் அத்திவாரங்களான மாவீரச் செல்வங்களின் துயிலும் இல்லத்திற் தனது மிகுதி வாழ் நாட்களையும் கழிப்பதே தனது கடமை எனக்கொண்டனர். தனது வயதை ஒரு பொருட்டாகக் கொள்ளாமற் தன்னால் முடியுமட்டும் உடலைவருத்தித்தான் கொண்ட தொழிலில் திருப்தி காணும் மனப்பான்மை கொண்டு அதற்குச் செயல்வடிவம் கொடுப்பவர்.

தேநீருக்காக அடுப்பை மூட்டித் தண்ணீரைச் சுடவைத்தவர் காலைக்கடன்களை முடித்துவிட்டு வரவும் தண்ணீர் சுட்டுவிடவும் சரியாக இருந்தது. தேநீர் ஊற்றிக்குடித்து போடியார் விளக்குமாறும் வாளியுமாகக் கொட்டிலை விட்டு வெளிப்பட்டார். அவர் தனது பிள்ளைகளைப் போல் பார்த்துவரும் குரோட்டன்களையும், பூச்செடிகளையும் பார்த்தபடியே சென்றார். அண்மையிலேயேதான் "ஒவ்வொரு மாவீரனுக்கும் நீ ஒவ்வொரு சிவப்பு ரோசாப் பூத் தரவேணும்" என்று கூறிக்கொண்டே அந்தச் சிவப்பு ரோசாத் தடியை ஊன்றினார். அதற்கு அருகில் ஒரு சில நிமிடங்களில் நின்று அந்த ரோசாச் செடியில் ஏதேனும் மொட்டுக்கள் அரும்பி இருக்கின்றனவா என ஒவ்வொரு கிளையாக ஆராய்ந்தவர். ஏமாற்றமே விளைவாகக் கோபம் அடைந்தவர்போல் ரோசாச் செடிக்குச் சின்னதாக ஒரு வெருட்டல் விட்டார். "உனக்கு இனிப்பார் நான் தண்ணி ஊத்தமாட்டன். இப்படியே கிடந்து செத்துப்போடுவாய். கெதியா எனக்குப் பூக்களைத்தா, நான் என்ர பிள்ளையளுக்குக் குடுக்கோணும், கிழவனுக்கு என்னோட பகடி எண்டு மாத்திரம் நினைச்சுப்போடாத, செயலுக்கு முன்னுரிமை குடுக்கிறவன் இந்தப் போடியார்" என்றவர் கிணற்றை நோக்கி விரைந்தார்.

வாளியைக் கிணற்றடியில் வைத்துவிட்டு அவருடன் உதவிக்காக நின்ற இருவரையும், பூச்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றச் சொல்லிவிட்டு, தான் கூட்டத் தொடங்கினார். கூட்டிக்கொண்டு இருந்தவர். "டேய் தம்பியவை கெதியாத் தண்ணியை ஊத்திமுடியுங்கோ. இண்டைக்கு கனக்க வேலை கிடக்கு அதுக்காக கொஞ்சக் கொஞ்ச தண்ணியாக் காட்டிறேல்ல" என்றவாறு தனது வேலையில் மூழ்கினார்.

கூட்டிமுடித்தவாறு போடியார் "தம்பியவை நானும் வாறன்ரா" என்றவாறு பூக்கண்டுகளுக்குத் தண்ணீர் ஊற்றத் தொடங்கினார். போடியாரின் தண்ணீருடன் வியர்வையையும் பெற்றுக்கொண்டிருந்த பூமரங்கள் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு ஒரு புனிதம் நிறைந்த பூங்காபோன்ற தோற்றம் கொடுத்து மகிழ்ந்தன. "தம்பியவ சாப்பிட வாங்கோடா சாப்பிட்டுட்டு இனி மற்ற வேலையளைச் செய்வம்" என்றவாறு.

சாப்பிட்டுவிட்டு மண்வெட்டியும் கூடையுமாக வந்தவர்களின் விதைகுழிகளை வெட்டத் தொடங்கினார்கள். வெட்டிக்கொண்டிருந்தவர்களின் உடலில் இருந்து சொட்டுச் சொட்டாக



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வியர்வைத்துளிகள் மண்ணை அடைந்த வண்ணம் இருந்தன, திடீரென சூடான நீர்த்துளிகளை உணர்ந்தாள் நிலமகள். ஆம் சந்தேகமும் இல்லை சூடான நீர்த்துளிகள்தான் அவை. வெட்டிக் கொண்டிருந்த போடியாரின் கண்ணீர்த்துளிகள்தான் அவை. தன்னால் இவர்களின் கண்ணீர்த்துளிகளைத் துடைக்க முடியவில்லையே என்ற கவலையுடன் அவள் தலை கவிழ்தாள்.

போடியாரின் கைகள் மண்ணை வெட்டிக் கொண்டிருந்தன. கண்கள் கண்ணீர்த்துளிகளைச் சொட்டிக்கொண்டிருந்தன. மனமோ தனக்குள் போராடிக்கொண்டிருந்தது. எனது கைகளாலேயே எத்தனை பிள்ளைகளுக்கு விதைகுழி தோண்டி இருக்கிறன். இளமையையே அனுபவிக்காத பிள்ளையள்... எத்தினை தாய்மார் தங்கடை சாப்பாட்டை ஒதுக்கி பிள்ளையளுக்கு ஒருநேரச் சாப்பாட்டைக்குடுத்து வளத்தெடுத்தவ... தமிழ்ப்பிள்ளை எண்டதால இப்படி வாழவேண்டிக்கிடக்கு. ம்...... அவர்களிலேதான் எங்கட தமிழினமே தன்னை நிலைநிறுத்தித் தலைநிமிந்து கொண்டிருக்கிறது. என்றது போடியாரின் இரண்டாம் மனம். வெட்டிக்கொண்டே இருந்தவர்கள்..... அண்ணை ஆழம் காணுமண்ணை என்ற குரல் மீண்டும் சுயநினைவுக்குக் கொண்டுவந்தது.

மாலை வேளைகளில் மீளாத்துயிலில் இருக்கும் பிள்ளைகளுடன் கதைப்பதையும் அவர்களின் கடந்தகாலம் அப்படி இருந்திருக்கும்.... சீச்சீ இப்படித்தான் இருந்திருக்கும் என்றவாறு துயிலும் இல்லத்தையே ஒரு சுற்றுச் சுற்றிவந்துவிடும் வழக்கமுடையவர் போடியார்.

அன்றும் அப்படித்தான். மாலைநேரம் துயிலும் இல்லப் பகுதி ஒரு புனித பூமியாகக் காட்சிகொடுத்தது. போடியார் ஒவ்வொரு மாவீரனின் விபரங்களையும் நன்றாகப் பார்த்துப் பார்த்து வந்தார். அப்போது அவர் பார்த்த மாவீரன் “இஞ்ச இருந்தா மற்ற அம்மாக்கள் தங்களின்ர பிள்ளையளிட்ட வாறமாதிரி என்னட்டை வருவினம்தானே, நான் வீரச்சாவு அடையேக்கயே அம்மாக்கள் ஒருத்தரும் வரேல்ல. பிறந்தநாளுக்கு எப்படி வருவினம். எப்ப ஐயா என்னோட வந்து கதைக்கப் போயினம்” என்று கல்லறைக்குள்ளிருந்து ஓர் ஆதங்கக் குரல் எழுந்துகொண்டிருப்பதைபோல் போடியார் உணர்ந்தார். அவர் கண்கள் குளமாகின. “தம்பி நான் இருக்கிறன்ரா உன்ர அப்பா உன்னோடையும் ஒவ்வொரு நாளும் வந்து கதைக்கிறனான்தானே. இவயள் எல்லாரும் என்ர பிள்ளையள்தானே. எனக்கு எத்தினை பிள்ளையள் பாத்தியா? நானும் உன்ர சகோதரங்களும் உன்னோடதானடா இருக்கிறம். என் தெய்வங்களுக்குப் பணிவிடை செய்யிறதுக்கு நான் குடுத்து வைச்சனான்ரா” எனக்கூறிக்கொண்டே அந்த மாவீரனின் கல்லறைக்கு நிறைய மலர்களைக்கொண்டு வந்து தூவி மனம் நெகிழ்ந்தார்.

கண்களை இமைகள் காப்பதுபோலத்தான் காத்துவரும் பூச்செடிகளுக்கும் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்த போடியாரின் உள்ளத்தை என்னவென்று சொல்லமுடியாத ஓர் உணர்வு, ஆட்கொண்டிருந்தது. றோசாச்செடிக்கு நீரை ஊற்றும்போது அருகிருந்த பூச்செடிக்குள் ஓர் அழகான பெரிய சிவப்பு றோசாப்பூ பூத்திருப்பதைக் கண்டுவிட்டார். “எனக்கு இந்தளவு நாளும் ஒழிச்சு இருந்தனீ” என்று கூறியபடி பூவைப்பிடித்துத் தடவிக் கொடுத்தார்.......

கடந்த கால நினைவுகளில்......

வீட்டின்முன் வந்து நின்ற ஜீப்பில் இருந்து இறங்கிய இராணுவத்தினர் வைத்தகை எடுக்க வந்தவர்கள்போல வீட்டிற்குள் புகுந்து தேடத் தொடங்கினார்கள். போடியார் அவரது ஒரே மகனான நிமல், மனைவி திலகம் காலைச் சாப்பாட்டுடன் இருந்தனர். பயந்துபோன இவர்கள் சுவரோரமாய் ஒட்டிக்கொண்டு நின்றனர். பெட்டிக்குள் பூட்டி வைத்திருந்த நகைகளையும் பணத்தையும் பெட்டியுடனே ஜீப்பில் ஏற்றினார்கள். மற்றையவன் போடியாரை ஏதோ சிங்களத்தில் கேட்டுப் புரட்டி எடுத்தான். திலகம் இதைத்தடுத்து “ஐயோ அவரை அடிக்காதையுங்கோ” என்று அழவே மற்றொருவன் திலகத்தின் தலைமயிரைப் பிடித்துச் சுவருடன் அடித்தான். திலகத்தின் தலையில் இருந்து ஓடிய இரத்தம் சுவரில் கொழுவியிருந்த படத்தை முழுவதுமாக நனைத்தது. இவற்றைக்கண்டு கதறியபடி நின்ற நிமல் அவன் கையில் அகப்பட்ட போத்தலால் தாயை அடித்தவன் மீது எறிந்தான். அவன் மண்டையால் இரத்தம் வழிந்தபடி விழவே பின் கதவால் நிமல் ஓடினான். மற்றைய ஆமிக்காரர் அவ்வழிநோக்கிச் சுட்டனர். இவற்றையெல்லாம அரைகுறை மயக்கத்துடன் பார்த்திருந்த போடியார் முழுமையாகவே மயங்கிவிட்டார்.

வீரக்குழந்தைகளே.... எங்கள்... என்ற பாடல் கேட்டு கண்களைத் துடைக்க போடியார் றோசாப்பூவிலும் கண்ணீர்த்துளிகள் இருப்பதைக் கண்டார். மெல்ல அதை ஒற்றி எடுத்தார். பின்தான் செய்யவேண்டிய காரியங்களில் இறங்கினார்.

மலர் தூவ வாருங்கள்.... என்ற பாடல் ஒலிபெருக்கியில் அழைக்கவே போடியார் றோசாப் பூவைப் பிடுங்கிக்கொண்டு வித்துடல் இருந்த இடத்தை நோக்கி விரைந்தார். வித்துடல் வைக்கப்பட்டிருந்த பேளைக்கு அருகில் சென்று மாவீரனின் முகத்தை ஒருமுறை பார்த்தார் அப்படியே பார்த்தபடியே நின்றார்.

“என்ன அப்பிடிப் பாக்கிறாய், அது உன் பிள்ளைதான், ஏன் சந்தேகம். இவன் உன்ர ஒரே ஒரு செல்வமான நிமல்தான். நன்றாகப்பார். அவன் இடது நாடியில் இரு சிறிய மச்சங்கள்”

என அவரின் உள்மனம் சொன்னது. கண்கள் மாவீரனின் விபரம் இருந்த இடத்தை மொய்த்தன.

கப்டன் ஸ்ரீதரன் கந்தப்போடியார் நிமல்ராஜ் கதிரவெளி மட்டக்களப்பு என இருந்தது.

“தம்பி நிமல் ஐயோ நீ என்ர வயித்தில பாலை வாத்திட்டியடா என்ர அம்மாவ வீட்டுக்க உயிரோட எரிச்சவங்கள.. எங்கள இந்த நிலைக்கெல்லாம் காரணமானவங்கள... எங்கட இளஞ்செல்வங்களக் கொண்டவங்கள... எல்லாம் கொல்லுறதுக்கு எனக்கு ஒரு பிள்ளை இல்லையெண்டுதான் நான் நினைச்சிருந்தனடா..... அப்பாவ விட்டிட்டு இவ்வளவு நாளும் எங்கயடா இருந்தனி .....நிமல்.....நிமல்..... என்ர ஆசையை நிறைவேற்றீட்டாயடா” என்று மௌனமாக அழுதார்.

ஸ்ரீதரனுடன் வந்த தோழர்கள் கண்களிலும்..... நீர் முத்துக்களுடன்..... கரங்களில் உறுதியும் தெரிந்தன.

வீரவணக்க நிகழ்வுகள் முடிந்ததும் வித்துடல் விதைகுழியில் இறக்கப்பட்டது. போடியார் வெளியில் அழாதவராய் அழுதுகொண்டு மண்ணை அள்ளி அள்ளித் தூவினார் மகனின் வித்துடல் மீது. “நிமல் உன்னை விதைக்க நான்தான்ரா கிடங்கு வெட்டினான் என்ர கையாலேயே............. உன்னை எப்பிடியும் காணுவன் எண்டு நினைச்சன் கண்டிட்டன்ரா வீரமகனா.....மாவீரனா... நீ என்ர மகன் எண்ட நிலையைக் கடந்திட்டாயடா... எங்கட இனத்தின்ர காவற் தெய்வங்களோட நீயும் சேந்திட்டாயடா..... இப்ப நீயும் எங்கட இனத்தின்ர ஒரு காவற்தெய்வம்தான்ரா” என்று உறங்கும் எரிமலையாய் நின்றுகொண்டிருந்தார் போடியார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

BIG BANG
destruction
et création
dans l'art
du 20e siècle

# கலையின் ஒரு வடிவம்

## அழித்தலும் ஆக்குதலும்

வாசுகன்





ஐரோப்பிய நாடுகளில் தற்பொழுது விளம்பரப் பலகைகளை அலங்கரித்துக் கொண்டிருக்கும், சிகப்பு வர்ணத்திலான விளம்பர மாக "Big bang" காண்பிய நிகழ்வு திகழ்கிறது. பல்வேறு கலை முயற்சிகளும், மாபெரும் விடயங்களும், செயல்களும் நடந்து வரும் இவ்வுலகில் கலையும் தன்பங்கை ஏற்பதற்கு தவறவில்லை. இவ்வகையில் (Centre Pompidou) சென்ரர் பொம்பிதுவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும். மாபெரும் கண்காட்சியையே 'பிக் பங்' என பெயரிட்டுள்ளனர்.

'பிக் பங்' மாபெரும் அழுத்தம் அல்லது 'மாபெரும் மோதல்' எனலாம். 'அழித்தலும் ஆக்குதலும்', சூரிய குடும்பக் கோள்கள் அனைத்தும் ஓரிடத்தில் வந்து மோதி மீண்டும் மிகப்பெரிய கோள் நடுவேயும் மற்றயவை வெவ்வேறு இடங்களிலும், ஒரு ஒழுங்கில் புதியதோர் படைப்பை உருவாக்குவதுபோல் 'பிக் பங்' கண்காட்சி உருவாக்கப்பட்டுள்ளது.

இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள பல படைப்புக்கள் தனி யாரின் கலைச் சொத்தாகவே (private collection) உள்ளது. அவை கள் ஒவ்வொன்றையும் வெவ்வேறு நாடுகளிலிருந்து ஒன்றுதிரட்டி, காப்புறுதி, இடவசதி, போக்குவரத்து போன்றவற்றையும் தாண்டி பிரபல்யமான படைப்பாளிகளின் படைப்புக்களை (சில படைப்பாளி கள் இன்னும் படைப்புக்களை உருவாக்கிய வண்ணமே உள்ளனர்) ஒரே நேரத்தில் காட்சிப்படுத்துவது மாபெரும் விடயமே! வியப்புக்குள்ளாக்கும் வகையில், நுழைவாயில் சீட்டை பெறு வதற்காக வரிசையில் நின்றபொழுது அதன் நீளம், அதனுள் நின்று மக்களின் மொழி, வெவ்வேறு தேசங்களிலிருந்து வருகை தந்து மக்களின் ஆர்வம், நவீன கலைக்கு முக்கியத்துவம் கொடுப்ப தையே வெளிக்காட்டுகிறது.

மண்டபத்தினுள் நுழையும் பொழுதே 'பிக் பங்' க்கு அர்த்தம் தெரிவிப்பதுபோன்று ஒரு சிறு நிகழ்வு, 'பிக் பங்' கண்காட்சி பட்டியல் (catalogue) வாசலின் இடது புறத்தில் இருந்தது, அதை எடுப்பதா? அல்லது நிலத்தில் தென்பட்ட தெளிக்கப்பட்டிருந்த சிவப்பு வர்ணத்தை புகைப்படம் பிடிப்பதா? என்று ஒரு கணம் ஊகிக்கும் பொழுதே, அதை ஒருவர் வெகு விரைவாக நானும் புகைப்படம் பிடித்தேன். அது மனித இரத்தம் என்பதை அப் பொழுது தான் அறிந்தேன். அவ்விடயம் கண்காட்சியில் உட் படுத்தப்படாத ஒன்றே!

மனிதனிலும் மூன்று மடங்கு உயரமுள்ள கண்ணைப் பறிக்கும் வர்ணத்தினாலான ஓவியத்துடனான (டானியல் றிசட்ர் - Daniel Richte 1962, Duuech 2003) பார்வையுடன் ஆரம்பித்தோம், வலது புறம் 'பிக்காசோவின்' கடற்கரையில் பெண்கள் (Pablo Picasso 1881-1973, "Femmes devant la mer" 1956 ) இடது புறம் பேகனின் அறையில் மூன்று உருவங்கள் (Francis Bacon 1909 - 1992 "Three Figures in a Room 1964) என்று வர்ணிப்பதற்கு வார்த்தைகளை வெல்கின்றன படைப்புக்கள்.

ஒரு சிற்பத்தின் அழகும் வலிமையும் படைக்கும் பொருளைக் கொண்டு அமைவது ஒரு புறம், இவ்வகையில் அடுத்தடுத்து சில மனித உருவங்களை கொண்ட சிலைகள் போட்டிக்கு நிற்கின்றன. அவைகளை அடுத்த இரண்டு அடி உயரமுள்ள உலோகத்தினா லான சிலைக்கு கறுப்புத்துணியினாலான ஆடையும் காலை நீட்டி அமர்ந்த வண்ணமும் அதன் நெற்றிக்கு முன்னால் ஒரு அடி உயரமுள்ள உலோகத்தினாலான மணியின் விளிம்பு நேராகக் கட்டித் தொங்க விடப்பட்டிருப்பதை ஒரு பெண் ரசித்துக்கொண் டிருப்பதை நான் ரசித்துக்கொண்டிருந்தேன், திடீரென அப்பெண்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிக் பங் கண்காட்சி

காலம்: 15 யூன் 2005 - 6 மார்ச் 2006

இடம்: Centre Pompidou, 75004, paris

மின்வலை: www.centrepompidou.fr













திடுக்கிட்டு போவதையும் பின் அப்பெண் சிரிப்பதையும்...., ஒவ்வொரு பத்து நிமிடத்திற்கு ஒரு முறை அந்த இரும்புச்சிலை மனிதன் தனது மண்டையால் மணியை அடிக்கும் வண்ணம் அச்சிலை ஆக்கப்பட்டிருந்தது. அதன் நெற்றியில் ஒரு சிறு பள்ளத்தையும் காணலாம். அங்குள்ள படைப்புகளில் அது ஒன்று மட்டுமே மாறுபடும் படைப்பாக நான் கருதுகிறேன்.

"Big Bang" பிக் பங் பட்டியல் நூலை 1918 இல் உருவாகிய 'டாடாயிசர்' பாணியில் அமைந்துள்ளது. 'டாடாயிச' கலைஞர்களின் முக்கிய நோக்கமாக முன்நோக்கி நகர்வதற்கு முன் அதாவது ஒன்றை உருவாக்குவதற்கு முன் அங்கு இருப்பவற்றை அழித்தபின்னரே புதிய பாணியில் ஆக்குகின்றனர். அதாவது பழைய உலகை அழித்து புதிய உலகை உருவாக்குதல். மனித சக்தியை திசை திருப்புதல்.

(centre pompidou )ன் அதிபரான 'புறுணோ றாசின்' (Bruno Racine) கூறுகையில் இந்த நூற்றாண்டின் நவீன கலையை வெளிக்காட்டுதலின் நோக்கமே பிக் பங். இது முதன்முறையாக மிகப் பிரமாண்டமாக சேர்க்கப்பட்டு, ஒழுங்கு செய்யப்பட்ட கண்காட்சியாகும். சகல விதமான கலைகளையும் ஒன்று சேர்த்தல். இங்கு காட்சிக்குட்படுத்தப்பட்டவை 20ம் நூற்றாண்டில் சேகரிக்கப்பட்ட ஓவியம், சிற்பம், புகைப்படம், சினிமா, காணொளிப்படம், கட்டடக் கலை, அலங்காரவேலை, எழுத்துக்கள் என்பனவாகும். அதிபரின் முக்கிய நோக்கமாக அங்குள்ள கலைப்படைப்புக்களை நிச்சயம் உள்வாங்கி அல்லது விளங்கிக் கொள்ளவேண்டும் ஏனெனில் 20 ம் நூற்றாண்டுகளுக்கு முன் நடைபெற்ற கலைப்படைப்புக்களை அப்போதே அறியவோ விளங்கிக்கொள்ளவோ முடியும்.

'க்யூபிச'பாணியை பல படைப்பாளிகள் பின்பற்றி உள்ளனர் அதனை பின்னர் 'டாடாயிசர்' சற்று சுழற்சிப்படுத்தியும், மாற்றியும் அமைத்தனர். தற்பொழுது ஒரு வடிவங்களும் இல்லாமல் படைப்புக்கள் ஆக்கப்பட்டு வருகின்றன.

"Big Bang" கண்காட்சியில் முக்கிய எட்டு தலையங்களுடன் பிரிக்கப்பட்டிருந்தன அதனுள்ளும் பல உபதலைப்புக்களாக பல படைப்புக்கள் பிரிக்கப்பட்டு ஒழுங்குசெய்யப்பட்டிருக்கின்றன.

தலைப்புக்களாவன:

1. Destruction: அழிவு, அழிவுக்குக் காரணமான
2. Construction: நிர்மாணித்தல், கட்டுதல், நிர்மாணித்து அழித்தல்
3. Archaism: பண்டைய
4. Sex: பால் (இனம்)
5. War: யுத்தம்
6. Subversion: அழிக்கத்தக்க (ஒரு பொருளில் இருந்து இன்னொன்றை உருவாக்குதல்)
7. Melancholy: வருத்தம் (விசனம்,சோகமான)
8. Re enchantment: மந்திரத்தால் கட்டுதல் (வசீகரிக்கும் சக்தியை மீள் உருவாக்குல்)

சில படைப்புக்கள் அழிக்கப்பட்ட போதிலும் அழிவுகளில் எஞ்சியது மீள் உருவாக்கப்படுகிறது. ஆகவே பழையவை மூலமே புதியவையும் ஆக்கப்படுகின்றனவோ! கண்காட்சியில் இருந்த படைப்புகள், பூமியை ஒரே நாளில் வலம் வருவதோடு, ஒன்பது கிரகங்களையும் சுற்றி வருவதுபோன்ற உணர்வைத்தந்து நம்மை வேறெங்கோ கொண்டு செல்கின்றது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மக்கள் ஆணைக்கு உலகம் செவிசாய்க்குமா?

## பலஸ்தீன தேர்தலில் ஹமாஸின் வெற்றி

உலகின் மனச்சாட்சியில் மிக நீண்ட காலமாக முள்ளாய் உறுத்திக்கொண்டிருப்பதும் பல தசாப்தங்களாக நடைபெற்றுக் கொண்டிருப்பதுமான பலஸ்தீன மக்களின் உரிமைகளுக்கான விடுதலைப்போர் அரங்கில் தற்போது விரிந்திருக்கும் காட்சி விடுதலைகோரி போரிடும் இனங்களினதும் சமாதானத்துக்காக பாடுபடும் ஆர்வலர்களினதும் அமெரிக்க ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களதும் ஒருமித்த கவனத்தை பெற்றுள்ளது. நடைபெற்று முடிந்த பலஸ்தீன பாராளுமன்ற தேர்தலில் ஹமாஸ் தீவிரவாத அமைப்பு அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றிருக்கிறது. ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துகொள்ள ஹமாஸ் எடுத்த முடிவு அது எதிர்பார்த்திராத விளைவுகளைக் கொண்டு வந்துள்ளது. நீரோட்டத்தின் ஆழம் பார்க்க காலை மட்டுமே நனைக்க நினைத்தவர்களை நீருக்குள் தலைகுப்புற பாய வைத்துவிட்டது இந்தத் தேர்தல்.

இந்தத் தேர்தல் வெற்றி ஹமாஸ் சற்றும் எதிர்பாராதது. சுமாரான பலத்துடன் ஆசனங்களைப் பெற்று ஆளும் (க)பற்றா கட்சிக்கு கடிவாளம் இட யோசித்த அவர்களை பலஸ்தீன மக்கள் ஹமாஸ் சற்றும் எதிர்பார்த்திராத உயரத்துக்கு கொண்டு சென்று வைத்து விட்டார்கள். இந்த தர்ம சங்கட நிலையால் ஹமாஸ் தனது அதிதீவிரவாத கொள்கைகளை மூட்டை கட்டி வைத்துவிட்டு மக்களின் ஆணைக்கு செவிசாய்த்து பொறுப்புணர்ச்சியோடு செயற்பட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. ஹமாஸின் தேர்தல் வெற்றி குறித்துப் பலஸ்தீன மக்களிடையே உலாவரும் நகைச்சுவை ஒன்று அம்மக்களின் உணர்வலைகளைத் தெளிவுபடுத்துகிறது. 'மேற்குக்கரை மற்றும் காஸாப் பிரதேச காவல் நிலையங்களை உடனடியாக மூடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எந்த முறைப்பாடுகளும் இனிமேல் நேரடியாகக் கடவுளிடமே செய்யப்படவேண்டும்' எனவே பலஸ்தீன மக்களின் விருப்பிற்கு மாறாக ஈரானின் முல்லாக்கள் வழியிலோ ஆப்கானிஸ்தானின் தலிபான்கள் Toppan வழியிலோ ஹமாஸ் நடக்கமுயற்சிக்குமாயின் அது மாபெரும் வரலாற்றுத் தவறாக இருக்கும்.

10 வருடங்களுக்கு மேலாக சமாதான முயற்சிகளில் இம்மியளவும் நகர முடியாது போன கையாலாகாத் தனத்துக்காகவும் ஊழல்களிலே ஊறித் திளைத்த ஆட்சியை நடாத்தியதற்காகவும் காலம் சென்ற பலஸ்தீன தலைவர் யாஸீர் அரபாத்தால் நிறுவப்பட்ட (க)பற்றா கட்சிக்கு தேர்தலில் பலத்த அடி கொடுக்கப்பட்டுள்ளது. பல ஆய்வாளர்களின் கருத்துப்படி இந்தத் தேர்தல் முடிவுகளை தீர்மானித்த குறிப்பிடத்தக்க காரணி ஹமாஸின் மீது மக்களின் நம்பிக்கை அதிகரித்தமை அல்ல மாறாக (க)பற்றா கட்சி மீதான அவநம்பிக்கை, அதன் ஊழல் நிறைந்த ஆட்சியின் மீது ஏற்பட்ட வெறுப்பிற்கு வடிகால் தேடப்பட்டமை என்பதே. எனினும் ஒட்டு மொத்தமாக ஹமாஸிற்கு வாக்காளர் ஆதரவு இல்லை என மறுத்துவிட முடியாது. பலஸ்தீன மக்களின் துயர்துடைப்பு மற்றும் புனர்வாழ்வுப் பணிகளில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு வலைப்பின்னல் ஊடாகப் பணியாற்றியதில் ஹமாஸ் மக்களிடம் நிறையவே வரவேற்பை பெற்றுள்ளது. அதேசமயம் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிராக இடையீடின்றி போராடி வருவதனாலும் மக்களிடையே இதன் செல்வாக்கு குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது.

இந்த தேர்தல் முடிவால் இஸ்ரேல் மற்றும் ஐரோப்பிய அமெரிக்க தலைமைகள் அதிர்ச்சியுற்றுள்ளன. தெரிந்தோ தெரியாமலோ மிதவாத (க)பற்றா கட்சியின் தோல்விக்கு இந்நாடுகள் துணைபோயுள்ளன. இஸ்ரேல் நினைத்திருந்தால் (க)பற்றா கட்சி தேர்தலில் வெற்றி பெற உதவியிருக்க முடியும். எனினும் வேண்டும் என்றே அதைத் தவிர்த்தது. இஸ்ரேல் பலஸ்தீன மக்களுக்கு விதிக்கப்பட்ட சில தடைகளை தளர்த்துவதன் மூலம் அதல பாதாளத்திற்கு சரிந்து போயிருக்கும் பலஸ்தீன மக்களின் பொருளாதாரத்தை நிமிர்த்த உதவியிருக்க முடியும். தீவிரவாத ஹமாஸ் போன்ற அமைப்புகளை அடக்குமாறு பலஸ்தீன தலைவர் அப்பாஸிற்கு அழுத்தம் கொடுத்த அதேவேளை இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா, பலஸ்தீன காவற்துறையை பலப்படுத்த அப்பாஸிற்கு உதவி அளிக்காதது பலஸ்தீன சமாதானம் தேக்க நிலையுற்றதற்கு பிரதான காரணம் என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி காட்டர் கூறியுள்ளார். இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் செரோன் பலஸ்தீன ஆணைக் குழுவை முடக்குவதன் மூலம் இஸ்ரேல் ஒரு தலைப்பட்சமாக நகர்வதை உறுதிப்படுத்தும் கொள்கையை கொண்டு செயற்பட்டார். அதாவது சமாதானம் தமக்குச் சாதகமான வழியில் நகர்வதை உறுதிப்படுத்துவதே இஸ்ரேலின் நோக்கமாக இருந்தது.

இப்போது ஹமாஸின் வெற்றியால் அமெரிக்க, ஐரோப்பிய தலைமைகள் குண்டூசி முனையில் நடனமாடும் கதிக்கு ஆளாகியுள்ளன. ஹமாஸின் வெற்றி குறித்து அமெரிக்கப் பத்திரிகையொன்று வெளியிட்ட கேலிச்சித்திரத்தில் பாடசாலை மாணவனாக வரும் அமெரிக்க அதிபர் புஷ் செய்யும் ரசாயனப் பரிசோதனை அவரது முகத்திலே வெடிப்பதாகச் சித்தரித்திருக்கிறது. மத்தியகிழக்கு நாடுகளில் ஜனநாயகத்தை ஊக்குவித்த அமெரிக்க, ஐரோப்பியத் தலைமைகள் சற்றும் எதிர்பாராத தெரிவெனினும் ஹமாஸினுடனான தொடர்புகளை அடியோடு நிராகரிப்பது பல பின் விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். 'வாக்காளர்களின் விருப்பத்தேர்வை நாம் ஏற்றுக்கொள்கின்றோம் ஆனால் வாக்காளர்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களுடன் நாம் தொடர்பு கொள்ளமாட்டோம்' என்கின்ற மேற்குலகின் நிலைப்பாடு மீளாய்வு செய்யப்பட வேணடும் இல்லையேல் மேற்குலகின் மீதான பலஸ்தீன, மற்றும் அரபு மக்களின் வெறுப்பு ஹமாஸின் செல்வாக்கை மேலும் உயர்த்திவிடும். ஹமாஸ் இஸ்ரேலை அடியோடு அழித்துவிடுகின்ற அர்ப்பணிப் போடு





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செயற்படுகின்ற ஓர் தீவிரவாத அமைப்பு என்பதை மறுப்பதற்கு இல்லை. அப்படி பார்த்தால் பலஸ்தீன விடுதலை அமைப்பும் ஒரு காலத்தில் தீவிரவாத அமைப்பாய் இருந்ததுதான். அயர்லாந்து விடுதலை இராணுவம் (IRA), ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC) என மேற்குலகால் தீவிரவாத அமைப்புக்கள் என பிரகடனப்படுத்தப்பட்டு பின்பு பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவரப்பட்ட பல அமைப்புக்களின் உதாரணங்களை உலக வரலாற்றில் காட்ட முடியும். இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் மினாட்செம் பெகின் கூட ஒரு காலத்தில் இஸ்ரேலை நிறுவுவதற்கான போராட்டத்தில் மேற்கொண்ட பல தீவிரவாத நடவடிக்கைகளுக்காக பிரித்தானியாவின் தேடப்படும் தீவிரவாதிகள் பட்டியலில் இடம்பெற்றவர் தான்.

மேற்கு நாடுகளின் அவசரமான தீவிரவாத முத்திரை குத்தல்களால் நேர்ந்த அவலங்களுக்கு அல்ஜிரிய உதாரணம் ஒன்றை இங்கு காட்ட முடியும். 1991 அல்ஜீரிய பாராளுமன்ற தேர்தலில் தீவிரவாத அமைப்பான அல்ஜிரிய இஸ்லாமிய மீட்பு முன்னணி முதலாவது சுற்றில் அமோக வெற்றியீட்டியது. இந்த வெற்றி மேற்குலகை அதிர்ச்சியடைய வைத்தது. முக்கியமான இரண்டாவது சுற்றுத் தேர்தல்களில் இவ்வமைப்பு வெற்றி பெற முன்பதாக மேற்குலகின் ஆசியுடன் அல்ஜீரிய ராணுவம் நுழைந்து தேர்தல்களை ரத்துச் செய்தது. விளைவு, பல வருடங்களாக நடைபெற்றுவரும் உள்நாட்டு யுத்தம், பல்லாயிரக் கணக்கான மக்களின் படுகொலை, என்பன மட்டுமல்ல புதிய தீவிரவாத அலை உருவாக்கியிருக்கும் இளைய தலைமை இஸ்லாமியத் தீவிரவாதமும்தான். அல்ஜீரியாவில் இஸ்லாமியத் தீவிரவாதத்தை முடக்கும் அமெரிக்க ஐரோப்பியநாடுகளின் முயற்சி அதற்கு எதிர்மாறான விளைவுகளையே தந்திருக்கிறது. ஹமாஸை ஓரங் கட்டுவதன் மூலம் இந்தக் கசப்பான வரலாறு மீள அரங்கேறுவது சாத்தியமே.

'ஜனநாயகம் என்ற சுலோகத்தை உயர்த்திப் பிடித்த உலகம் இப்போது அந்த ஜனநாயகம் பெற்றுத் தந்த பெறுபேறுகளை மதிக்கவேண்டும். ஜனநாயகத்தைப் பின்பற்றிய தற்காக பலஸ்தீன மக்களை நீங்கள் தண்டிக்கவிரும்பினால் ஜோர்ஜ் புஸ்ஷை ஜனாதிபதியாகத் தெரிவு செய்த அமெரிக்க மக்களை அமெரிக்க நிர்வாகம் தண்டிக்க வேண்டும்.' இந்தக் கூற்று ஹமாஸ் இயக்கத் தலைவர்களுள் ஒருவரான காலித் மஷாலுடையது. ஜனநாயகரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைப் புறக்கணிப்பதும் நிதியுதவிகளைத் தடுத்துவைப்பதும் 'மேற்குநாடுகள், தேர்தல்முடிவுகள் தமக்குச் சாதகமாக இருக்கும்வரை மட்டுமே ஜனநாயகத்தை (ஏனைய நாடுகளில்) விரும்பும்' என்ற அரபுலகப் பார்வையை மேலும்மேலும் கெட்டிப்படுத்தவே உதவும்.



# கேலிச்சித்திரங்கள் மூட்டிவிட்ட போர்

ஒரு நாட்டின் ஜனநாயகப்பண்புகளையும் மனிதவிழுமியங்களையும் இன, மத நல்லிணக்கத்தையும் பேணிக்காக்கும் பொறுப்பு மிக்க பணி பத்திரிகைகளின் கைகளிற் தங்கியிருக்கின்ற உண்மை கடந்த சில நாட்களில் மீண்டும் ஒருமுறை நிருபணமாகியிருக்கிறது. டென்மார்க்கின் ஜிலன்ட் போஸ்ற்றன் என்கிற தினசரி இஸ்லாத்தின் தூதுவரான முகமது நபிகளைச் சித்தரித்து வெளியிட்ட கேலிச் சித்திரங்களால் கிழக்கும் மேற்கும் பிளவுபட்டு எரிகின்றன. சர்ச்சைக்குள்ளான கேலிச்சித்திரங்களை நான்கு மாதங்களுக்கு முன் பிரசுரித்த ஜிலன்ட் போஸ்ற்றன் பத்திரிகை டென்மார்க்கில் அதிக விற்பனையாகும் ஒரு முன்னணிப் பத்திரிகை. ஏறத்தாழ இரண்டு லட்சம் பேர் கொண்ட சிறிய ஆனால் பலமான டென்மார்க்கின் முஸ்லிம் சமூகம் ஐரோப்பாவிலேயே மிகவும் ஓரங்கட்டப்பட்டதும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நெருக்கப்படுவதுமான சமூகம் என்பதும் டென்மார்க்கின் ஆளுங்கூட்டணியில் அங்கம் வகிக்கும் பெரிய கட்சியொன்று மறைமுகமான முஸ்லிம் எதிர்ப்பையும் வெளிப்படையான குடியேறிகளுக்கெதிரான போக்கும் கொண்டது என்பதும் மோதல்கள் முளைவிட வளமான நிலத்தை வழங்கியிருக்கிறது.

இந்தக் கேலிச்சித்திரங்கள் எழ நேர்ந்ததற்கான அடிப்படை மிகவும் எளியது. கடந்த வருடம் டென்மார்க்கின் குழந்தை இலக்கியப் படைப்பாளியொருவர் இறைதூதர் நபிகளின் வாழ்க்கைவரலாற்றை விவரிக்கும் தனது நூலுக்கு ஓவியம் வரைந்துதர ஓவியர் ஒருவரைத் தேடியபோதும் யாரும் அப்பணிக்கு முன்வரவில்லை. ஓவியங்கள் உருவவழிபாட்டைத் தூண்டுதலால் இஸ்லாம் அதைத் தடை செய்திருந்தது என்பதாலும் நபிகளாரை ஓவியமாக்குவது முஸ்லிம்களின் உணர்வுகளைத் தூண்டும் செயல் என்பதாலும் யாரும் அதற்குத் துணியவில்லை. ஏற்கனவே இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கு எதிரான டென்மார்க்கின் பிரபல திரைப்பட இயக்குனர் தியோ வான் கோ இஸ்லாத்தை விமர்சித்து திரைப்படம் எடுத்ததற்காக நடுவீதியில் வைத்து இஸ்லாமிய அடிப்படைவாதியொருவனால் குத்திக் கொலை செய்யப்பட்ட நிகழ்வின் ரணம் ஆறாத நிலையில் இந்தகுழந்தை இலக்கியப் படைப்பாளியின் பிரச்சனை, ஜிலன்ட் போஸ்ரன் உட்பட பல டென்மார்க் பத்திரிகைகள் முஸ்லிம்களின் உணர்ச்சிகளைக் கிளறிவிடும் விடயங்கள் பேசப்படுவதைத் தவிர்ப்பதா அல்லது கருத்து மற்றும் பேச்சுச் சுதந்திரமா முக்கியமானது என்பதையும் டென்மார்க் தனக்குத்தானே விதித்துக் கொண்ட சுயதணிக்கையை எவ்வளவு தூரம் கொண்டு செல்லப்போகிறது என்பதையும் கேள்விக்குள்ளாக்குவதைத் தூண்டின. இந்தக் கேள்விக்கான பதிலைக் கேட்டதை விட மேலதிகமான உறுதியுடன் அவை பெற்றிருக்கின்றனர்.

இந்தக் கேலிச்சித்திரங்களில் எவையும் நகைச்சுவையையோ மதிநுட்பமான விமர்சனத்தையோ கொண்டிருக்கவில்லை. அவற்றில் ஒன்றில் பின்லேடனைப் போல தாடி வைத்தவராக சித்தரிக்கப்படும் நபிகளின் தலைப்பாகை எரியும் திரி கொண்ட வெடி குண்டாக காட்டப்பட்டது. இன்னொன்றில் சொர்க்கத்துக்கு வரிசை வரிசையாக தற்கொலைக் குண்டுதாரிகள் வருகிறார்கள் நபிகள் கூறுகிறார் 'நிறுத்துங்கள் நிறுத்துங்கள் எம்மிடம் கன்னிப் பெண்களின் கையிருப்பு தீர்ந்து விட்டது' என்று. இவை மிகத் தெளிவாக இஸ்லாம் ஒரு தீவிரவாதம் பேசுகின்ற மதம் என்பதைப் பூடகமாகக் காட்டும் உள்நோக்குக் கொண்டவை. டென்மார்க் முஸ்லிம்கள் குறிப்பிட்ட பத்திரிகை மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று நியாயபூர்வமாகக் கேட்டனர். பத்திரிகை மறுத்தது. குடியேறிகளுக்கெதிரான வாக்குகளை பாதுகாக்கும் நோக்குடன் டென்மார்க்கின் பிரதமர், இக்கேலிச்சித்திரங்கள் குறித்த தமது அதிகாரபூர்வ எதிர்ப்பைத் தெரிவிக்க விரும்பிய பல அரபுநாட்டுத் தூதுவர்களைச் சந்திப்பதற்குக் கூட மறுத்துவிட்டார். இந்தப் பிணக்கை ஒரு நிஜமான மோதலாகக் கட்டியெழுப்ப நிறைய நேரமும் முயற்சியும் தேவைப்பட்டது. ஆனால் நோர்வேயிலிருந்து வெளிவரும் மாத இதழான மகஸினெற் தனது தை 2006 இதழில் இக்கேலிச்சித்திரங்களை மீளப் பிரசுரித்து அதைத் துரிதப்படுத்த உதவிசெய்தது. சவுதி அரேபியாவும் லிபியாவும் தமது தூதுவர்களை டென்மார்க்கிலிருந்து திருப்பியழைத்தன. முஸ்லிம்கள் இணையத்தளங்களூடாகவும் செல்பேசிகளூடாகவும் செய்திகளை அனுப்பி மத்திய கிழக்கு மற்றும் தெற்காசிய முஸ்லிம்களைக் கிளர்ந்தெழச் செய்தனர். அண்மையில் மக்காவில் ஹஜ்ஜுப் பெருநாளுக்காக ஒன்றுகூடிய மில்லியன் கணக்கான முஸ்லிம்கள் இந்தச் செய்திகளால் உருவேற்றப்பட்டனர். தைமாத இறுதியளவில் டென்மார்க்கின் கொடிகள் எரிக்கப்பட்டன. டென்மார்க்கின் பொருட்கள் அரபுலகில் பகிஸ்கரிக்கப்பட்டன. இறுதியாக டென்மார்க் பிரதமரும் ஜிலன்ட் போஸ்ற்றனின் ஆசிரியரும் தங்களது செயல்களுக்காகப் பகிரங்கமாக மன்னிப்புக் கோரினர் எனினும் இப்போது காலங் கடந்துவிட்டது.

இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு டென்மார்க் வளைந்துகொடுத்ததன் மூலம் கருத்து மற்றும் பேச்சுச் சுதந்திரத்தைப் பாதுகாக்கத் தவறிவிட்டதாகக் கருதிய பிரான்ஸின் பிரான்ஸ் சுவார், ஜேர்மனியின் தி வெல்ட் ஆகிய வலதுசாரிப் பத்திரிகைகள் அக்கேலிச்சித்திரங்களை மீளப்பிரசுரித்து எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றி விசிறிவிட்டன. இது ஐரோப்பிய நாடுகளிலுள்ள இஸ்லாமிய அடிப்படைவாதக் குழுக்கள் ஆர்ப்பாட்டங்களை நிகழ்த்துவதற்கான முன்னரங்கை ஏற்படுத்திவிட்டது. லண்டனில் நிகழ்ந்த ஆர்ப்பாட்டமொன்றில் 'கடந்த ஆடி மாதம் நடந்த குண்டுவெடிப்புப் போல் மேலும் நிகழட்டும்', 'செப்டம்பர்- 11 நிகழ்விலிருந்து நீங்கள் பாடம் படிக்கவில்லையா?', 'இஸ்லாமைக் கேலி செய்பவர்களை வெட்டிச் சாயுங்கள்' என்பது போன்ற வன்முறைச் சுலோகங்கள் உயர்த்தப்பட்டன. இவ்வளவு நாளும் ஓடுபாதையில் படிப்படியாக வேகமெடுத்து ஓடிய வன்முறை தனது பறப்பை ஆரம்பித்தது. உண்மையும் வதந்திகளும் கலந்து செய்திகள் இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் பரப்பப்பட்டன. வன்முறைக் குழுக்கள் காஸாப் பகுதியிலுள்ள ஐரோப்பியப் பாராளுமன்ற அலுவலகங்களையும் ஜகார்த்தாவிலுள்ள டென்மார்க் தூதரகத்தையும் தாக்கின.

டென்மார்க்கின் வலதுசாரித் தேசியவாதிகள் இஸ்லாமியரின் புனிதநூலான குரானை எரியூட்டத் திட்டமிட்டிருப்பதாகக் கிளம்பிய வதந்தியால் உருவேறிய முஸ்லிம்கள் சிரியா, லெபனான் நாடுகளிலுள்ள டென்மார்க், நோர்வே தூதரகங்களை எரியூட்டினர். இப்போது இந்த மோதலை இரு தரப்பிலுமுள்ள முட்டாள்களும் வெறியர்களும் அடிப்படைவாதிகளும் தமது கையில் எடுத்துக் கொண்டுவிட்டனர். இந்த நெருப்பு அணைய மேலும் சில நாட்கள் ஆகலாம். ஆனால் அநேகமான பொதுமக்கள் தமது சுயப்பிரக்ஞையை இழந்துவிடவில்லை என்பது ஆறுதலளிக்கும் விடயம். 57 அரபு நாடுகளின் இஸ்லாமிய மாநாட்டமைப்பு 'அமைதியான ஜனநாயக ரீதியான எதிர்ப்பு நடவடிக்கைகளின் எல்லைகளைக் கடந்து அதீதமாக செயற்படுவது, முஸ்லிம்களின் நியாயபூர்வமான எதிர்ப்புக்குப் பலம் சேர்ப்பதற்கு மாறாக அம்முயற்சிகளுக்கு ஆபத்தானதாகவும் அழிவானதாகவும் முடியும்' என்று எச்சரித்திருக்கிறது.

அதேபோல மேற்கில், பெரும்பான்மையான பத்திரிகைகள் சர்ச்சைக்குள்ளான இக்கேலிச்சித்திரங்களைப் பிரசுரிக்கவில்லை. முஸ்லிம்களைத் தீவிரவாதத்துடன் இணைக்கும் இந்தக் கேலிச்சித்திரங்களைப் பிரசுரிக்க மறுத்தமை இப்பத்திரிகைகள் தமக்குத் தாமே விதித்துக் கொண்ட சுய தணிக்கையால் எடுத்த முடிவல்ல: மாறாக மிகமிக எளிய, மற்றவர்களின் உணர்வுகளைப் புண்படுத்த விரும்பாத, மதிக்கவிளை கின்ற பண்பினால் எடுத்த முடிவே. முகமது நபிகளை ஓவியமாக்குவது தடைசெய்யப்பட்டிருப்பது இஸ்லாத்தின் பாரம்பரியம் மேற்கு நாடுகளினதல்ல எனினும் நாம் ஒருவர் செய்வதை மற்றவர் பார்க்கமுடிகிற சுருங்கிவிட்ட உலகத்தில் வாழ்கிறோம். இதில் எங்கள் அயலவர்களின் உணர்வுகளுக்கும் அவர்களது நம்பிக்கைகளுக்கும் மதிப்பளிக்கவேண்டியது இன்றியமையாத சமூகவியல் விதி. இந்த விடயத்தில் ஜிலன்ட் போஸ்ற்றனும் கேலிச்சித்திரங்களை மீள்பிரசுரித்த ஏனைய பத்திரிகைகளும் சாதாரண பாமரனுக்கு இருக்கும் இங்கிதமும் இல்லாது பத்திரிகைகளுக்கு இருக்கவேண்டிய தொலைநோக்குப் பார்வையுமற்று நடந்து கொண்டிருக்கின்றன.

■ தா.விவேகானந்தன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யப்பானியக் கடலை ஆக்கிரமிக்கும் இராட்சத 'மெதுஸ்' (méduses)

தமிழ் மூலம்:
கௌரி தயாபரன்

கடந்த நான்கு வருடங்களாக 'சியநேயாஸ்' (cyaneas) வெகு வேகமாகப் பரவி வருகின்றது. இது 'மெதுஸ்'(méduses) வகையைச் சார்ந்தது. தொகையாக மீன்பிடிப்பவர்களிடம் இருந்தே அதிக உணவைப்பெற்று பயனடைகின்றது என்றே தோன்றுகின்றது. இருநூறு 'கிலோகிறாம்' எடையையும் இரண்டு மீற்றர் நீளக் கூந்தலையும் கொண்ட இந்த இனம் 'மெதுஸ்'(méduses) இனத்திலேயே மிகப் பெரியதல்ல. இவற்றில் சில வகை படத்தில் காட்டப்பட்டுள்ள 'மெதுஸ்' (méduses) இன் அளவை விட அதிக பருமனானது. அதன் கூந்தலின் அளவு 35 கிலோமீற்றரையும் எட்டக்கூடியது. இதன் விஷம் கிட்டத்தட்ட உடனடியாகவே மனிதனுக்கு மரணத்தைத் தர வல்லது.

ஆனால் யப்பானிய மீனவர்களுக்கு 'சியநேயாஸ்' (cyaneas) குடும்பத்தைச் சார்ந்த 'எக்கிசென்' (échizen) அல்லது 'நோர்முறா' (normura) என்று வட்டாரரீதியாக யப்பானிய மக்களால் அழைக்கப்படும் 'மெதுஸ்' (méduses) இனமே மிகப் பாரிய அளவில் துன்பத்தை விளைவித்து வருகின்றது. கடந்த இலையுதிர் காலத்தில் 'சோமோ' (saumon) மீன்களைப் பிடிக்கும் பாரிய மீன் பிடிப்பின் போது இந்த 'எக்கிசென்' (échizen) இனம் தம்மையும் வலைகளுக்குள் நுழைத்துக் கொள்வதுடன் மீன்களைச் சிலசமயம் தன்னுடைய உடல் பருமனால் மூடிக்கொள்கிறது அல்லது நசித்தோ, நச்சுப்படுத்தியோ மீன்களை நாசப் படுத்திவிடுகின்றது. இதனால் நட்டமடைந்த சில துறைமுகங்கள் பெரிய அளவில் மீன் பிடிப்பதை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

பாரிசில் உள்ள சமுத்திர ஆய்வு மையத்துடன் தொடர்புடைய 'மெதுஸ்' (méduses) ஆய்வாளர் திருமதி Jaqueline GOY இந்த 'எக்கிசென்' (échizen) இனத்தை 'சியநேயாஸ்' (cyaneas) குடும்பத்தைச் சார்ந்தது என்று வகைப்படுத்துகின்றார். உண்மையைச் சொல்லப்போனால் யப்பானியக் கடல்வாசிகள் இந்த இராட்சத 'மெதுஸ்' இனத்தை தற்பொழுது தான் காண்கிறார்கள் என்றில்லை. இது கீழைத்தேய சீனாவில் பிறந்து வளர்கிறது. பின் நீரோட்டத்தினால் வடக்கை நோக்கி அடித்துச் செல்லப்படுகின்றது. இந்தப் பாரிய அசைவின் பொழுது புதுமைகள் நின்று பிடிக்க முடியாது. இதுவரை நியாயமே. ஆனால் 2002ம், 2003ம் ஆண்டுகளுக்குப் பிறகு, 2005இல் செய்த கணக்கெடுப்பின்படி, வழுவழுப்பான இந்த உயிரினத்தின் தொகை யப்பானிய பசுபிக் சமுத்திரத்தின் பக்கம் நிரம்பி வழிந்தது.

**இவை வருடம் முழுவதும் பெருகிக் கொண்டே இருக்கின்றது.**

திடீரென ஏற்பட்டுள்ள இந்த இனப்பெருக்கத்தை எப்படி விளக்குவது? ஆய்வு கூடங்களில் இவற்றை வைத்து வளர்ப்பதற்கு இதன் பருமன் இடையூறாக உள்ள காரணத்தால் ஆராய்ச்சியாளர்களுக்கு இந்த இராட்சத இனத்தைப் பற்றி அதிகம் தெரியாது. இந்த ஊனுண்ணிகளின் பெருக்கத்துக்கு அதிக அளவில் உணவு கிடைப்பதே முக்கிய காரணம் எனத் தோன்றுகின்றது. அவதானிப்பாளர்கள் கடந்த கோடையில் சீனாவில் பெய்த மழையை முன்னிலைப் படுத்துகின்றார்கள். மழைநீர் அதிக உணவு வகையை ஆறுகளில் கொண்டு வந்து சேர்த்திருக்கலாம் என்றும் விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் பசளையையும் மழைநீர் சிற்றாறுகளில் கொட்டியிருக்கலாம் என்றும் 'மெதுஸ்' (méduses) ஆய்வாளர் திருமதி Jaqueline GOY கணிப்பிடுகின்றார். தாவரவளர்ச்சிக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில், தாவர, விலங்குக் காட்சியகம் உள்ளது. அங்கு 'மெதுஸ்'க்கான உணவு பெருமளவில் கிடைக்கின்றது. சந்தேக மற விவசாயம் தவிர்ந்த, மனிதனின் வேறொரு தொழிலும் இந்த இனப் பெருக்கத்துக்கு பிரதான பங்கு வகிக்கின்றது. பெரிய அளவில் மீன் பிடிப்பவர்கள், பெருந்தொகை மீன்களை கழித்து விடுவது, இதுபோன்ற கடல் வாழ் வேட்டையாடும் உயிரினங்களுக்கு உணவாகின்றது குறிப்பாக மிகப் பயங்கரமான இந்த 'méduses' இனத்துக்கு என்கிறார் திருமதி Jaqueline GOY. அதிக எண்ணிக்கை கொண்ட இவை, மீன்முட்டைகளையும் மீன் குஞ்சுகளையும் சாப்பிட்டுவிடுவதால் சமநிலையற்ற தன்மையை மேலும் ஆழப்படுத்துகின்றது.

யப்பானுக்குத் தொலைவில், வடக்குக் கடலில் இந்த நிகழ்வு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. செங்கடலிலும், அதிகமாக பால்ரிக் கடலிலும் கருங்கடலிலும் மீனவர்கள் தங்கள் கடைசி கொய் அல்லது நெத்தலி மீன் கூட்டத்தை தொலைத்துவிடுவதுடன் மெதுஸ் கூழாகவே மாறிவிடுகின்றது. திருமதி Jaqueline GOY இன் கூற்றுப்படி கிட்டத்தட்ட மூடிய நிலையில் உள்ள இரண்டு கடல்களும், கரையிலுள்ள சூடுபிறப்பாக்கி நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் கொதிநீரால் தொடர்ந்து சூடாகவே இருக்கின்றது. குளிர்காலத்தில் காலநிலை அதி கூடியதாக இருக்கின்றது. இதனால் கடலின் இயற்கைநிலை பாதிப்படைகின்றது. இதன் காரணமாக மெதுஸால் தாம் இனப்பெருக்கம் செய்யும் காலம் எதுவென்று அறியமுடியவில்லை. ஆகவே அவை ஆண்டு முழுவதும் இனப்பெருக்கம் செய்து கொண்டேயிருக்கின்றன.

காரணம் எதுவாக இருந்தாலும், உலகில், தமது வலைக்குள் மாட்டிக்கொள்ளும் எண்ணிலடங்கா 'மெதுஸ்கள்' பற்றி குறைப்பட்டுக் கொள்ளும் மீனவர்களின் எண்ணிக்கை மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டே இருக்கின்றது.

இது யப்பான் கடலில் காணப்படும் இந்த இராட்சத இனம் பற்றிய ஒரு சிறு குறிப்பீடே இதைவிட, மிகப்பிரமிக்கக் கூடிய அளவிலானவை சமுத்திரத்தின் அடியிலுள்ளது. "கடலுக்கடியில் இருபதாயிரம் மைல்" (vingt mille lieues* sous les mers) என்ற நூலில் Jules Verne இன் தீர்க்க தரிசனப் பார்வைப்படி, மீன்களும், கடல் வாழ் பாலூட்டிகளும் இல்லாத 'மெதுஸ்' மட்டுமே நிறைந்த சமுத்திரம் உருப்பெறும் அபாயம் நிலவுகின்றது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நினைவு நிகழ்வுகள் - நியூசிலாந்து





மாவீரர் நாள் - 2005












சுனாமி ஆழிப்பேரலை ஓராண்டு நினைவு நிகழ்வும்,
மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம் அவர்களின் நினைவுக்கூட்டமும்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலை பண்பாட்டு அரசியல் சமூக சஞ்சிகை



# எரிமலை ERIMALAI

ஆக்கங்கள் அபிப்பிராயங்கள் மற்றும் தொடர்புகட்கு


■ Tel: 01 - 43 58 11 42 ■ Fax: (33) 1 43 58 11 91 ■ e.mail: info@erimalai.info

■ ERIMALAI, C/O T.C.C France, 341, Rue Des Pyrenees, 75020 Paris, FRANCE.


www.erimalai.info

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





போர் நினைவுச் சிற்பம்
கிளிநொச்சி

எரிமலை

ஒளிப்படங்கள்: தி.தவபாலன்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்